வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

# SUTANTIRAN




194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 மார்கழி திங்கள் 7-ம் நாள் (22—12—1963) ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் 5 | இதழ் 30

# ஜன. 1ல் கரி நாள்

## 5 இடங்களில் எதிர்ப்பு இயக்கம்

### தமிழரசுத் தந்தையின் வேண்டுகோள்

சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு வரும் 1-1-1964 தமிழ் பேசும் மக்களுக்கு துக்க தினமாகும். தமிழ் பேசும் மக்கள் வதியும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள நகரங்கள், பட்டி தொட்டிகள், வாகனங்கள் அனைத்தையும் கறுப்புக் கொடிகள் அலங்கரிக்கட்டும். அதே தினத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா ஆகிய நகரங்களில் மாபெரும் ஆர்ப்பாட்ட இயக்கங்கள் நடைபெறும். திட்டமிட்ட எதிர்ப்பு இயக்கங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த நாள் முதல் தொடர்ந்து நடைபெறும். எதிர்ப்பு இயக்கங்கள் வெற்றி பெற ஆயிரக்கணக்காகத் தொண்டர்கள் சேர வேண்டும்.

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் தமிழரசுக் கட்சி நேரடி நடவடிக்கைக் குழுவின் சார்பில் விடுத்துள்ள வேண்டுகோளில் கூறியுள்ளார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அழகு தமிழ்ப் பிரதேசமாக விளங்கி வந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அதிகார ஆசை கொண்ட அரசு அடுத்த ஆண்டு முதல் சிங்களத்தைத் திணிக்கிறது. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி உறவாடிய இன்ப பூமியிலேயே எம் இனத்தை அழிக்கும் சதித்திட்டத்தின் இறுதிக் கட்டத்தை ஆரம்பமாக்கிறது. அடிமைப்படுத்தி விட்டோம் என்று வெற்றிக் கீதம் இசைத்து வீரப் பண் பாடவும் முனைந்துள்ளனர் ஆளவந்தார்.

தாங்கள் நினைத்தபடியே தமிழ் பேசும் இனத்தை அடிமைகளாக்கி விட என்னென்ன வழி வகைகளை நாடலாமோ, அவை அனைத்தையும் செயற்படுத்திவிட்டனர். ராணுவத்தையும், அடக்குமுறைச் சட்டத்தையும் துணை கொண்டு இன ஒழிப்புக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு விட்டனர்.

1—1—64 முதல் நமது வாசற்படிகளிலேயே கோர உரு கொண்டுஏறிவிடுகிறது சிங்களம். இக் கொடிய நாள் தமிழ் பேசும்

(9-ம் பக்கம் பார்க்க)

### ஆசிரிய இடமாற்றம்

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், கல்வி அமைச்சருக்கு டிசம்பர் 6ம் திகதி அனுப்பிய தந்தி ஒன்று பற்றி ஆசிரியர்கள் சிலர்விஷமத்தனமான வதந்திகளைப் பரப்பி வருவதாக அறியக் கிடக்கிறது. தந்தை அவர்களின் தந்தி பற்றிய விபரமும், அதோடு தொடர்பான விபரங்களும் அடுத்தவாரம் இடம் பெறும்.

## 'புரட்சிக்குழு' மீது நடவடிக்கை?


புரட்சி மூலம் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று பல இடது சாரிக் கட்சியினர் வெளிப்படையாகக் கூறிவருகின்றனர். ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் முறையை அவர்கள் எதிர்த்து வருகின்றனர்.

இப்படிக் கூறுவது தேசத் துரோகமாகாதா? அப்படியானல் இவர்கள் மேல் இதுவரை ஏன் எதுவிதமான நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்க முற்படவில்லை?

இவ்வாது ஆளும் கட்சி எம். பிக்கள் பலர் சுதந்திரக் கட்சிக் குழுக் கூட்டங்களில் பிரஸ்தாபித்து வருவதாகத் தெரிகிறது. இதையிட்டு சட்ட நுணுக்கங்களும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் செய்தி கிடைத்துள்ளது.

### ஒரே மாதிரி விளக்கம்

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுத அரசாங்க எழுதுவினைஞர்களிடம் அரசு விளக்கம் கோரியுள்ளது. கடந்த வாரம் விளக்கம் கொடுக்கும் முறையினைத் தெளிவாகக் கூறியிருந்தோம். முன்பு எடுக்கப்பட்ட தீர்மானத்தையொட்டி சகல எழுதுவினைஞர்களும் ஒரே மாதிரியான விளக்கத்தையே தெரிவிக்க வேண்டும், என்று அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. வே. கனகசபை முதலி கேட்டுக்கொண்டுள்ளார்.



சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு வருவதால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிபற்றியும், தமிழ் பேசும் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும், பொது மக்களுக்கு எடுத்து விளக்கும் முகமாக மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுக் கூடடத்திற்கு தலைமை தாங்கிய மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை தலைமை உரை நிகழ்த்துவதையும், கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் உரை நிகழ்த்துவதையும், அறப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ வி. அரியநாயகம், மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காண்க.

படம்: இதயம்

"மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலன்டர் No. 1 (சிகப்பு) | 1-85 |
| நன்மொழிக் கலன்டர் No. 2 | 1-05 |
| மாதக் கலன்டர் (பஞ்சாங்கக் கலன்டர்) | -65 |
| சிங்கள கலன்டர் (No. 1 கலன்டர் அளவுள்ளது) | 1-75 |
| ரேபிள் கலன்டர் (பிளாஸ்ரிக் ஸ்ரான்டுடன்) | 4-75 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-10 |
| No. 1. பிளாஸ்ரிக் தமிழ் டயறி(பிளாஸ்ரிக் கவருடன்) | 2-25 |
| No. 2. பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ” | 1-75 |
| No. 3. பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ” | 2-95 |
| No. 4. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ” | 1-75 |
| No. 5. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ” | 1-40 |
| No. 6. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம்நாள்) | 3-10 |
| No. 7. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம்நாள்) | 2-60 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்றிக் கவர்) | 2-95 |
| பிளாஸ்றிக் சிங்கள டயறி ” | 1-75 |
| பேர்ஸ் சிங்கள டயறி | 2-60 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 4-50 |
| No. 1. பேர்ஸ் தமிழ் டயறி(பேர்ஸ் சகிதம்-With Purse) | 3-10 |
| No. 2. பேர்ஸ் திருக்குறள் டயறி ” | 2-60 |
| No. 4. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ” | 2-60 |
| No. 5. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ” | 2-10 |
| No. 6. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-35 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 4-50 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 5-50 |
| ஜெம் டயறி (Gem Diary) | 1-35 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-05 |

இன்னும் பல உண்டு.

மற்றும் விபரங்களுக்கு

மெய்கண்டான் அச்சியந்திரசாலை

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

போன் : 79141

கிளை:

10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(போன் : 236)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத் திருப்பாவையும் தேனொழுகும் வாசகமும்

மணிவாசகரும் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியும் படைத்தவற்றில் இரண்டே துளிகள்.

திருவெம்பாவைப் பூசை ஆரம்பத்தை யொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.

## ஆத்மீகத் துறையிலே அகப் பொருளிலக்கியம்

சங்க காலத்திலே எழுந்த அகத்துறை; புறத்துறை இலக்கிய மரபுகள் காலத்துக்குக்காலம் புதுமைகள் சிலவற்றைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு இன்றுவரை வளர்ந்து வந்துள்ளதை நாம் காண்கிறோம். பல்லவ காலத்திலே இந்த இலக்கியத் துறைகளை நாயன்மார்களும் ஆழ்வார்மார்களும் தமது பக்திப் பாடல்களால் வளர்த்து வந்தனர். கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர், தாம் இறைவன்பாற் பெற்ற பேரின்பக் காதலை, தலைவன் தலைவி என்னும் இருவருக்கு மிடையேயுள்ள உலகியற் காதலோடு இணைத்துக் காட்டுவதில் ஒப்புயர்வற்று விளங்கினர். திருச்சிற்றம்பலக் கோவையார் போன்ற அவரது இலக்கியங்கள் அகத்துக்கு ஒப்புவமையற்ற ஆக்கங்களாகும். மார்கழி நோன்பினைப் பொருளாகக் கொண்டு "அண்ணுமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சுவதிலே ஈடுபட்ட மகளிர் பாடுவதாக, மணிவாசகப் பெருமான் பாடிய திருவெம்பாவைப் பாடல்கள் இந்த இலக்கியத் துறைக்கு மகுடம் போன்று இலங்குகின்றன. அந்த முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளிடத்தே ஏற்பட்ட கரையற்ற காதல் அனுபவத்தைத் தேன்சொட்டும் செந்தமிழால் அவர் அள்ளிப் யள்ளிப் படைத்துள்ளார்.

"அடி பெண்ணே! ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியை யாம் பாடுகிறோம். அதைக் கேட்டும் உனது வாட்டடங்கண்கள் துயில்கின்றனவா?" என அந்த இளம்பாவையர்களைக் கேட்பதோடு ஆரம்பமாகும் திருவெம்பாவைப் பாடல்கள், மணிவாசகப் பெருமான் அம்பலக் கூத்தன் மீது கொண்ட அருட்பெருங் காதற் திறத்தை நாயகி பாகத்தில் அமைத்துப்பாடும் வளத்தைத் தெள்ளிதில் காட்டுகின்றன. மார்கழி நோன்பு நோக்கும் அந்தக் கன்னிப் பெண்களோடு தானும் ஒரு பெண்ணுக; அல்லது அந்தப் பெண்கள் எல்லோருமே தானுகக் கொண்டே திருவெம்பாவை அனைத்தையும் பரவச நிலை

**மாலதி**

யிலே அவர் பாடியிருத்தல் வேண்டும். திருவெம்பாவைப் பாடல்களை இவரது காலத்திலிருந்தே அடியார்கள் பெரிதும் போற்றிப் பாடி வந்திருக்கிறர்கள் என அறிகிறோம். காதார் குழையாட, பைம்பூண் கலனுட, கோதை குழலாட, வண்டின் குழாமாட, சீதப்புனலாடும் சிற்றிடைப் பாவையர் எல்லோருமே திருவெம்பாவை பாடித்தான் திருச்சிற்றம்பலத்தானைப் போற்றி வந்துள்ளதைக் காண்கிறோம்.

### சூடிக் கொடுத்த சுடர்க் கொடி

மார்கழித் திங்கள், மதி நிறைந்த நன்நாளால் நீராடப் போதுவீர்; போதுமினே நேரிழையீர்! எனப் பிற்காலத்து ஆண்டாள், கண்ணன் மீது வைத்த கரை கடந்த காதலால் மங்கையரைக் கூவியழைக்கக் காலாயிருந்தது மணிவாசகப் பெருந்தகையின் திருவெம்பாவையே என்பதை இலக்கிய ஈடுபாடுடைய எவரும் ஒப்புவர்.

பெரியாழ்வாருக்கு மகளாய்ப் பிறந்தவர் கோதையார். சின்னஞ்சிறு சிறுமியாயிருக்கும்போதே கண்ணனிடத்து அன்புகொண்டு மலர் கொய்தல், மாலை தொடுத்தல் ஆகிய திருத்தொண்டுகளைத் தந்தையாரோடு செய்து வந்தவர். கண்ணனிடத்து அவர் கொண்ட காதல் முதிர முதிர, அவரையே மணாளனுயடைய ஆசை மீதூரப் பெற்றவராய் கண்ணன் விரும்புதற்கரிய மேனியழகு தமக்குண்டா என அறியமுற்பட்டார். இளம் வனப்புமிக்க தமது அங்கங்களை அடிக்கடி கண்ணடியிற் பார்ப்பது, தன்னை அலங்கரித்துக் கண்டு களிப்பதுவே அவருக்குவேலையாயின. பெரியாழ்வார் திருமாலுக்குக் கட்டிவைத்த மாலைகளைத் தாமே அணிந்து கொண்டபோதுதான், கண்ணனுக்கேற்ற காதலி பாகும் அழகு தமக்குண்டாவது போன்ற உணர்வு அவருக்கு உதித்தது. இவ்வாறு அம்மையார் சூடிய பூமாலைகளே, கண்ணனுக்குச் சாத்தப்பட்டடன. இதனுல் அவர் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என அழைக்கப்பட்டார்.

> சூடிக்கொடுத்த
> சுடர்க்கொடியே!
> தொல்பாவை
> பாடியருளவல்ல
> பல்வளையாய்!—
> நாடி நீ
> வேங்கடவற்கு என்னைவிதி
> யென்ன இம்மாற்றம்
> நாம்கடவா வண்ணமே
> நல்கு"
>
> —'உய்யக்கொண்டார்'

இறைவனிடத்துக் கொண்ட ஆருத காதலை, நாயகி பாகத்தில் அமைத்து அகத்துறை இலக்கியம் படைத்த அடியார்கள் பலருளர். ஆயினும் பெண்ணுகப் பிறந்து தம்மை நேராகவே இறைவனுக்கு நாயகியாகப் பாவித்துப் பாடிய ஒரேயொரு பெண் ஆண்டாள்தான். கண்ணன்மீது அவர் கொண்ட காதல் சொல்லும் திறத்தன்று. அவரது பாடல்கள் உள்ளத்தை நெக்குருகச் செய்வன. மகளிரையன்றி ஆண்பாலினரையே பெண்மையுணர்வின் காதல் திறத்தை உணரச் செய்யவல்லன.

'தந்தை; தாய்; உற்ருர் எல்லோருமிருக்க இவள் தனி வழி சென்று விட்டாள்'—இந்தப் பழிச்சொல் எப்படியோ ஏற்பட்டு விட்டது. அதனை இனிக் காப்பது அரிது. ஏன் தெரியுமா? அந்த மாயவன் அடிக்கடி வந்து தனது அழகுருவை என்பால் காட்டுகின்ருன். அது மாத்திரமல்ல எனது உள்ளத்தைப் பொங்கச் செய்கிருன். என்னைக் கேலி பேசிக் குறும்பு செய்கிருன். அதனுல், யாருக்கும் தெரியாமல் இந்த இருளிலேயே நந்த கோபாலனது வீட்டு வாசலிலே என்னைக் கொண்டு விட்டு விடுங்கள்' எனக் கோதையார் கூறும்போது அவரது ஆருத காதலின் ஆழம் நம்மையே உருக்குகிறது. அந்தக் காதலுணர்வின் பிறந்த வார்த்தைகள் உள்ளத்தைத் தூய்மை செய்து கனியவைக்கின்றன.

இவர் மணிவாசகரது திருவெம்பாவையிலே கொண்டிருந்த ஈடுபாடு இவரது திருப்பாவையிலே பிரதிபலிக்கக் காண்கிறோம். திருவெண்பாவையும் திருப்பாவையும் பண்டைத் தமிழ் நாட்டுப் பெண்குலத்தின் மார்கழி நோன்பை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவையாகும்.

### உனக்கே அடைக்கலம்

பொங்கும் மடுவிற் புகப் பாய்ந்து ஆடுகின்ற மங்கையரின் வாயிலாக மணிவாசகர் தந்த ஒரே யொரு மணியை நோக்குவோம்.

"உனது கையிலே இருக்கின்ற குழந்தை உனக்கே அடைக்கலமானது. இது நீயறிந்த பழைய வார்த்தை. ஆனுல் நாங்கள் அதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம். அது எமது நெஞ்சத்தின் ஆற்ருமை. இந்தப் பழஞ் சொல்லை நாம் திருப்பித் திருப்பி சொல்லுவதால் ஒருவேளை நீ கோபித்து விடுவாயோ என அஞ்சியபடியே நிற்கிறோம். எங்கள் பெருமானே! உன்பால் ஒன்று உரைக்கிறோம்; கேள்; எமது கொங்கைகள் நினக்கு அன்பர் அல்லார் தாருடைய தோள்களைச் சேராதொழியட்டும். எமது கைகள் உமக்கு அல்லாத எப்பணியையும் செய்யா தொழியட்

(13-ம் பக்கம் பார்க்க)


## சில விசேஷ மருந்துகள்

**பாலபந்து** (விளக்கெண்ணெய்) குழந்தைகளுக்குண்டாகும் கரப்பான், சொறி சிரங்குகள், மாந்தம், கணை, பூச்சிக் கோளாறுகள், கக்குவான் இருமல், இளைப்பு, இருமல், நெஞ்சு கிறுகிறுப்பு, மலச்சிக்கல், விதை வீக்கம் முதலிய எல்லா பால ரோகங்களுக்கும் சிறந்தது. ஒரு மாதக் குழந்தையிலிருந்து, 12 வயது வரைக்கும் கொடுக்கலாம்.

அளவு : 1 சொட்டு முதல் 10-15-20 சொட்டுவரை

விலை : ½ அவுன்ஸ் சீசா ரூ. 2-25

**S. N. குரு தைலம்** இம் மருந்தின் குணங்கள் எவருக்கும் தெரியும்படி பிரசித்தமானது. அனேக வருத்தங்களுக்கும், வலிகளுக்கும், உள்ளுக்கும் வெளிக்கும் பாவிக்கத் தகுந்தது.

விலை : டப்பா 1 ரூ. 2-00

**விரேசன மாத்திரை** விரேசனத்திற்கு விசேஷமான மருந்து. காலையில் 1—2 மாத்திரை சாப்பிட்டு தண்ணீர் குடித்தால் பேதியாகும்; வெந்நீர் குடித்தால் நின்றுவிடும். விரேசனத்திற்கு இவ்வளவு நல்ல மருந்து வேறு கிடையாது.

விலை : 25 மாத்திரை ரூ. 3-00

**பிரஹத் ஜாத்யாதிகிருதம்** (வெளிப் பிரயோகத் திற்கு மட்டும்) வெட்டுக்காயம், குழிப் புண்கள், சொறி சிரங்குகள், இரத்த வாதப் புண்கள், (எக்ஸிமா) கரப்பான், மர்மங்களிலுண்டாகும் புண்கள், முதலிய நாள் பட்டதும் புதியதுமான எல்லா விதப் புண்களுடைய, வலியும், சீழ்வடிவதும், வீக்கமும், விரைவில் நிறுத்தி காயச் செய்கிறது. இம் மருந்தால் ஆருத புண்கள் கிடையாது.

விலை : 1 அவுன்ஸ் 2-25

**எஸ். என். குரு மெடிக்கல் ஹால்,**

80, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13.


## கவிதைப் பூங்கா

### எம் யேசு பிறந்தாரே ஐய!

—ஜெயம்—

மாபாலன் பூமி பிறந்தார்
ஆபாலர் அவர்பாதம விரைந்தார்
தேவாதி தூதரும் நல்ல
"சமாதானமும்" சொல்ல!

மாவோடு பலாநல் வாழை
பாலோடு மலர்தேனும் கொண்டு
பாவாடு தமிழிசை யோடு
பரன்புகழ் பாடுவோம் நீடு!

மண்மீது பாவங்கள் போக்க
மனிதரை நல்லோராய் ஆக்க
மன்னுதி மன்னராய்ப் பிறந்தார்
மாதாவின் மடிமீது சிறந்தார்!

மண்மீது; நின்ருடும் பயிர்கள்
மடிமீது கொண்டாடும் உயிர்கள்
பண்ணேடு இசைபாடி மகிழ
பாவலர் நாவாலே புகழ!

கள்ளோடு உறவாடும் பலரை
கனிவோ்டு விளையாடும் சிலரை
எல்லோரும் இவ்வாழ்வில் உய்ய
எம்யேசு பிறந்தாரே ஐய!

### உன் நினைவால் வாழ்வேன்

—சி. கனகசூரியம்—

நில்லாத காலம் நெருப்பாகி என்மெய்யிற்
பொல்லாத நோய்கள் பொழிந்தாலும்—எல்லோரும்
என்னை வெறுப்பால் இகழ்ந்தாலும் என்தமிழே
உன்நினைவால் வாழ்வேன் உயிர்.

தோழன் வறுமை துணையென்றும் இன்றேபோல்
வாழ விடாது வதைத்தாலும்—ஆழேன்நான்
துன்பத்தில் என்றும்; துயர்நீக்கும் தோழியெனும்
உன்நினைவால் வாழ்வேன் உயிர்.

'மண்வாழ்க்கை மாயை மனிதர்க் கிதேஇங்கோர்
புண்'ணென்று 'ஞானம்' புகல்கின்ற—விண்ணுசை
தன்னை விரும்பும் தவத்தோர் மொழிகேட்கா(து)
உன்நினைவால் வாழ்வேன் உயிர்.

உன்றன் மரபில் உதித்தும் உனைமறந்தே
இன்றெம் மிடையே இருக்கின்ற—தொன்றுபுகழ்
தன்னை அழிப்போர் தனைக்கண்டும் சாகாது
உன்நினைவால் வாழ்வேன் உயிர்.

'போதும் இகவாழ்க்கை போவோம்வா' என்றென்னைச்
சாதல் உடன்வந்து சார்ந்தாலும்—ஆதரித்தே
இன்னல் களையும்சா இன்பத்தைக் கூடமறந்(து)
உன்நினைவால் வாழ்வேன் உயிர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: குருஷேவ் இன்னும் எத்தனை நாட்களுக்குப் பதவியில் இருப்பார்?

ப: எந்த நிமிடத்திலும் குருஷேவ் பதவியிலிருந்து துரத்தப்படுவார் என்று சீனப் பிரதமர் தமது சகாக்களிடம் கூறியதாக ஒரு செய்தியை ஹொங்கொங் பத்திரிகையொன்று பிரசுரித்துள்ளது.

கே: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர் வருமா?

ப: என்றாவது ஒருநாள் பாகிஸ்தான் மீது இந்தியா படையெடுக்குமெனத் தாங்கள் உண்மையாகவே நம்புவதாகப் பாகிஸ்தான் ஜனாதிபதி கொழும்பில் கூறினார்.

கே: நம் நாட்டை இரு புறமும் தாக்கினால் நாம் என்ன செய்வது?

ப: திறந்து கிடக்கும் மற்ற இரு புறத்தால் வெற்றிகரமாக வாபஸாவது!

கே: திராவிட யூனியன் என்பது என்ன?

ப: தமிழ் நாடு, ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய நான்கு யூனிட்டுகளும் இணைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சியே திராவிட யூனியன்.

கே: அறிஞர் அண்ணா தற்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: தி. மு. க. வின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் திட்டப்படி முன்னேறுவதையும், அதற்குத் திரளும் மக்களின் ஆதரவையும், ஆட்சியாளர் கையாளும் அடக்கு முறையையும், காங்கிரஸ் தலைமையின் பிரசார வித்தைகளையும் அலசி ஆராய்ந்து அடுத்த நடவடிக்கைக்குத் திட்டம் தீட்டுகிறாராம், சிறையினுள் அமைதியாக அமர்ந்து.

கே: திருமதி பண்டாரநாயகா வெளி நாடுகளுக்குப் போய் வந்தாரே, அதன் பலன் என்ன?

ப: பலன் சங்கடத்தில் மாட்டிக் கொண்டதுதான். வெளிநாடு சென்றதில் நாஸருடன் சேர்ந்து "நடுநிலைமை மாநாடு வேண்டும்" என்று கூட்டறிக்கை விட வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கை திரும்பிய பின்னர் அயூப்கானுடன் சேர்ந்து (நடுநிலைமை மாநாட்டுக்குப் போட்டியாக) "ஆசிய-ஆபிரிக்க மாநாடு வேண்டும்" என்று கூட்டறிக்கை விட வேண்டிய நிலை ஏற்பட்டது. பாவம் பிரதமர்!

கே: "கல்கண்டு" ஆசிரியர் தமிழ் வாணனைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அபிப்பிராயம் கூறப்படும் அளவுக்கு அவரிடம் என்ன இருக்கிறது?

கே: சீனு அணுகுண்டு செய்யத் தொடங்கிவிட்டால், ரஷ்யாவையும் அது மிஞ்சிவிடும் என்கிறார்களே?

ப: அது இங்குள்ள சீன ஆதரவாளர்களின் பிரசாரக் குண்டு!

ஃ

அ. நவநீதராசா, காங்கேசன்துறை.

கே: தற்கால யுவதிகளின் கூந்தல் மார்பிலே புரளுவதேன்?

ப: தற்கால வாலிபர்களின் கழுகுப் பார்வையைக் கூந்தல் மீது பாய்ச்சிவிட்டால், மார்பகம் தப்பிவிடுமல்லவா! அதற்காகத்தான்.

ஃ

க. ஐயாகண்ணு, கொழும்பு-1

கே: மலை நாட்டுத் தமிழ் மக்கள் இப்போது, திரு. தொண்டமான் கூறும் அடிப்படை சம்பள உயர்வு கோரிக்கைக்குப் போராடுவதா, திரு. அசீஸ் கேட்கும் விசேட பஞ்சப்படி ரூ. 17:50க்குப் போராடுவதா அல்லது திரு. செல்வநாயகம் சொற்படி கேட்டு உரிமைகளைப் பெறப் போராடுவதா? இதில் போராட்டம் எது? மாறுட்டம் எது?

ப: தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பள உயர்வும் வேண்டும், பஞ்சப்படியும் வேண்டும், அந்தப் போராட்டங்கள் நடந்தால், தொழிலாளர்கள் நிச்சயம் அதில் கலந்து கொள்ள வேண்டியதே. ஆனால் அப்போராட்டங்கள் நடக்குமென்று எதிர்பார்த்து ஏமாந்து போகாதீர்கள். உரிமைகளைப் பெறுவதில்தான் தோட்ட மக்களின் வாழ்வு தங்கியுள்ளது அதற்குத்தான் வழிகாட்டுகிறார் தமிழரசுத் தந்தை.

ஃ

சற்குணானந்தன், யாழ்ப்பாணம்.

கே: நான் அதிகம் சினிமாப் படம் பார்க்கிறேன் இதைக் குறைப்பதற்கு யாது வழி?

ப: சினிமாப் படம் உங்களுக்கு ஒரு பொழுதுபோக்கு. உங்கள் வயதுக்கும் சுற்றுச் சார்புக்குமேற்ப வேறு பொழுதுபோக்கு அம்சங்களைத் தேடிக் கொள்ளுங்கள். அதாவது: படம் பார்க்க உங்களுக்கு நேரமில்லாதிருக்கட்டும்.

ஏ. சுப்பிரமணியம், பலாங்கொடை

கே: இலங்கையில் எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. எந்தக் கட்சியில் சேர்ந்தால் உரிமை பெறலாம்?

ப: 'உரிமைக்காகப் போராடுவோம்' என்று கூறும் கட்சியில் சேர்ந்து விடாதீர்கள். உரிமைக்காகப் போராடும் கட்சியில் சேருங்கள்.

கே: மணமானவர்கள் கூட பெண்களைக் கண்டால் மயங்குகிறார்களே, இது நியாயமா?

ப: பழத்தைச் சுவைத்தவனுக்கே பழத்தின் ருசி தெரியும்.

ஃ

அன்பழகன், ஏறாவூர்.

கே: இளைஞர்கள் திருமணம் புரிய ஆசைப்படுகின்றார்கள். ஆனால் திருமணமானவர்கள் அதை வெறுக்கின்றார்கள். காரணமென்ன?

ப: வெளியேயுள்ள கிளி, கூண்டுக்குள் நுழைய ஆசைப்படுகிறது. கூண்டுக்குள் இருக்கும் கிளியோ கூண்டின் வாழ்வை வெறுத்து வெளியேற விரும்புகிறது. இதுதானையா உலகம்!

ஃ

புஷ்பா, வடலியடைப்பு.

கே: நானும் உங்களைப் போல் கேள்விக்குப் பதிலளிக்க விரும்புகிறேன். உங்கள் பதவியை எனக்குத் தருவீர்களா?

ப: உங்கள் நண்பிகளின் சரமாரியான கேள்விகளுக்குப் பதிலளித்தாலே உங்களுக்குப் போதுமே!

ஃ

க. இராசநாயகம், மட்டக்களப்பு.

கே: திருமணம் முடிந்த பின் மறு நாட்காலையில் தம்பதிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ஏன் வெட்கப்படுகின்றார்கள்?

ப: முன்னைய அனுபவம் இல்லாததால்.

ஃ

கபிரியேல் இளையதம்பி, மட்டுநகர்.

கே: எந்நேரமும் சிரித்துக் கொண்டிருப்பதால் நன்மையா அல்லது தீமையா?

ப: நன்மையே! ஆனால் வெறுமனே பல்லைக் காட்டுவதில் பயனில்லை. குலுங்கக் குலுங்கச்சிரிக்க வேண்டும்.

ஃ

க. பரமநாதன், மருதானை.

கே: அரசியற் சார்பற்ற ஓர் இயக்கத்தை உண்டாக்கி, தமிழ் பேசும் மக்களின் மானத்தைக் காப்பாற்ற முடியுமா?

ப: முடியாது. சிறுபான்மையோரின் மானத்தைப் பறித்தல் ஓர் அரசியல் நடவடிக்கையாகிவிட்டது. எனவே, மானத்தைக் காப்பதும் அரசியல் நடவடிக்கையே! அதற்கு அரசியற் கட்சியே வேண்டும்.

ஃ

க. இராமகிருஷ்ணன், பம்பலப்பிட்டி.

கே: பெண்கள் ஆண்களிடம் அழகைவிட அந்தஸ்தையே கூடுதலாக விரும்புவது எதற்காக?

ப: அந்த அந்தஸ்தின் உதவியால் தங்களுக்கு ஓர் அந்தஸ்தைத் தேடிக் கொள்ளலாமல்லவா? அழகில் அப்படி முடியாதே!

ஃ

க. இராசநாயகம், மட்டக்களப்பு.

கே: நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தராகத் திகழ்ந்தால் எத்தனை வருடம் சென்றாலும் என்னிடமே சரணடைவதாகவும், அரசாங்க உத்தியோகத்தராகத் திகழாவிட்டால் கடைசி வரைக்கும் தங்கையாக நினைக்கும்படியும் என் காதலி கூறுகிறாள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: "கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்துக் கோழியை மேய்க்க வேண்டுமென்று கூறுகிறாளோ?" விட்டுத் தள்ளுங்கள் அவளது உத்தியோகக் காதலை!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

# வெற்றிப் பவனி வா மகனே!

—"ஆரையூர்—அமரன்"—

விழித்தெழு மகனே—விழித்தெழு—மொழி
    வெறியரை வீழ்த்த—விழித்தெழு
விழித்தெழு மகனே—விழித்தெழு—வெகு
    விரைவாய் நீயும் விழித்தெழு
(விழித்தெழு)

தமிழன் திறமை தனையறியார்—போடும்
    தடைகள் யாவும் தகர்ந்திடவே
தலைமகன் உன்னை நானீந்தேன்—உன்
    தாயின் கனவை நனவாக்க
(விழித்தெழு)

உன்னைச் சுமந்த உதரத்தை—ஒடி
    உறுமும் புலியின் குகையென்றே
ஊரார் புகழும் வார்த்தையினை—நான்
    உவந்து பரிசாய் பெறுவதற்கே
(விழித்தெழு)

ஆட்சிக் குழுவின் சூழ்ச்சியினால்—நாம்
    அடிமைக் குழுவாய் நாட்டினிலே
ஆக்கப்படுவதைப் போக்கிடவே—உன்
    தூக்கம் நீக்கித் துள்ளியெழு
(விழித்தெழு)

மிருகச் செயலை மிஞ்சியவர்—நம்
    மிடற்றில் கையை வைக்கையிலே
தருமத் தாய்தான் வாள்தருவாள்—குறி
    தவறுதவறைப் பலியாக்க
(விழித்தெழு)

தருணம் வந்து வாய்த்ததடா—புகழ்
    தானே கதவைத் தட்டுதடா
தலைதான் இழக்க நேர்ந்தாலும்—நீ
    தமிழுக் கிழப்பாய் என்மகனே
(விழித்தெழு)

பைந்தமிழ் பகைவர் தனைஅணுகி—வீரம்
    படைவலி காட்ட எழுமகனே
பரணிப் பாடல் இசைகேட்கும்—என்
    பலநாள் ஆசை நிறைவேற்ற
(விழித்தெழு)

வீரத்தாயின் குரல் கேட்டே—நீயும்
    வீணரை விரட்டச் செல்மகனே
வெற்றிப் பெண்ணை நீமணந்து—வீதி
    சுற்றிப் பவனி வாமகனே.
(விழித்தெழு)

## அன்பார்ந்த நேயர்களே!

உங்கள் பலநாள் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக 'மாயஜோதி' ஊதுபத்தியை உற்பத்தி செய்துள்ளோம். ஆகையால் தமிழ் மக்களே உங்கள் தேவைகளுக்கு 'மாயஜோதி' ஊதுபத்தியையே வாங்கிப் பாவியுங்கள்.

உற்பத்தியாளர்கள்:- இங்ஙனம்,
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3 வாட்பிளேஸ், கொழும்பு—7.




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட
ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்
இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது
'ரோஸ்' பிராண்ட்
என்றே கேட்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டூழியம் புரியும் பட்டாளத்தாருக்கு சட்டத்தின் பாதுகாப்பு

## பெண்ணின் ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை

**அடக்குமுறை! அட்டூழியம்! யுத்தக்கைதிகளை விட மோசமாக இந் நாட்டின் ஒரு குறிப்பிட்ட இன மக்களை அடைத்து வைத்து இம்சிக்க ஏதுவாக அமைந்துள்ளது சட்டம். தமிழ் பேசும் இனத்தின் பெண்களுக்கும் போதுமான பாதுகாப்பளிக்க முடியவில்லை ஒரு பெண்ணின் அரசாங்கத்தில்.**

அற நெறியை மட்டும் போதித்து ஒரு நாட்டில் அமைதியை நிலைநாட்டிவிட முடியாது. சட்டம் அவசியம் தான். அநீதி எது, அட்டூழியம் யாது, எ பதை வரையறுத்து அவற்றுக்கான தண்டனையையும் காட்டி நிற்பது நாட்டின் சட்டங்கள்தான். களவின் நினைவோ கொலைக் குற்றத்தின் எண்ணமோ மனித நெஞ்சில் எழுவதுண்டு. ஆனால் சட்டத்தின் நினைவும் அது தரவல்ல தண்டனையையும் அடுத்த கணம் அதே நெஞ்சத்தில் எழும்போது எண்ணங்கள் தடைப்படுகின்றன. அவை செயலாக மாறுவது குறைகிறது. அமைதி ஓரளவேனும் நிலவுகிறது.

இவ்விதம் தீங்கினைத் தடுத்து பொது மக்கட்குப் பாதுகாப்பளித்து நிற்பது நாட்டின் சட்டங்களே தான்.

சட்டம் தளரின்......? அல்லது அட்டூழியங்களை அது அனுமதிக்கின், நாட்டின் நிலை எதுவாகும்......?

அந்த நிலையைத்தான் ஈழத்தின் தமிழ் பேசும் மக்கள் வதியும் பகுதிகளிலே இன்று நாம் காண்கிறோம்.

அடக்குமுறை! — அதை நிலைநாட்ட அட்டூழியம்! — ஆகிய இரண்டும் இன்று தமிழ்ப் பகுதிகளில் தலைவிரித்தாடுகின்றன! இவற்றுக்குத் தூபம் போட்டு நற்கிறது சட்டம்!! இங்கு நடப்பவற்றை ஊன்றி நோக்கும் போது இவை அரசாங்கத்தின் உள்நோக்கத்தை நிறைவேற்றவே நடைபெறுகின்றன என உணர முடிகிறதல்லவா? ஒரு முறைக்குப்

### மன்னூர் பத்மன்

பலமுறை அட்டூழியங்கள் புரியப்படும் போதும்-அவை அரசாங்கத்திற்குப் பலராலும் பலமுறை புகார் செய்யப்படும்போதும் — அட்டூழியங்களல்ல அவை என்ற விதத்தில் பாராளுமன்றத்திலேயே எம் நாட்டின் அரசியல் தலைவர்கள் விவாதிக்கும் போது வேறென்ன முடிவை நாம் கொள்ள இயலும்?

### இதோ அட்டூழியங்கள்!

இனக்கொலை என்ற அடிப்படை நோக்கின் கீழ் அடக்கு முறைகள் கையாளப்படுவதும் அட்டூழியங்கள் புரியப்படுவதும் இங்கு—இன்று புதிதல்லவே! இவை அனைத்தையும் பூரண ருசுப்படுத்தி, முழுவதாய் அத்தாட்சிப் படுத்த இயலாதிருக்கிறது பெரும்பாலோர்க்கு. காரணம் வஞ்சம் தீர்க்க இராணுவம் பழிவாங்கக் காத்திருக்கும் என்ற பீதியின் விளைவால் ஏழைகள் பலர் முன்வரத் தயாராக இல்லை- அவர்கள் முன்வரின் காடைத்தனத்தைக் காட்ட இராணுவத்தினரிலும் சிலர் இருக்கிறார்கள் —என்பதைக் கூறி, நடந்த நிகழ்ச்சிகள் சிலவற்றை மட்டும் இங்கு தருகிறோம்.

### காட்சி 1

இடம்: பாலக்குளி

காலம்: மாசி (பெப்) 1961

கூறுபவர்: திரு ............... என்பவர். அவர் கூறுவது இதோ:-

"பெப்பிரவரி மாதம் 1ந் திகதி இரவு பாலக்குளியில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டவன்தான் நான். என்னை இராணுவத்தினர், எதற்காகவோ தெரியாது, மீண்டும் தேடித் திரிகிறார்களாம். முன்னர் எனக்கு நடந்தது இதுதான்:

"அன்று திகதி இரவு வீட்டில் நான் படுத்திருந்தேன். நேரம் சுமார் 11 மணி இருக்கும். பலத்த சத்தம் கேட்டது. எழுந்து பார்த்தசம் பட்டாளத்தினர் எதிரே நின்றனர். சுமார் 10 பேர் இருக்கும். படுத்திருந்த எங்களில் மூவர். எங்களைக் கையில் பிடித்து இழுத்து 'வான்' வாகனத்துக்குச் சென்றார்கள். அங்கு வேறு சிலரும் பிடிபட்டு இருந்தார்கள். தள்ளாடி எனும் இடத்துக் காட்டுக்கு நாங்கள் கொண்டு செல்லப்பட்டோம். தனித்தனியாக நாங்கள் ஒவ்வொருவரும் இறக்கப்பட்டோம். இறக்கி, கள்ளத் தோணியில் சமீபத்தில் வந்தவன் நான் என ஒப்புக் கொள்ளும்படி சொல்லி அடித்தார்கள்.

என்னை மூன்று பேர் சூழ்ந்திருந்தார்கள். ஒருவர் வர் கேள்வி கேட்டார். மற்ற இருவரும் என்னை வதைத்து அடிப்பதில் ஈடுபட்டார்கள். தாங்க இயலாத வண்ணம் அடித்தார்கள். அவர்கள் அடிக்கும் போது நாங்கள் அசையவும் கூடாதாம். மறுமொழியை உரத்து (வேதனை மிகுதியாற் கூட) கூறக் கூடாதாம். கை கட்டக் கூடாது. கையை இரு பக்கத்திலும் விட்டபடி நிற்க வேண்டும்.

"பட்டாளத்தினர் கையால் ஓங்கி வயிற்றின் கீழே இடித்தார்கள். வலியால் வீழ்ந்ததும் பிடித்திழுத்து நிறுத்தி வைத்து மேலும் அடித்தார்கள், இடித்தார்கள். இவ்விதம் இம்சைக்குள்ளாகி பொலீசுக்கு எடுத்துச் செல்லப்பட்டு. பிணையில் நிற்கும்போது—

திரும்பவும் பாலக்குளியில் பிடிக்கப்பட்டேன். மீண்டும் அதே பழைய அடி உதை பல்லவிதான். மீண்டும் பொலீசில் கொடுத்தார்கள். பொலீசார் விசாரித்து விட்டு வெளியில் விட்டார்கள் இவ்விதம் இராணுவத்தினர் பிடித்து விட்டார்கள்தானே, இனி ஒன்றும் இல்லை என இருக்க முடியாது. மீண்டும் மீண்டும் பட்டாளத்தினர் பிடிக்கலாம். பிடித்துக் குற்றுயிராக்கலாம். கேட்க யார் உளர்?"

### காட்சி 2

இடம்: [illegible] தடுப்புக் காவல் முகாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

# உறுதியான போராட்டமே விடுதலைக்கு வழி சமைக்கும்

## மட்டக்களப்புக் கூட்டத்தில் இராசதுரை முழக்கம்

**ஸ்ரீங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக அமுலாகப் போகும் ஜனவரி முதல் தேதியில் தமிழரசுக்கட்சியின் உரிமைப் போராட்டமும் ஆரம்பமாகப் போகிறது. கடந்த ஏழு ஆண்டுகள் மட்டுமே கட்சியின் நேரடி நடவடிக்கைகள் நடைபெற்று வந்துள்ளன. விடுதலைப் போராட்டத்தில் இது மிகவும் குறைந்த காலமாகும். இந்தக் குறுகிய காலத்துள் நாம் எதுவிதத் தியாகமும் செய்து விடவில்லை. விடுதலை கடைச் சரக்கல்ல. உண்மையான—உறுதியான போராட்டங்களினாலும், தியாகங்களினாலுமே நம் இனம் விடுதலை பெற முடியும்.**

இவ்வாறு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் கடந்த ஞாயிறு மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்.

அவர் கொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'உரிமைகளுக்காகப் போராடும் பணிகுத் தமிழரசுக் கட்சியைத் தமிழ் பேசும்



திரு. சா.ஜே. வே. செல்வநாயகம்

மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளனர். அவர்களுடைய எண்ணங்களைத் தமிழரசுக் கட்சி பிரதிபலித்தே வந்திருக்கிறது. கட்சி ஆரம்பிக்கப்பட்டுப் பல வருடங்களாயினும், உரிமைப் போரிலும், நேரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு ஏழு வருடங்கள்தான் ஆகிறது.

### 15 லட்சம் பலி

அல்ஜீரிய நாடு தனது சுதந்திரப் போராட்டத்துக்கு 15 லட்சம் பேரைப் பலி கொடுத்துள்ளது. 120 லட்சம் யூதர்கள் ஐரோப்பாவின் பல தேசங்களிலும் சித்திரவதைப் படுத்தப்பட்டுச் சாகடிக்கப்பட்டுள்ளனர். இன்று அல்ஜீரியா சுதந்திரத்துடன் வாழ்கின்றது. யூதர்கள் இஸ்ரேல் நாட்டைப் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றிவருகின்றனர்.

ஏழு வருடங்கள் நடத்திய நமது போராட்டங்களில் நாம் எதுவுமே செய்யவில்லை. எள்ளளவும் தியாகம் செய்யவேயில்லை எதிர்வரும் போராட்டங்களிலாவது நாம் தியாகம் செய்து உரிமைகளைப் பெறுவோம்.

இலங்கை முழுவதற்கும் தமிழுக்குச் சம அந்தஸ்துப் பெற்றுத் தருவோம் என்று பல வருடங்களாகப் பேசி வந்தவர்களான இடதுசாரிகள் இன்று கைவிரித்துவிட்டார்கள். அவர்களுடைய உண்மைச் சொரூபம் வெளிப்பட்டுவிட்டது. ஆகவே தமிழ் பேசும் இனத்துக்கு இந்நாட்டில் விடுதலை வாங்கித் தரவல்லது தமிழரசுக் கட்சி ஒன்று மட்டுமே. போராட்டத் திட்டங்களில் தவறுகள் இருப்பினும், தீவிரம் போதாதிருப்பினும் இறுதி வரை இலட்சியம் தவறாமல் சேவை புரியத் தகுதி பெற்றது தமிழரசுக் கட்சி ஒன்று மட்டுமே!'

### தமிழரசுத் தந்தை உரை

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் பேசுகையில் 'நமது உரிமைப் போராட்டம் நெடியதொரு போராட்டமாகும். திடீரென எதையும் நாம் அடைந்துவிட முடியாது. இழந்த உரிமைகளை மீண்டும் பெறத் தமிழ் பேசும் மக்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தையும், எல்லாம் தமிழ் இயக்கத்தையும் மென்மேலும் தொடர்ந்து நடாத்த வேண்டியது அவசியம்' என்று தெரிவித்தார்.


### தலைவர் உரை

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: 'ஆங்கிலேயராட்சியின்போது ஆங்கில மொழியைக் கற்றோம். ஆனால் எவரேனும் ஆங்கிலேயராகிவிட முடியவில்லை. ஆனால் சிங்களத்தைக் கற்றால் நிச்சயம் சிங்களவராகிவிட ஏதுவாகும். பெருவாரி இனத்தவராகிய அவர்கள் தங்கள் மொழி, கலை, கலாச்சாரம், மதம் ஆகியவற்றைத் திணிக்கும்போது, சிறுபான்மையினரான நாம் நிச்சயம் ஒழிக்கப்பட்டுவிடுவது இயல்பு. களுத்துறைப் பகுதியிலும், நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளிலும் இப்படித்தான் பல லட்சம் தமிழ் பேசும் மக்கள் சூழ்நிலைக்கேற்பத் தங்களை மாற்றிக் கொண்டு சிங்களவர்களாகி விட்டார்கள்.

'நிர்வாகத்துறையில் இன்று தமிழ் பேசும் மக்களுக்கு இடம் கிடையாது. நமக்கென — நாம் வாழவே தான் நமக்காக ஒரு நிர்வாகத்தைக் கோரிய சமஷ்டி அமைப்பை வேண்டுகிறோம்.'

அடுத்துப் பேசிய செனட்டர் மாணிக்கம், 'உரிமைப் போராட்டம் வெற்றியீட்டித் தமிழ் பேசும் மக்களுக்குச் சகல உரிமைகளையும் பெற்றுத் தரும் வரை நாம் சலித்துவிடுதல் கூடாது. தமிழரசுக் கட்சிக்குத் தமிழ் பேசும் மக்கள் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

பருத்தித்துறைப் பிரதிநிதி திரு கே. துரைரத்தினம் பேசும்போது, தமிழ் பேசும் இளைஞர்கள் விவசாயத்திலும், வர்த்தகத் துறையிலும் ஈடுபடுதல் அவசியம் என்றும், வேலையில்லையே என்று வீண் பொழுது போக்குவது கூடாது என்றும் குறிப்பிட்டார்.


ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் உரிமையை நிலை நாட்டவே

## கழகம் அமைத்தோம்

### டிக்கோயாவில் தமிழரசுத் தந்தை

**“மலைநாட்டுத் தமிழர்களே இந்நாட்டின் முதுகெலும்பு. அவர்களால்தான் இந்நாடே பெருமையோடு வாழ்கிறது. ஆனால் அவர்களது வாழ்வோ சீரழிக்கப்படுகிறது ஒன்றன் பின் ஒன்ருக முன்பிருந்த அரைகுறையான உரிமைகளையும் அரசாங்கம் பறிமுதல் செய்து வருகிறது தமிழ் பேசும் தொழிலாளர்கள் இழநத உரிமைகளையும் இதுவரை இல்லாத உரிமைகளையும் வென்றெடுக்க வேண்டும். வடக்கு—கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்குப் போராடுவதுடன், அதைப் போல மலையக மக்களின் உரிமைகளையும் எவ்வழியிலாவது நிலைநாட்ட எண்ணியே தொழிற் சங்கம் அமைத்து இருக்கிறேம்.”**

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் இம்மாதம் 12ந் திகதி டிக்கோயா கிருமக்கொல்லைத் தோட்டத்தில் நடைபெர்ற இலங்கைத் தொழிலாளர் கழகத் தோட்டக் கமிட்டித் தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மேலும் ‘தொழிலாளர்கள் ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும். பொருளாதாரக் கோரிக்கைகள் உட்பட அடிப்படை உரிமைகள் அனைத்தையும் வென்றெடுக்க, மற்றச் சங்கங்கள் இதுவரை செய்யாத நற்காரியங்களை செய்துகாட்ட இ. தொ. க. தலைமை தாங்கி வழிகாட்டி நிற்கும்’ என்று கூறினர்.

கூட்டத்திற்குக் கழகத் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள் தலைமை வகித்தார். மற்றும் க. சிவானந்த சுந்தரம், துணைத்தலைவர் இராமையா‘ நாகேந்திரம் ஆகிய முக்கியஸ்தர்களும் சொற்பொழிவாற்றினர்.

கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. பழனியாண்டி, துணைத் தலைவர்: திரு. எஸ். சோமாலை, செயலாளர்: திரு. எம். ராஜு, பொருளாளர்: திரு. வீரப்பன் கங்காணி. கலக்டர்கள்: திருவாளர்கள்: ராமமூர்த்தி-பெரியசாமி.

**கமிட்டி அங்கத்தவர்கள்:**

திருவாளர்கள்: ஆர். பெரியசாமி கங்காணி, பழனிமலை கங்காணி, மாரிமுத்து, பழனி, தங்கவேல், விஸ்வநாதன், இளையபெருமாள் கங்காணி, எம். ராமசாமி ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகவும், எம். பழனியாண்டி, பி. சுப்பிரமணியம், எஸ். பெருமாள், எம். சஞ்சீவி, எஸ். மருதமுத்து, காவேரி, எம். மாரிமுத்து, ஆர். கன்னியப்பன், சாந்தப்பன், ஆறுமுகம், எம். இளையபெருமாள், எஸ். கலியபெருமாள் ஆகியோர் தொண்டர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தோட்டச் சிறுர்களின் நல் விருத்திக்கு வழி

“மலை நாட்டில் வதியும் தமிழ் பேசும் தொழிலாளர்களுடைய பிள்ளைகளின் கல்வி நிலைமை மோசமான நிலையிலிருந்து வருகிறது.

தோட்டப் பகுதிகளில் இயங்கிவரும் பாடசாலைகள் பெயர் அளவிலேயே இயங்கி வருகின்றன. நகரப்புறங்களில் உள்ள அரசாங்க பாடசாலைகளில் தோட்டப் பகுதிகளில் உள்ள பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு தடை போடப்படுகிறது. இந்த நிலை மாற்றப்படல் வேண்டும். மலை நாட்டில் தமிழ் பேசும் பிள்ளைகளின் கல்வி விருத்திக்கான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும்”

இவ்வாறு நானுஓயாவைச் சேர்ந்த கண்டிதுரை தோட்டக் கூட்டத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பிரச்சாரக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய கழகத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம் கூறினர்.

கூட்டத்திற்குக் கழக செயற்குழு உறுப்பினரும் கழக ஊழியருமான டி. எஸ். துரைசாமி தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் திருவாளர்கள் சோமசுந்தரம், வடிவேல் உட்பட மற்றும் பலர் பேசினர்.

கீழ் காணுபவர்களைக் கொண்ட தோட்டக் குழு தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: சங்கரலிங்கம், துணைத் தலைவர்: சடையன், செயலாளர்: எம். அந்தோனி முத்து, பொருளாளர்: பரமசிங்கம், சந்தா வசூலிப்போர்: சுப்ரமணியன்-சின்னையா, குழு உறுப்பினர்கள்: முத்துசாமி, பழனியாண்டி, ராமசாமி, வேலன், ஆறுமுகம். தொண்டர்கள்: ராசு, நடேசன், தங்கவேல், கரிவண்டன், சுப்பன், ராசு, சகாதேவன்.

## கழகத்தின் கடமை பெரிது

கரவைச் சலீம்

கல்வி அறிவு குறைந்த நாடுகளில் புதியோர் கல்வித் திட்டங்கள், இலவசப் படிப்பு முதலியவற்றிற்கு அரசாங்கங்கள் உதவி செய்கின்றன.

அடிமை விலங்கு ஒடிக்கப்பட்டு சுதந்திரம் பெற்ற நாடுகளில் தாய்மொழி முக்கியத்துவம் பெற்றது தாய் மொழி தேசிய மொழியாகவும் மாறிவிட்டது. ஆங்கிலம் இருந்த இடத்தில் சொந்த மொழி அரசுரிமை கண்டது.

ஈழத்திரு நாட்டிலும் எத்தனையோ ஆண்டுகளாக இலவசக் கல்வி வசதி கிடைத்து வருகிறது. கல்லூரிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டது — என்ருலும் மலையகத்தில் அரசாங்கம் புகவில்லை. அங்கு வாழும் குழந்தைகளைக் கோட்டான்களாக எண்ணுகிருர்கள். மலையகத்தில் மக்களின் தொழிற் சங்கத் தலைவர்கள் நீண்ட நாட்களாக காலத்தை விரயமாக்கி உள்ளனர். சொந்த நலன் கருதி காட்டானுக்குக் கல்வி கூடாது என்றிருக்கின்றனர்.

அறிவு வளர்ந்து விட்டால் போலிகளை உதறிவிட்டால் சதா வெளிநாடுகளில் பவனி வர முடியாது என்ற ஏக்கம்.

இந் நிலையிற்தான் நமது பிற்போக்கான அரசாங்கம் மறவகுலக் கொழுந்துகள், கல்வி சிங்களத்தில் படிக்க வேண்டும், அப்படியானல் வசதிகள் உண்டு என்று கூறுகிருர்கள்.

ஆங்கிலம் அன்னியமொழி. அது நமக்கு வேண்டாம். சிங்களம் எமது மொழி, அது எல்லோருக்கும் வேணடும் என்கிருர்கள். இங்குதான் சிக்கல் பிறக்கிறது.

கன்னித் தமிழ் பேசுவோருக்குச் சிங்களம் சிறந்த மொழியாம். இந்த ஓர வஞ்சகத்தை எப்படிச் சொல்வது? சுதந்திரம் ஒரு சாராரின் ஏகபோக உரிமை. மற்றவர்களுக்கு மறக்க முடியாத அடிமைச் சின்னம்-

குடி, நில, மொழி உரிமைகள் அத்தனையும் இழந்து விட்டோம் சாவின் கரத்தில் தொங்கி நிற்கும் வேளையில்தான் மொழி, நில, குடி உரிமைகளைப்பெற வேண்டும் என்ற ஆசை பெருஞ் சக்தியாக உருமாறி, தொழிலாளர் கழகமாக மலையகத்தில் புகுந்தது.

கழகத்தின் கடமைபெரிது. அதற்கு முன்னேடியாக மலையகக் குழந்தைகளின் கல்வியில் அக்கறை காட்ட முன் வந்த பெருஞ் சிறப்பு மலை மக்களை ஆர்த்து விட்டது.

நமது நிலை அறிந்து உதவ முன்வந்த கழகத்திற்கு குருதி கொட்டி உழைக்க மலைநாட்டான் மனம் வைத்துவிட்டான். இழந்த உரிமைகள், கல்வி அளிக்கும் பெரும்பணி முதலியவற்றைக் கழகம் பெற்றே தீரும்.

கழகம் சீரிய செயல்களைப் புரிந்து ஈழத்திரு நாட்டில் தமிழ் பேசும் மக்களின் நலிவைப் போக்க ஆவன செய்ய எமது இதயபூர்வமான உதவி கிடைக்கும். வாழ்வு குறைந்த மலைக் குழந்தைகள் வாழ்வு பெற வேண்டும்.

## மலைநாடு

### இலவச பாட போதனையும் சங்கீத வகுப்பும்

இலங்கைத் தொழிலாளர் கழகம் அடுத்தஆண்டு தைத் திங்கள் முதல் அட்டன் நகரில் கர்நாடக சங்கித வகுப்புக்கள் நடாத்த விருக்கிறது. இவ் வகுப்புக்கள் வாரத்தில் மூன்று நாட்களுக்கு நடைபெறும். வயிலின், புல்லாங்குழல், வாய்ப்பாடு ஆகியவற்றில் சிறந்த அனுபவமுடையவர்கள் பயிற்சி அளிப்பார்கள். இவ் வகுப்புக்களில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் இலங்கைத் தொழிலாளர் கழகம் அட்டன் கிளைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். மாணவர்களிடமிருந்து மிகக் குறைந்த கட்டணமே அறவிடப்படும்.

தோட்டத் தொழிலாளரின் ஐந்து குழந்தைகளுக்கு இலவச பாட போதனை அளிக்கவும் கழகம் முடிவு செய்துள்ளது இத் திட்டத்தின் கீழ் இலவச பாட போதனையும், புத்தகம் முதலிய உபகரணங்களும் வழங்கப்படும்.

இதற்குரிய விண்ணப்பங்கள் 23-ம் திகதிக்கு முன்னர் அட்டன் கிளைக்காரியாலயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் பின்வரும் விபரங்களும் வேண்டப்படுகின்றன.

மாணவனின் முழுப் பெயர்:

..........................................

முகவரி:...................................

..........................................

வயது:.....................................

குடும்பத்தின் மாத வருமானம்:

..........................................

உணவு, போக்குவரவுச் செலவுகள் கொடுக்க முடியுமா?

..........................................

கல்வி கற்பவராயின், பாடசாலையின் பெயர்:............

..........................................

வகுப்பு:...................................

## விபரங்களை எழுதுக!

நாடற்ற மக்கள் என்று கூறப்படும் 10 இலட்சம் மக்களிற் கணிசமான தொகையினர் இலங்கை வம்சாவளிப் பிரஜைகளென்பதில் ஐயமில்லை. தாங்கள் வம்சாவளிப் பிரஜைகளென்பதையே உணராமல் அநேகர் அன்று காங்கிரஸ் நீட்டிய பிரஜாவுரிமை மனுக்களில் கையெழுத்திட்டு, இன்று ‘நாடற்றவர்கள்” என்ற அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தத்தம் பிரஜாவுரிமையை நிரூபித்து, வெளி விவகார இலாகாவிடம் அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொள்ள முடியும். அதனைச் செய்வதற்கு இ. தொ. கழகம் அவர்களுக்கு அவசியமான உதவிகளைச் செய்யத் தயாராயிருக்கிறது. ஆகவே வம்சாவளிப் பிரஜை என்பதை (மனுதாரும், மனுதாரின் தந்தையும் இலங்கையில் பிறந்தவர்கள் என்பதை) நிரூபிக்கத்தக்க யோக்கியதாம்சங்களையுடையவர்கள் உடனடியாக இ. தொ. கழக அட்டன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். விபரங்களை எழுதுக.

இலங்கைத் தொழிலாளர் கழகம்

117—1/8, டிம்புள வீதி,

அட்டன்.


அழகிற்கும் உறுதிக்கும்; அவனியிற் சிறந்தது

லதா!!



லதா மணிப்புரி சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்; அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப் பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் “லண்டன் கந்தையா” நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்

வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,

கொழும்பு.

—Mylads


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'தமிழ் மக்களின் கொட்டம் அடக்க சிங்களக் குடியேற்றம்

## பௌத்த மதத்தை வெளியேற்ற இந்தியா முயற்சி'

## சிங்கள இதழ்களில்...

"சமஷ்டி", "நாம் தமிழர்" இயக்கங்களை நசுக்கக் கூடிய ஒரேவழி அவர்கள் பெருவாரியாக வசிக்கும் பிரதேசங்களிலுள்ள அரசாங்கக் காணிகளில் பெரும்பகுதியில் காணியற்ற சிங்களவர்களைக் கொண்டுபோய்க் குடியேற்றுவது தான் என்று 16—12—63ந் திகதி "தவஸ" பத்திரிகை பிரசுரித்த ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கட்டுரையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"வட, கிழக்கு மாகாணங்களையும், தோட்டப் பகுதிகளையும் ஒரு சமஷ்டி ஆட்சியில் இணைக்கும் இயக்கமாகச் சமஷ்டிக் கட்சி செயல்படுகிறது. நாட்டைத் துண்டாடும் இந்த முயற்சிக்கு எதிராக அரசாங்கத்தின் ஒவ்வொரு நிர்வாகப் பகுதியும் அவசியமான திட்டங்களைக் கையாள வேண்டும்.

### அரசாங்கக் கொள்கை ஆக்கமளிக்கிறதாம்

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்கக் காணிகள் சம்பந்தமாக அரசாங்கம் கையாளும் கொள்கை சமஷ்டிக் கட்சிக்கு ஆக்கம் அளிக்கக்கூடியதாகவே இருக்கிறது. இந்த விஷயம், திகவாப்பி, சேருவில, வில்கம் வெகர, கிரிஹண்டு சேய முதலிய கிழக்கு இலங்கையிலுள்ள பௌத்தாலயங்களைச் சுற்றியுள்ள காணிகளை வழங்குவதில் அமைச்சு செய்த முடிவிலிருந்து தெளிவாகிறது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலுள்ள காணிகள் எல்லாவற்றையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க சமஷ்டிக் கட்சியும் நாம் தமிழர் ஸ்தாபனமும் பெருமுயற்சி செய்கின்றன. காணிகளைத் தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமாக்கும் பொருட்டு, அவர்கள் பல்வேறு உபாயங்களைக் கையாளுகின்றனர். கிழக்குக் கடற்கரையிலே அராசாங்கத்தால் ஆரம்பிக்கப்படவிருந்த சிங்கள மீன்பிடித் தொழிற் குடியேற்றத் திட்டம் அவர்களின் நிர்ப்பந்தத்தால் கைவிடப்பட்டது.

இவைகளெல்லாம் வருங்காலத்தில் "பிராந்திய சமஷ்டி ஆட்சி" நிறுவும் பொருட்டு செய்யப்படும் முயற்சிகள்தாம். அரசாங்கம் அவர்களின் முயற்சியைச் சரிவரப் புரிந்து கொண்டு, எதிர்காலத்தில் அத்தகைய நிலைமை உருவாவதைத் தடுப்பதற்காக இன்றே தாக்குதல் கொடுக்க வேண்டும்.

ஆயினும் சில தினங்களுக்கு முன்பு காணி அபிவிருத்தி அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அபிவிருத்தி செய்யப்படும் காணிகளில் பெரும்பகுதி தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமாகி விடுமாதலின், அந்தப் பிரதேசங்களில் காணி அபிவிருத்தியைச் சற்று நிறுத்திவிட்டு, சிங்களப் பிரதேசங்களில் காணி அபிவிருத்தியைச் செய்யப்போவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதிலிருந்து அமைச்சர் சமஷ்டி, நாம் தமிழர் இயக்கங்களின் நெருக்குதலுக்குப் பயந்துவிட்டார் என்றல்லவா தெரிகிறது?

அந்தப் பிரதேசத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மையோராக வசிக்கும் காரணத்தால் அபிவிருத்தி செய்யப்படும்காணிகள் அவர்களுக்குச் சொந்தமாகி விடுமா? இதுதான் அமைச்சரின் கொள்கையென்றால், அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய முழு சிங்கள இனமே எழுச்சி பெற வேண்டும்.

வட, கிழ் பிரதேசங்களில் அபிவிருத்தி செய்யப்படும் காணிமட்டுமன்றி அந்தப் பிரதேசம் முழுவதுமே அவர்களுக்குச் சொந்தம் என்ற தேசத் துரோகக் கொள்கைக்கு அமைச்சரும் ஆக்கமளிப்பதாகத் தெரிகிறது.

மந்திரியின் இக் கொள்கையின் விளைவாக அபிவிருத்தி செய்யப்படும் காணிகளில் பெரும்பகுதி அல்ல — முழுவதுமே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமாகிவிடும். இதனால் சமஷ்டிவாதிகள் வாகைமாலை சூடுவார்கள்."

### இந்தியாவின் மனவேதனை

பாகிஸ்தான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் பற்றி அதிக அக்கறை கொண்டுள்ள நாடு இந்தியாதான் என்று 14—12—63ந் திகதி "லங்கா தீப" பத்திரிகையில் "சந்திர குப்த" எழுதியுள்ள அரசியல் விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுவதாவது:-

"ஜனாதிபதி அயூப்கானின் விஜயம் இந்தியாவுக்கு மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதென்பது உண்மையே. சிங்கள இனத்தின் வாழ்வுக்கே உலைவைக்கும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா சிரத்தை காட்டாதிருப்பதும், "கள்ளத்தோணி"ப் பிரச்சினையில் இந்தியா அக்கறையின்றி இருப்பதும் 'இந்தியாவின்பால் இலங்கை மக்களிடையே சந்தேகத்தைத் தூண்டிவிட்டுள்ளன.

இலங்கையிலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர் அனைவரையும் திருப்பி அழைத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு இந்தியா பொருளாதார வளர்ச்சிபெற்றிருக்கிறதெனினும், அவர்கள் இந்தியர்களல்ல என்று சொல்லும் அளவுக்கு இந்தியத் தலைவர்கள் சுயநலமிகளாகியுள்ளனர்.

இலங்கையின் அனுதரவான நிலைமையைப் பயன்படுத்திக் கொள்வது இந்தியாவின் கொள்கை என்பது பிரதமர் நேரு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றி திரு. எஸ். தொண்டமான் போன்றவர்களுடன் இந்தியர் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதிலிருந்து தெளிவாகிறது.

இந்தியாவின் இந்த இரட்டைக் கொள்கையின் விளைவாகவே தென்னிந்தியா இலங்கையை விழுங்கிவிடத் தயாராகிறது என திரு. கே. எம். பி ராஜரத்னவும், திரு. ஆர். ஜி. சேனநாயகாவும் கூறுவதை பொதுமக்கள் இப்பொழுது நம்பத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி அயூப்கானுக்கு இந்த நாடுமக்கள் மகத்தான வரவேற்பளிக்க இதுதான் காரணம்.

என்றுவது தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்தபிறகுதான் இலங்கை — இந்திய நட்பை அசைக்கமுடியாதபடி பலப்படுத்திக் கொள்ள முடியும்.

சிங்களவர்களின் தேசிய மதம் பௌத்தம் என்ற காரணத்தைக் கொண்டோ, பௌத்த சமயத்தின் பிறப்பிடம் இந்தியா என்ற காரணத்தைக் கொண்டோ இந் நாட்டு மக்கள் தங்களின் சுதந்திரத்தை இழந்துவிட மாட்டார்கள். இந்தியாவிலிருந்து பௌத்த சமயத்தை வெளியேற்ற சில காலமாக நடைபெறும் நடவடிக்கை

(9-ம் பக்கம் பார்க்க)

# சுதேசிய மொழிகளில் நிர்வாகம் நாட்டுக்கு அவசியம்

## முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் 'தமிழ்த் தொண்டன்' கருத்து

இடமகன்ற இஞ்ஞாலத்திலுள்ள நாடுகளெல்லாம் விடுதலையை விழைந்து நிற்கின்றன. எங்கு பார்த்தாலும் விடுதலைப் பேச்சே முதலிடம் பெறுகின்றது. தேசிய வொலி தேசமெங்கும் ஒலிக்கின்றது. ஊனிற் தேசியம், உடையிற் தேசியம், மொழியிற் தேசியம், தொழிலிற் தேசியம் எல்லாம் தேசியமயமாய்த் தேங்குகின்றன. விடுதலைக்கு வழிகோலுவது தேசியமே. விடுதலையை விழையா நாடுளதா? விடுதலை விழையா மக்களுளரா? விடுதலை விழையாத விலங்குகள்தானுமுளதா? அகிலவுலகமும் விடுதலையை விழைந்து முன்னேற்றமடைந்து வரு

வித்துவான்
வ. மு. கனகசுந்தரம்

மிந்நாளில் இலங்கை நாடு விடுதலையை நாடாதா?

இலங்கை நாட்டுக்கு ஈடேற்றமுண்டாவதற்குக் கால்கோலும் முறையில் இராச்சியப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதான பேச்சுண்டு. உண்மையில் ஈடேற்றத்திற்கு இடர் விளைக்கும் முறையிலேயே நவீன அரசியலமைப்பு வழங்கப்பட்டிருப்பதென்பது நடுநிலை திறம்பாத அரசியல் ஞானிகளால் அங்கீகரிக்கப்பட்ட தொன்றாகும்.

இலங்கை மக்களின் உள்ளத்தில் விடுதலையுணர்ச்சி உதயமாகியும் விடுதலையை நாடி ஏனைய நாடுகள் முன்னேறி வருவதுபோல இலங்கை நாடு முன்னேறவில்லை. காரணம் சுயநலத்தை நாடாத் தியாகமூர்த்திகள் தோற்றாத குறையே. இங்குள்ள இற்றையத் தலைவர்களெல்லாம் புகழ் விரும்பும் சுயநலப் புலிகளாகவே பொலிவுறுகின்றனர். இந்திய நாட்டில் உதித்திருக்கும் எண்ணிறந்த தியாகிகளின் கடைப்பட்ட ஒருவனுக்குள்ள தியாகவுணர்ச்சி அகில இலங்கை மக்களினதும் உள்ளங்களிலுள்ள தியாகவுணர்ச்சியும் ஒருங்கே சேர்ந்தாலும் ஈடாகமாட்டாதென்பது மிகையாகாது. [illegible] ஈடேறுவதெங்ஙனம்?

இலங்கை நாடு ஈடேற்றமடைவதற்கு இங்குள்ள தமிழர், சிங்களவர்களாகிய இரு வகுப்பினர்க்குமிடையில் ஒற்றுமையேற்பட வேண்டியதவசியம். இரு வகுப்பாரினதும் மொழியில் ஒற்றுமை ஏற்படவேண்டும். ஒருவர் கூறுவதை மற்றவர் அறிவதற்கு இருவர் மொழியும் ஒன்றாகவிருத்தல் வேண்டும். அது சாத்தியமானதன்று. இரு வகுப்பினரும் இரு மொழியையும் பயில வேண்டும். அகில வித்தியாசாலைகளிலும் இரு மொழிகளும் கட்டாயமாகக் கற்பிக்கப்படல்வேண்டும். இரு மொழிகளிலும் உயர்தரக் கல்வி ஊட்டப்படவேண்டியது இன்றியமையாததே.

அரசாங்க வேலைத் தலங்களில் ஆங்கில மொழியிற்றான் அகில கருமங்களும் நடைபெறுவதென்றிருக்கப்படாது. ஆங்கில மொழியின்றிச் சுதேச மொழிகளில் நடத்தப்படக்கூடிய கருமங்கள் அங்ஙனமே நடைபெற வேண்டும். ஆங்கில மொழியில் உயர்தரக் கல்வி கற்பதன் பொருட்டுச் செலவாகும் பொருள் அற்பமானதா? அப்பொருள்களெல்லாம் வீணில் நாட்டுக்கு வெளியே ஏன் போக வேண்டும்?

சிறு உத்தியோகங்களை ஏன் சுயமொழி வல்லுநர்க்கு வழங்கப்படாது? சொற்ப ஆங்கில அறிவுள்ள உத்தியோகத்தர்களிலும் பார்க்க மிக்க திட்ப நுட்பமாக ஆங்கிலத்தில் அட்சரமுந்தெரியாதவர்கள் கருமங்கள் பார்க்கக் கூடியவர்களாயிருக்கின்றனரே. அவர்களின் அபார அறிவும் ஆற்றலும் நிர்ப்பிரயோசனமாக ஏன் கழியவேண்டும்?

(9-ம் பக்கம் பார்க்க)

இந்நாட்டின் கண் வாழக்கூடிய இருவின மக்கள் மத்தியில் நீடித்த உறவையும் நிலைத்த சுதந்திரத்தையும் நிலைபெறச் செய்வதற்கு உரிய மார்க்கத்தை முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தமிழ்த் தொண்டன்' என்னும் ஏடு, தனது 17—12—1931ம் திகதி இதழ் ஆசிரியத் தலையங்கத்தில் தெளிவுற விளக்கியுளது நாட்டின் நிர்வாகம் சுதேசிய மொழிகளில் நடைபெற வேண்டும் என்பதற்கு வன்மையான வாதங்கள் உள. உரிமை காக்க பிரதேச சபைகள் அமைப்பது வலுவானது என்ற கருத்துக்கள் தோன்றாப் பொருளாகக் காட்டப்பட்டுள்ளன. நாட்டின் அன்றைய வழி நிர்வாகம் ஒற்றுமை வாழ்வுக்கு நிலையற்றதென்பது ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டுள்ளது எனவே, நாடு அடிமைப்பட்டிருந்தகால் நாட்டின் விடுதலையும் தேசியமும் எந்துணை அவசியம் என்பதை தமிழ் பேசும் மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக் காட்டு.




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனம்

**15 நாள் டின் ரூபா 3-00**
**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர அரசின் சோசலிசத் திட்டம்

## அரங்கம் 33

தலைவர் டி வேலராவின் ஆட்சி அரசியல் பிரச்சினைகளை மட்டும் தீர்ப்பதில் நிற்கவில்லை. பொருளாதார, சமூக கல்விப் பிரச்சினைகளில் புதுப்புது மாற்றங்களை அந்த ஆட்சி நடைமுறைக்குக் கொண்டு வந்தது. கொஸ்கிரேவின் அரசாங்கம் கையாண்டு வந்த முதலாளித்துவ திட்டங்களையெல்லாம் ஒழித்து ஒரு சோசலிசச் சமுதாயத்தை உருவாக்க முயன்று கொண்டிருந்தது. அதன் காரணமாக, அயர்நாட்டு இளைஞர்கள் தொழில் வசதி தேடி வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒழிந்தது.

பீயெனு போள் அரசாங்கம், தற்போது இருக்கும் மூதவை கூடித் தொழிற்படுவது நிறுத்தப் பட வேண்டும் எனவும் புதிய தொரு மூதவை உருவாக்கப்பட வேண்டும் எனவும் முடிவு

## நாட்டைக் காக்கும் பணியில் இளைஞர்கள் தீவிரம்

கொள்கின்றார்களா என்பதை அறிவதற்காக டி வேலரா பாராளுமன்றத்தைக் கலைத்தார். நாட்டின் வடபகுதி ஏனைய பகுதியோடு இணைக்கப்பட்ட உடனேயே குடியரசைப் பிரகடனப் படுத்தத் தான் தயாராக உள்ளதாக டி வேலரா மக்களுக்கு எடுத்துக் கூறினார். விகிதாசாரம் பிரதிநிதித்துவ முறைப்படி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பீயெனு போள் 69 ஆசனங்களையும் ஐக்கிய அயர் நாட்டுக் கட்சி 48 ஆசனங்களையும் தொழிற் கட்சி 13 ஆசனங்களையும் சுயேச்சையினர் 8 ஆசனங்களையும் கைப்பற்றினர்.

பண்டங்களுக்கு விதிக்கும் ஆயத் தீர்வையும் நீக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பிரித்தானியா இன்னும் அயர் நாட்டில் தன் கைவசம் வைத்திருக்கும் கடற்படைத் தளங்களை அயர் நாட்டிடம் ஒப்படைக்க ஒத்துக் கொண்டது. அதற்குப் பதிலாக, யுத்த காலத்தில் பிரித்தானியா

### 'கோமகன்'
### 'மாமல்லன்'

வுக்கு எதிராக எந்த நாடும் அயர் நாட்டைத் தளமாகப் பாவிக்க அயர் நாட்டு அரசாங்கம் அனுமதிக்காது என டி வேலரா வாக்குறுதியளித்தார். அயர் நாட்டின் வடபகுதியையும் தென் பகுதியையும் இணைக்கும் பிரச்சினையில்தான் எதுவித முடிவும் ஏற்படவில்லை.

இந்த முடிவுகள் செய்யப்பட்டபின் பிரதமர் டி வேலரா பாராளுமன்றத்தைக் கலைத்தார். தமது கட்சிக்குப் பெரும் பெரும்பான்மையை மக்கள் அளிக்க வேண்டும் எனக் கோரினர். 1938 யூன் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் பீயெனு போள் 77 ஆசனங்களையும் ஐக்கிய அயர் நாட்டுக் கட்சி

இந்த இக்கட்டான வேளையில் அ. கு. இராணுவத்தின் தலைவர் சோண் றசல் இங்கிலாந்துக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தார். அதில் இங்கிலாந்து, வட அயர் நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுவிட்டால் அ. கு. இராணுவம் இங்கிலாந்தின் மீது போர் பிரகடனப்படுத்தும் எனக் கூறப்பட்டிருந்தது. அந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து அ. கு. இராணுவத்தினர் இங்கிலாந்திலுள்ள ஓட்டல்கள், தேவாலயங்கள், புகைவண்டிச் சந்திகள், பாலங்கள் ஆகியவற்றை அகழ்ச்சி வெடிகளால் பாழாக்கினர். இதைக் கண்ட ஆங்கில

தான் யேர்மனியின் திட்டம். அயர் நாட்டின் இரு பகுதிகளையும் இணைப்பதற்காக யேர்மனி அயர்நாட்டுக்கு உதவியளிக்க மகிழ்ச்சியுடன் முன்வரும் என அயர்நாட்டிலிருந்த யேர்மன் தூதுவர் பிரதமர் டி வேலராவிடம் எடுத்துரைத்தார். அந்த உதவியைப் பெறுவது அயர் நாடு தன்னைத் தானே அழிப்பதற்கு வழிகோலும் என எண்ணிய டி வேலரா யேர்மன் உதவியை வேண்டாமென வெறுத்தார்.

பிரதமர் டி வேலரா யேர்மன் உதவியை வெறுத்தாலும் அ. கு. இராணுவம் அந்த உதவியை மனதார வரவேற்றது. யேர்மனியுடன் கூட்டுச் சேர்ந்த அ. கு. இராணுவம், டப்ளின் மாளிகையை அகழ்ச்சி வெடியால் நாசமாக்கியது; இங்கிலாந்தின் போர்க் கப்பல் ஒன்றை மூழ்கடித்தது. அயர்நாட்டின் நடுநிலைமைக் கொள்கையைப் பாழாக்கிக்

## புதிய நிர்வாக முறைக்கு மக்கள் ஆதரவு

செய்தது. அதன் பிரகாரம் 1936ல் மூதவை தொழிற்படுவது நிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து புதிய யாப்புமுறையொன்றைத் தயாரிப்பதில் டி வேலரா ஈடுபட்டார். பல மாதங்கள் உழைத்த பின் தயாரிக்கப்பட்ட யாப்பு முறையின் நகல் 1937ம் ஆண்டு மே மாதத்தில் மக்கள் சபையில் வெளியிடப்பட்டது.

புதிய யாப்புமுறை முழுத் திவகற்பத்துக்குமாக உருவாக்கப்பட்டிருந்தது. அதன்படி நாட்டின் பெயர் அயர். ஆங்கிலத்தில் அயர்லாந்து எனவும் தமிழில் அயர்நாடு எனவும் அழைக்கப்படும். நாடு அயர் மொழியில் பண்டைக் காலந் தொட்டு அயர் என அழைக்கப் பட்டு வந்தது. அதனால் தான் நாட்டின் பெயர் 'அயர்'என இருக்க வேண்டும் என டி வேலரா விரும்பினர். அயர் நாடு குடியரசாகவோ ஆநிலமாகவோ டொமினியன் இருக்க மாட்டாது. ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் ஒருவர் இருப்பார்; இரண்டு சபைகளையுடைய பாராளுமன்றம் ஆட்சியை நடாத்தும். மக்கள் சபையே பிரதம மந்திரியைத் தெரிவு செய்யும். அதன் பின் அந்தப் பிரதம மந்திரி தலைவரால் முறைப்படி நியமிக்கப்படு

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பேச்சு வழக்கிலிருந்து அற்றுப்போனஅயர் மொழியை மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக 1892ல் கைலிக் கழகம் என்னும் நிறுவனத்தை அமைத்தவரும் கவிஞரும் நாடகாசிரியரும் பழம் தேசபக்தர்களான வூல்பு தோன், றொபட் எமட், டேவிஸ், மிச்சேல் ஆகியோரைப் போன்று மதத்தால்

## தடுப்புக் காவலில் உண்ணாவிரதம்

ஆட்சியினர் பிரித்தானியாவிலிருந்த பல அயர் நாட்டவர்களை நாடு கடத்தினர்.

நாடு கடத்தப்பட்டு அயர் நாட்டையடைந்த தீவிரவாதிகளைச் சுதந்திரமாக விட்டால் அவர்கள் அயர் நாட்டுக்கும் ஆபத்தாக இருப்பார்களென எண்ணிய டி வேலராவின் அரசாங்கம் மிகவும் தயக்கத்துடன் அவர்களைத் தடுப்புக் காவ

கொண்டுவந்த அ. கு. இராணுவத்தினரை இனி மேலும் விட்டு வைக்கக் கூடாதென டி வேலரா முடிவு செய்தார். நூற்றுக் கணக்கான அ. கு. இராணுவ உறுப்பினரைச் சிறையிலடைத்தார். சிறையில் உண்ணாவிரதம் இருந்தவர்களை மாண்டுபோகவிட்டார்.

இவ்வளவு கடுமையாக டி வேலரா தண்டனைகளை விதித்து வந்தாலும் எஞ்சி இருந்த அ. கு. இராணுவத்தினர் சளைக்கவில்லை. அவர்கள் இங்கிலாந்தில் வேவு பார்த்த யேர்மன் கையாட்களுக்கு யேர்மனியிலிருந்து பணம் பெற்றுக் கொடுத்தனர். யேர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களிலேயே இவர்கள் தமது பிரயாணத்தை வைத்துக் கொண்டனர். அவ்வாறாக ஆழ்கடலில் யேர்மன் நீர்மூழ்கியொன்றில் பிரயாணஞ் செய்து கொண்டிருந்த அ. கு. இராணுவத் தலைவர் சோண் றசல் நடுக் கடலிலேயே மாண்டு போனார். அவர் கடலிலேயே அடக்கஞ் செய்யப்பட்டார்!

யேர்மனி மீண்டும் அயர் நாட்டில் குண்டுகள் பொழிந்தது. டப்ளினிலும் வட அயர்நாட்டிலுள்ள பெல்பஸ்றிலும் குண்டுகள் வீழ்ந்தன. பெல்பஸ்றில் பெரும் தீயொன்று ஆரம்பமாகியது. பெல்பஸ்ற் தற்போது ஆங்கில ஆட்சிக்குக் கீழ் இருந்தாலும் பெல்பஸ்ற் மக்கள் தன் நாட்டு மக்களே என முடிவு செய்த பிரதமர்




புரட்டஸ்தாந்தருமான மூனைவர் டக்ளஸ் ஹைட் நாட்டின் முதலாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் ஏமன் டி வேலராவைப் பிரதம மந்திரியாக நியமித்தார். டி வேலரா, முன்னர் மந்திரிகளாக இருந்தவர்களையே மீண்டும் மந்திரிகளாக நியமித்தார்.

இங்கிலாந்துக்கும் அயர் நாட்டுக்கும் இடையில் இன்

45 ஆசனங்களையும்தொழிற் கட்சி 9 ஆசனங்களையும் சுயேச்சையாளர்கள் 7 ஆசனங்களையும் கைப்பற்றினர். பதினறு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற டி வேலரா அயர் நாட்டின் இரு பகுதிகளையும் இணைப்பதற்காக உலக அபிப்பிராயத்தைத் திரட்டப் பிரசாரஞ் செய்யலானார். ஆனல் சட்ட விரோதமாக்கப்பட்ட அ. கு. இராணுவம் இங்கிலாந்தில் நாசகார வேலைகளை ஆரம்பித்ததால் அந்தப் பிரசாரம் அவ்வளவாகப் பலனளிக்கவில்லை.

லில் வைத்தது. தடுப்புக் காவலிலிருந்த இவர்களில் பலர் உண்ணாவிரதம் இருந்ததால் அவர்களை விடுதலை செய்ய வேண்டியதாயிற்று.

1940ம் ஆண்டு இறுதியில் அடையாளமறிய முடியாத விமானங்கள் அயர்நாட்டில் வெக்ஸ்பட் மாவட்டத்திலுள்ள பாற்பண்ணையொன்றின் மீது குண்டுகள் பொழிந்தன. அங்கு தொழில் பார்க்கும் பல மங்கையர் உயிர் நீத்தனர். குண்டுகளைப்

## இணைப்பு வேலையில் இரகசிய ராணுவம்

வார். 60 உறுப்பிளர்கள் உள்ள மூதவையில் 11 உறுப்பினர்கள் பிரதம மந்திரியால் நியமிக்கப்படுவர்; அறுவர் பல்கலைக் கழகங்களால் தெரிவு செய்யப்படுவர்; ஏனையோர் மக்கள் சபையால் தெரிவு செய்யப்படுவர். மூதவை ஓர் ஆலோசனைச் சபையாகவே கருதப்படும். இங்கிலாந்தின் மன்னர் பொது நல அமைப்பின் தலைவராக மட்டுமே கணிக்கப்படுவர்.

1937ம் ஆண்டு முடியும் கட்டத்தில் புதிய யாப்பு முறை பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்பின் மக்கள் புதிய யாப்பு முறையை ஏற்றுக்

னும் எஞ்சி நிற்கும் பிரச்சினைகளைச் சமாதான முறையில் தீர்ப்பதற்காகப் பிரதமர் டி வேலரா 1938ம் ஆண்டு ஜனவரியில் லண்டனுக்குப் பிரயாணமானார். அங்கு அவர் பிரித்தானியப் பிரதமர் நெவில் சேம்பளினுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். காணிவரி போன்ற நிதிப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்ப்பதற்காக அயர்நாடு பிரித்தானியாவக்கு 100 லட்சம் பவுண் கொடுக்க வேண்டும் என இரு பிரதமர்களும் முடிவு செய்தனர். அத்தோடு பிரித்தானியா அயர் நாட்டுப் பண்டங்களுக்கு விதிக்கும் ஆயத் தீர்வையும் அயர் நாடு பிரித்தானியப்

### அரங்கம் 34

இந்த நேரத்தில் ஐரோப்பாவெங்கும் போர் மேகங்கள் காணப்படலாயின. யேர்மன் சர்வாதிகாரி ஹிற்லர்முழுஉலகையுமே ஆட்டிப் படைக்க எண்ணினர். இந்த யுத்தத்தைப் பொறுத்த மட்டில் அயர் நாடு நடுநிலைமைக் கொள்கையையே கைப்பிடிக்குமாயினும் அயர்நாடு தாக்கப்பட்டால் அதை எதிர்ப்பதற்காகப் பிரதமர் டி வேலராவும் பாதுகாப்பு அமைச்சர் ஏய்க்கனும் ஆயத்தங்கள் செய்தனர். அயர்நாட்டின் ஆண்களெல்லோரும் படைகளில் வந்து சேர வேண்டும் என அவர்கள் அறை கூவினர். [illegible] நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்காக ஓடோடி வந்தனர்.

## குண்டு வீச்சுக்கு மங்கையர் பலி

போட்ட விமானங்கள் யேர்மனியைச் சேர்ந்தவையா, பிரித்தானியாவைச் சேர்ந்தவையா என முதலில் அறிய முடியாது போயினும் காலஞ் செல்லச் செல்ல அவை யேர்மன் விமானங்களே எனத் தெரியவந்தது. அயர் நாட்டைப் பயமுறுத்தினல் அயர் நாடு தம்பக்கம் சேரும் என யேர்மனி எண்ணியது போலும் பயமுறுத்தலுக்குப் பணியாத அயர்நாட்டைச் சாணக்கியத்தால் தம் பக்கம் இழுக்க யேர்மனி முடிவு செய்தது. அயர் நாட்டின் உதவியைப் பெற்று அயர் நாட்டைத் தளமாகப் பாவித்து ஓரிரவிலேயே இங்கிலாந்தை ஒழிப்பது

டி வேலரா, தீயணைக்கும் படைகளையும் மற்றும் உதவிகளையும் பெல்பஸ்ற்றுக்கு அனுப்பினர்.

யேர்மன் படைகள் ஒரு புறத்திலும் யப்பான் படைகள் மறுபுறத்திலும் உலகை விழுங்கிக் கொண்டு வந்தன. இதைக் கண்ட ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் 1941ம் ஆண்டு டிசெம்பரில் போரில் ஈடுபடலாயின. அமெரிக்கப் படைகள் பிரித்தானியாவுக்கு உதவி செய்வதற்காக பெல்பஸ்ற்றில் வந்து இறங்கின. தன் அனுமதியின்றித் தனது நாட்டில் அமெரிக்கப் படைகள் இறங்கியதைப்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 டிசம்பர் மாதம் 22-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## அறப் போர்!

அடுத்த வாரம் தொடக்கம் தமிழ் பேசும் மக்களைத் தனிச் சிங்களத்தால் ஆளத் தொடங்குவார்கள் சிங்கள ஏகாதிபத்திய வாதிகள். அன்று தமிழ் பேசும் மக்களுக்குத் துக்க தினம்.

தமிழ்ப் பகுதிகளிற் சிங்களத்தைத் திணிக்க தீவிர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. சிங்களத்தைத் திணிப்பதென்பது தமிழ் மொழியை அழிப்பதே. தமிழ் மொழி அழிந்தால் தமிழ் பேசும் இனமும் அழிந்து விடும். தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களவர்களாக மாறிவிடுவர். எனவே தமிழ் பேசும் இனம் வாழ்வதா அழிவதா என்று நிர்ணயிக்கும் கட்டம் வந்துவிட்டது.

சிங்களத் திணிப்பு தமிழ் பேசும் மக்களின் விருப்பத்துக்கு மாருனது. அவர்களின் பாரம்பரிய கலாசாரத்துக்கு மாருனது. அவர்களின் எதிர்கால நலன்களுக்கு மாருனது. எல்லாவித ஜனநாயக கோட்பாடுகளுக்கும் மாருனது. சிங்களம் அவர்களுக்கு அன்னிய மொழி. அவர்களின் பலத்த எதிர்ப்பினூடே பலவந்தமாக அவர்கள் மீது இந்த அன்னிய மொழி திணிக்கப்படுகிறது.

தமிழ் மொழி மீதும், தமிழ் பேசும் இனத்தின் மீதும் இத்தாக்குதல் பல கோணங்களிலிருந்து நடத்துகின்றனர்.

(1) தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் இனி சிங்களத்தில் மட்டுமே செயல்படும். இதனுல் சிங்களம் படிக்கத் தெரியாத, சிங்கள எழுதத் தெரியாத, சிங்களம் பேசத் தெரியாத இந்நாட்டுத் தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்களத்தால் மட்டுமே அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். இது கட்டளை — நிர்ப்பந்தம் — சட்டம்.

(2) தமிழ்ப் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றங்களில் சிங்களத்தைத் திணிப்பது மற்ருெரு தாக்குதலாகும். அவை பெரும்பாலும் தமிழில் கருமமாற்றும் மன்றங்கள். அவற்றிற் பணியாற்ற சிங்கள ஊழியர்கள் இன்று அனுப்பப்படுகிருர்கள். உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் உபயோகத்தை ஒழித்து, அவற்றின் அலுவல்களைச் சிங்களத்தில் நடத்துவதற்கே இந்த ஏற்பாடு.

(3) சிங்கள வகுப்புவாதிகளின் ஐந்தாம் படையினரையும், எட்டப்பர்கூட்டத்தையும்கொண்டு நகரங்களிலும், கிராமங்களிலும், சிற்றூர்களிலும் பல சலுகைகள் வழங்குவதாகப் பசப்பி, பாமரமக்களை மயக்கி, அவர்களைச் சிங்களத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தூண்டுவதற்கான சூட்சமத் திட்டங்களும் அமுல் நடத்தப்படவிருக்கின்றன.

(4) பாடசாலைகள் மூலம் சிங்களத் திணிப்பு தீவிரமாக நடத்தப்படுமாம். வட, கிழ் மாகாணங்களிலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் உடனடியாக 1000 சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி பிரதமர் கல்வி அமைச்சருக்கு உத்தரவிட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. பெற்றேர்கள் மீது பல்வேறு நிர்ப்பந்தங்களைச் சுமத்தி, "சிங்கள மின்றி வாழமுடியாது" என்ற மனப்பேதலிப்பை உண்டுபண்ணுவதே ஆட்சியாளரின் திட்டம். அதேசமயத்தில் தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டால், பெற்றேர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தங்களின் பிள்ளைகளுக்குச் சிங்களம் கற்பிக்க முன்வருவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இவ்வாறு பல கோணங்களிலிருந்து சிங்கள மொழிப் படையெடுப்பு நடைபெற விருக்கிறது. தமிழ் மொழியை அழித்து விட்டு தமிழ், முஸ்லிம் மக்களைச் சிங்களவர்களாக்குவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம். சிங்களவர்களாக மாறிவிட்டால் தமிழ் பேசும் இனம் அழிந்து விடும். சிங்கள மொழியும், சிங்கள இனமும் மட்டுமே எஞ்சி நிற்கும்.

இன்று "இனக் கொலை"யில் தீவிரமாக இறங்கியுள்ள ஆட்சியாளர் 1956 முதல் போலித்தனமான வாக்குறுதிகளை அளித்து வந்தனர். தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் வழங்கப்படும் என்று உலகிற்கு எடுத்துக்காட்ட செய்த செப்படி வித்தைகள்தான் அவை.

தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்பு கொள்ளலாம் என்று ஒரு சமயம் வாக்களித்தனர். 'நியாயமான தமிழ் உபயோகம் சட்டம்" என்ற பெயரால் ஒரு சட்டத்தையும் இயற்றி வைத்தனர். பிரதேச சபைகள் அமைத்து தமிழ் பேசும் மக்களுக்குத் தங்கள் பிரதேசங்களில் தாய் மொழி மூலம் நிர்வாகம் நடத்த அனுமதிப்போம் என்று பிறிதொரு சமயம் உறுதி கூறினர்.

அந்த வாக்குறுதிகளும் பசப்புப் பேச்சுக்களும் இன்று காற்றல் பறந்துவிட்டன. ஆரம்பக் கூட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்ப்பைத் தணிக்கக் கையாண்ட உபாயங்கள்தான் அவை. இன்று சிங்கள ஏகாதிபத்திய வாதிகள் தங்களின் சுய பாசிச உருவத்தைக் காட்டத் தொடங்கியுள்ளனர். தமிழ், முஸ்லிம் மக்கள் மீது முழு மூச்சுடன் சிங்களத்தைத் திணிக்க ஆயுதப் படை, சட்டம், உத்தியோகத்தர் பட்டாளம் ஆகியோர் உதவியுடன் சிங்கள வகுப்பு வெறியர்கள் படை யெடுக்கின்றனர்.

சிங்களத் தலைவர்களின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்க வேண்டாமென்று தமிழரசுக் கட்சி அன்றிருந்தே தமிழ் பேசும் மக்களை எச்சரித்து வந்தது.

அத்துடன் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், மாநாடுகள், சத்தியாக்கிரகம், எல்லாம் தமிழ் இயக்கம், பகிஷ்காரம், பாத யாத்திரை முதலிய பல்வேறு போராட்டங்களை நடத்தி, தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பு உணர்ச்சியை உருவாக்கி சிங்களத் திணிப்பை எதிர்த்து வந்தது தமிழரசுக் கட்சி. தமிழ், முஸ்லிம் மக்களெல்லோரும் ஐக்கியமாக ஒரே அணியில் ஒரே கட்சியின் கீழ் திரண்டு நிற்பதைக் கண்டு ஆட்சியாளர் மலைத்தனர்.

தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பின்றேல், சிங்கள வகுப்புவாதிகள் சில ஆண்டுகளுக்கே முன்பே தங்களின் "இனக்கொலை" நடவடிக்கையில் வெற்றி கண்டிருப்பர்.

"சிங்களத்தைத் திணிப்போம்" என்ற தீர்க்கமான முடிவுடன் இம்முறை நடவடிக்கை எடுக்கின்றனர் ஆட்சியாளர். அந்த முயற்சி நிச்சயம் முறியடிக்கப்பட வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் மீது சிங்களத்தைத் திணிக்க முடியாது என்பதைச் செயல் மூலம் ஆட்சியாளருக்கு உணர்த்த வேண்டும்.

"ஜனவரி முதலாந் திகதி தொடக்கம் எல்லா அலுவல்களையும் தமிழிலேயே செய்வோம். சிங்களத்தைத் தீண்டவும் மாட்டோம்" என்று ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டும். "எல்லாம் தமிழ் இயக்கம்" தீவிரமாக நடத்தப்பட்டால், அதுவே சிங்களத் திணிப்பை வலுவிழக்கச் செய்துவிடும்.

அத்துடன், பகிஷ்கார இயக்கத்தை மக்களின் பூரண ஒத்துழைப்புடன் விரிவான முறையில் நடத்தவும் வேண்டும். சிங்களத்தைத் திணிப்பவர்களை (சிங்களம் கற்பிற்கும் ஆசிரியர்கள் உட்பட) பகிஷ்காரம் செய்தல் திணிப்புக்குப் பெருந் தடை ஏற்படுத்துவதேயாகும்.

அறப்போரின் இதர பல அம்சங்களையும் கையாண்டு, திணிப்பைக் கைவிடுமாறு ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒத்துழைத்து ஒற்றுமையுடன் உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். வழக்கம் போலவே அடக்குமுறை பாயும் என்பது உண்மையே! அதற்கு அஞ்சாது திடசித்தத்துடன் போர்க் கொடியை உயர்த்திப் பிடிக்க வேண்டும். தியாகமின்றேல் வெற்றியில்லை. "பயத்தை ஒழித்தவன்தான் உண்மைச் சத்தியாக்கிரகி" என்ருர் மகாத்மா.

ஆனுல் போராட்ட முறைகள் அத்தனையும் காந்தி மகான் காட்டிய அஹிம்சா வழியிலே தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற வேண்டும். அந்த வழியொன்றே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வெற்றியைக் கொண்டு வரும்.

மற்ருெரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிருேம். இந்த அரசாங்கத்தின் ஆணிவேர் இன்று ஆட்டம் கண்டுள்ளது. அதன் வீழ்ச்சி வெகு தூரத்திலில்லை. எனவே அரசாங்கத்தின் சிங்களத் திணிப்பு நிச்சயம் வெற்றிபெற முடியாது. [illegible] மலைபோல் கிளர்ந்தெழுந்தால், சிங்களத் திணிப்பைக் கைவிடுவதைத் தவிர ஆட்சியாளருக்கு வேறு வழி கிடையாது.

# ஆசியாவில் அரசியல் கொந்தளிப்பு!

## இலங்கையின் பங்கு என்ன?

இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையையிட்டு இன்று பலதரப்பட்ட கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. வெளி நாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய மூதவையில் ஒரு விவாதத்தை நடத்த வேண்டுமென்று செனட்டர் மு. மாணிக்கம் கேட்டுள்ளார். செனட்டர் வேணன் திசநாயக்கவும் இத்தன்மையான கருத்தையே வெளியிட்டுள்ளார்.

தூரகிழக்கில் சீனவின் ஆதிக்கமும் செல்வாக்கும் பெருகி வருவதைக்கொண்டு இன்று உலக அரசியல் சூழ்நிலைகளில் பலத்த மாறுதல்கள் ஏற்பட்டுவருவது கண்கூடு. மக்கள் தொகையை அதிகமாகக் கொண்ட சீன அண்டை நாடுகளுடன் பலதரப்பட்ட முறைகளில் உறவு கொண்டு இயங்கி வருகிறது.

சில நாடுகள் சீனவின் ஆக்கிரமிப்புக்குப்பயப்படலாம். வேறு சில நாடுகள் சீனவின் உதவிக்காக ஏங்கித் தவிக்கலாம். இன்னும் சில நடுவு நிலைமையாகவிருப்பதற்காக வெறுமனே சீனவுடன் நட்புக் கொண்டாடலாம். எது எவ்வாறிருப்பினும், சீன தனக்குச் சாதகமான ஒரு வட்டத்தை ஏற்படுத்த முயன்று வருகிறது என்பது தெளிவாகிறது.

இந்தியா மீது எல்லைப் போர் தொடுத்தபோது சீன மீது பல நாடுகள் தமது அதிருப்தியை வெளிப்படையாகவே காட்டியுள்ளன. இந்த அதிருப்தியைத் தொடர்ந்து வளர்ச்சியுற விட சீனவுக்கு விருப்பம் இல்லை. ஆகவே நேச உறவை ஒரு சில நாடுகளில் பெற்று விட சீனவுக்கு ஆசை தோன்றியிருக்கிறது இயற்கையானதே.

பாகிஸ்தான் உதயமாகிய நாள் தொடக்கம் — கடந்த 16 ஆண்டுகளாக—இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நேச மனப்பான்மை வளர முடியாது போய் விட்டது காஷ்மீர்த் தகராறு தீர்ந்தாலன்றி இரு நாடுகளுக்கும் உறவு ஏற்பட வழியில்லை.

### ஆயுத பலம்

சுதந்திரம் பெற்ற பாகிஸ்தான் மேற்கு நாடுகளுடன் செய்து கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையின் பிரகாரம் ரூ. 66000 லட்சத்துக்குப் பெறுமதியான நவீன போர்க்கருவிகளை, மேற்கு நாடுகளிடமிருந்து பெற்றுள்ளது.

நமது அரசியல் நிருபர்

சீனவும் புரட்சிக்குப் பின்னர் ருஷ்யாவிடமிருந்து பெருவாரியான நவீன ஆயுதங்களைப் பெற்றிருக்குறது. ஆகவே சீனவும் பாகிஸ்தானும் ஆயுத பலத்தில் இன்று ஓரளவு மேம்பாடு கொண்டுள்ளன.

எல்லையில் சீனத் தொல்லையைப் போக்க இந்தியா மேற்கு நாடுகளிடமிருந்து பெறும் போர்க்கருவிகளின் பெறுமதி ரூ 6000 லட்சம்தான். இந்நிலையில் இந்தியா பாகிஸ்தானையோ சீனவையோ தாக்க முற்பட முடியாது.

### இலங்கை-இந்திய் உறவு

கலை கலாச்சாரம், மதம், பண்பாடு முதலியவற்ருல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகவும் நெருங்கிய உறவு பண்டு தொட்டு இருந்து வருகிறது. இலங்கையில் உருவான, உலகில் எங்குமே கண்டும் கேட்டுமிராத, பிரஜாவுரிமைச் சட்டத்திஞல் கணிசமான தொகையினரான இந்தியயிம்சாவளியினர், நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளனர். இவர்களை இந்தியா தன்னகத்தே ஏற்றுக்கொண்டுவிட வேண்டுமென்று இலங்கை வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இந்த நாடற்றவர் பிரச்சினையினல் தான் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் கருத்து வேறுபாடுஇருந்துவருகிறது.

### சீன வட்டம்

சீன எல்லைச் சண்டையினுல், இந்தியாவுக்கு விரோதமாக ஒரு வட்டத்தை ஏற்படுத்துவதில் முனைந்து வருகிறது. பாகிஸ்தான் காஷ்மீர்ப் பிரச்சினையை வைத்துக் கொண்டு சீனவுடன் சேர்ந்து கொண்டு இந்தியாவுக்கு எதிரான வேலைகளைச் செய்கிறது.

இந்தோனேஷியாவும் சீனவுக்குச் சார்பாகிக் கொண்டு வருகிறது. தென்கிழக்கு ஆசியாவின் தலைமைப் பதவியைத் தான் அபகரிக்க வேண்டுமென்று கருதும் இந்தோனேஷியா, மலேசியாவுக்கு நேரு அனுசரணையாக விருப்பதையும் விரும்பவில்லை. இந்தத் தலைமைக் காய்ச்சலே இந்தோனேஷியாவைச் சீனவின் சார்புக்கு இழுத்துவிட்டுள்ளது.

பர்மாவைப் பொறுத்த வரையில் தனது எல்லைப் பிரச்சினையில் சீன மோதிவிடக் கூடாதே என்ற பயம் உண்டு; அதனுல் சீனவைப் பகைக்க விரும்பவில்லை.

சீன-இந்திய எல்லை யுத்தத்தை நிறுத்தவும், இரு நாடுகளும் ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்காகவும் இலங்கைப் பிரதமர் கொழும்பு மாநாட்டைக் கூட்டினர். இம்மாநாட்டின் முடிவைச் சீன ஏற்க முற்படவில்லை. மீண்டுமொரு ஆசிய ஆபிரிக்க மாநாட்டைக் கூட்டவே சீனவும் பாகிஸ்தானும் முனைகின்றன. ஆபிரிக்க நாடுகளையும் இதற்கு இணங்க வைக்க சீனப் பிரதமர் சூ-என்-லாய் முயற்சித்து வருகிருர் தென் கிழக்கு ஆசியாவில் தனக்குச் சாதகமாகப் பல நாடுகளை ஏற்கனவே சீன தயார் செய்துவிட்டது. இலங்கையையும் தனது வலைக்குள் இழுத்துக் கொள்ளுவதற்கேற்ற வகையில் ராஜதந்திரத்தைக் கையாண்டு வருகிறது சீன. பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் விஜயமும் பேச்சுவார்த்தைகளும் மேற்படி கூற்றை மெய்ப்பிக்கின்றன என்று பல அரசியல் பிரமுகர்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

### மீண்டும் யுத்தம்?

சீனவின் தற்காலப் போக்கை மேலோட்டமாகக் கணிக்கும் அரசியல் அவதானிகள், மீண்டும் விரைவில் சீன இந்தியாவின்மேல் படையெடுப்பை நடாத்தக் கூடும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். காஷ்மீர்த் தகராறிஞல் தூண்டப்படும் பாகிஸ்தானும் சீனவின் தாக்குதலுக்கு ஊக்கமளிக்கலாம். இதே சூழலில் இலங்கையின் நிலை எதுவாக இருக்குமென்பதை ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

(அடுத்த இதழில் முடியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி 1உ கரி நாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களனைவருக்கும் ஒரு கரி நாளாகும்.

இந்தக் கரிநாளில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பாரம்பரிய பிரதேசம் அனைத்தையும் கறுப்புக் கொடிகள் அலங்கரிக்கட்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், வாகனங்கள் ஆகிய எல்லாவற்றிலும் கறுப்புக்கொடிகளை ஏற்றித் துக்கம் அனுட்டிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் பேசும் மகனின் தலையாய கடமையாகும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய நகரங்களில் அன்றைய தினம் காலை 10 மணிக்கு எதிர்ப்பு நடவடிக்கைகள் பிரமாண்டமான முறையில் ஆரம்பமாகும். மாலையில் பொதுக் கூட்டங்களும் நடைபெறும். பக்கத்து ஊர்களிலிருந்து ஆண்களும், பெண்களும், பாலரும், வயோதிபரும் திரண்டு வந்து இயக்கங்களில் கலந்து கொள்ள வேண்டும். சிங்களச் சட்டத்தின் ஆணவப் பிடியை எதிர்த்துத் தமிழ் பேசும் இனம் சூறுவளியாக ஆர்ப்பரித்து எழுந்து விட்டது என்பதை உலகறிய வைக்க வேண்டும்.

2—1—64 முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிங்களத்தில் கடமையாற்றும் காரியாலயங்களில், தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மட்டும், எதிர்ப்பு இயக்கங்கள் தொடர்ந்து நடைபெறும். இவ்வெதிர்ப்பு இயக்கங்கள் முன் கூட்டியே போதுமான ஒழுங்குகள் வகுக்கப்பட்டுச் சிராக நடைபெறுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதால், எதிர்ப்பு இயக்கங்களில் பங்குபற்ற விரும்பும் தொண்டர்கள், உடனடியாக யாழ்ப்பாணம் 25, 2ம் குறுக்குத் தெருவிலுள்ள தமிழரசுக் கட்சிக் காரியாலயத்திலோ, தத்தம் தொகுதிகளிலுள்ள கட்சிக் கிளைச் செயலாளரிடமோ அல்லது பாராளுமன்ற உறுப்பினரிடமோ தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

### தர்ம யுத்தம்

கட்சியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் மட்டுமல்லாமல் தமிழ் பேசும் பொது மக்கள் தாங்களாகவே தங்கள் இல்லங்களிலிருந்து கொண்டு அரசாங்கத்தின் சதித்திட்டங்களை முறியடிக்கவும் வழியுண்டு.

சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்ப்பதை ஒரு தர்ம யுத்தமாக ஒவ்வொருவரும் கருத வேண்டும்.

அரசாங்கத்துடனே, வேறு வகையிலோ மேற்கொள்ளும் நடவடிக்கைகளனைத்தையும் தமிழிலேயே செய்தல் வேண்டும்.

### 1000 சிங்கள ஆசிரியர்கள்

சிங்கள ஆசிரியர்கள் ஆயிரம் பேரைத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பவும் அரசு தீர்மானித்துள்ளது. இவ்வாசிரியர்களையும், சிங்களத்தை அமுல் நடத்தும் ஊழியர்களையும் தமிழ் பேசும் மக்கள் எவ்வெத்துறையில் சாத்தியமாகுமோ அவ்வத் துறையில் பகிஷ்கரிக்க வேண்டும்.

மேற்படி தமிழியக்கம், பகிஷ்கரிப்பு இயக்கம் ஆகியவற்றைத் தமிழ் பேசும் மகன் ஒவ்வொருவரும், தானே படைத்தளகர்த்தனாக நின்று, சிங்களச் சட்டம் என்னும் எதிரியை முறியடிக்க முன் வந்த போர் வீரனைக் கருதிக் கருமமாற்ற வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2—1—64ல் ஆரம்பமாகும் எதிர்ப்பு இயக்கம் ஏனைய இடங்களுக்கும் போதுமான முன்னறிவித்தலுடன் விஸ்தரிக்கப்படும்.

### மட்டக்களப்பு கிளை அலுவலகம்

மட்டக்களப்பு அந்தோனியார் தெரு 58ம் இலக்க இல்லத்தில் தமிழரசுக் கட்சிக் கிளை அலுவலகம் செயற்பட ஆரம்பித்திருக்கிறது. திரு. பொ. செல்லத்துரை அலுவலக நிர்வாகப்பொறுப்பை ஏற்றுள்ளார். அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழரசுக்கட்சிக் கிளைச் செயலாளர்களையும், பொது மக்களையும் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் கேட்டுள்ளார்.

# தமிழ் மக்களின்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பற்றி அவர்கள் அறிந்துள்ளனர்."

### ஆசிய — ஆபிரிக்க மாநாடு வேண்டும்

லங்கா தீப 17—12—63ந் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதியும், இலங்கைப் பிரதமரும் விடுத்துள்ள கூட்டறிக்கையின்படி ஓர் ஆசிய — ஆபிரிக்கமாநாட்டை, கூடிய விரைவில் கூட்ட வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளது.

"தேசிய இதயப் புற்றுநோய்" என்ற தலைப்பின் கீழ் 18—12—63ந் திகதி சவஸ பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்தாலயங்களைச் சுற்றி வளைக்கக்கூடியதாகத் தமிழ்க் கிராமங்கள் இரகசியமாக அமைக்கப்படுவதற்கு இடவசதியளிக்கும் அரசாங்கத்தின் தன்னிச்சையான கொள்கையைக் கைவிடுகிறார்களா, இல்லையா என்று நேரிடையாகக் கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சேருவில புனித பிரதேசத்தைத் தமிழர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக உயிர்த் தியாகத்துக்கும் தயாராகப் பணியாற்றும் சேருவில விஹாராதிபதி தேரோவும், திகாமடுலு பௌத்த சங்கமும் இதுவரை இதுபற்றி நடத்திய கிளர்ச்சி பயன் பெறாதிருப்பதற்குக் காரணம் அரசாங்கம் கண்ணைத் திறந்து பார்க்க மறுப்பதேயாகும்.

ஆகவே பொதுவாக சிங்களவரினதும், குறிப்பாக பௌத்தர்களினதும் இதயத்தைப்பற்றி விரிந்து கொண்டுவரும் இந்தக் "கள்ளத்தனமான தமிழர்களின் கிராமங்கள்" என்னும் புற்றுநோயை ஒன்று அரசாங்கம் முன்வந்து தீர்க்க வேண்டும்; இல்லையேல் இனத்தையும், சமயத்தையும் பாதுகாப்பதற்கென வரம்பெற்றுள்ளவர்களுக்கு அதனைச் செய்ய உதவி புரிய வேண்டும்."

'யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும், யாழ். புகையிரத நிலையத் திறப்பு விழாவும்.'

அடுத்த வாரம் எதிர்பாருங்கள்

# சுதேசிய மொழிகளில்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க வேலைத்தலங்களல்லாத வியாபாரவேலைத் தலங்களிலெல்லாம் ஆங்கிலக் கல்வி கற்றவர்களை ஏன் வேலையில் அமர்த்த வேண்டும்? சகல கருமங்களும் சுதேச மொழி வல்லுநரைக் கொண்டு ஏன் நடாத்துவிக்கப்படாது?

ஆங்கிலத்தில் அட்சரமுந் தெரியாத செட்டிப்பிள்ளைகள் தங்கள் தொழிலை எவ்வளவோ திறமையுடன் நடாத்தி எண்ணிறந்த பொருள் ஈட்டுகிறார்கள். அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியேனும் சகல கருமங்களும் சுதேச மொழிகளில் ஏன் நடைபெறக் கூடாது?

ஆங்கில அரசாட்சியின் கீழுள்ள பர்மா நாட்டில் பொலிஸ் நிலையங்களில் உள்ள விசாரணைகள் எல்லாம் சுதேச மொழிகளிலேயே நடைபெறுகின்றன. அங்குள்ள பதிவுப் புத்தகங்கள் முதலியன எல்லாம் சுதேச மொழியிலேயே நடைபெறுகின்றன. கீழ் உத்தியோகத்தர்கள் அறிக்கை அனுப்புவதும் அம்மொழியிற்றான்.

நகர சங்க வரிப்பணத்துக்குப் பற்றுச்சீட்டாக வழங்கப்படும் பத்திரங்களில் ஆங்கில அட்சரம் ஒன்றேனும் காண்பது அரிதாகும். அவ்விதமே இங்கும் ஏன் நடைபெறப்படாது? தமிழ் மக்களுள்ள இடங்களில் தனித் தமிழிலும், சிங்கள மக்கள் உள்ள இடங்களில் தனிச் சிங்களத்திலும் ஏன் இருக்கப்படாது? இலங்கையில் வழங்கப்படும் பற்றுச்சீட்டு முதலியவற்றில் முக்கிய பாகங்கள் ஆங்கிலத்திலும் சில வரிகள் மாத்திரம் சுயமொழியிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

நகரங்களில் சகல கருமங்களும் சுய மொழியில் ஏன் நடைபெறப்படாது? அதற்குத் தடையாகவுள்ளது யாதுமுளதா?

இந்தியா, பர்மா முதலிய நாடுகளில் தந்தி தபாற்கந்தோர்களில் முத்திரை விற்பதற்கும் தந்திகளை எடுப்பதற்றும் விலாசம் எழுதி விலாசதாரர்களுக்குக் கொடுப்பதற்குச் சேவகன் வசம் ஒப்பிக்கும் கடமைகளைச் செய்வதற்கும் சொற்ப சம்பளங்களில் உள்ளூரவர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இலங்கையில் முத்திரை விற்பது முதலிய இவ்வற்பத் தொழில்களைச் செய்வதற்கும் உயர்ந்த வேதனம் பெறும் உத்தியோகத்தர்களே அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அதனால் எவ்வளவு பண நட்டமென்பது ஊன்றி யோசித்தாற் புலனாகும்.

தந்திச் செய்திகள் அனுப்புவதற்குப் பழக்கப்பட்டவர்கள் அதே தொழிலன்றி ஏனைய கிளாக்குமார் செய்யும் வேலைகள் பார்ப்பதற்கு ஏன் விடப்பட வேண்டும்? கிளாக்கு வேலைகள் செய்வதற்கு உத்தியோகத்தர்களை இவர்களிலும் குறைந்த வேதனத்தில் ஒவ்வொரு பெரிய தபாற்கந்தோர்களிலும் உள்ளூரவர்களை அமர்த்துவதால் அதிக பொருள் மிச்சப்படுகிறது.

உதாரணமாக காலை 7 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையிற் திறந்திருக்கும் ஒரு தந்தி தபாற்கந்தோரில் ஆறு உத்தியோகத்தர் தேவைப்பட்டால் தந்திச் செய்தி அனுப்பக்கூடியவர்கள் இருவர் போதுமானது. ஏனைய பார்சல்கள் தந்தி தபால்களை ஏற்றல் தபால்களைக் கட்டியனுப்புதல் முதலிய வேலைகளில் உள்ளூரவர்களைத் தக்க பொறுப்புடன் சொற்ப வேதனத்துக்கு அமர்த்தலாம். அங்ஙனமே உள்ளூரவர்களை அமர்த்துவதால் ஆள்மாருட்டமாகத் தபாற்கந்தோர்களிற் பணம் பெற்றுச் செல்லுபவர்களையும் தடைபண்ண வியலும்.

இவ்வித முறைகளைப் படிப்படியாக அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருதலால் ஆங்கிலக் கல்வியின் பொருட்டுச் செலவாகும் பெரும் பொருள் மிச்சப்படவேதுவாகும். இந்திய நாடு முன்னேற்றமடைந்ததற்குக் காரணம் இத்தகைய முறைகள் அநுஷ்டானத்திலிருப்பதே.


## உங்கள் கவலை என்ன?



★ கடன் தொல்லையா? கஷ்ட நிலையா?
★ காதலில் வெற்றி பெற வேண்டுமா?
★ இல்லற இன்பமா? குடும்ப சச்சரவா?
★ வழக்குக் கஷ்டமா உத்தியோக உயர்வா?
★ பரீட்சையில் சித்தி பெற வேண்டுமா?

அரசாங்க உத்தரவு பெற்ற மந்திராச்சாரியார்.

**பி.எம். திசாநாயக**

அருத எண்ணெய் அலுவலகம்
கம்பளை.


# அட்டூழியம் புரியும்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காலம்: புரட்டாதி (செப்) 1961.

கூறுவது: 'தினகரன்' 19-9-61ந் திகதி ஏடு. விபரம் இதோ!

"மூன்று முகாம்களில் காவலில் வைக்கப்பட்டுள்ள நானூற்றிருபத்தேழு பேர்கள் கள்ளக் குடியேற்றக்காரர்களெனச் சந்தேகத்தின் மீது கைதியானவர்கள்! சுகாதார நிலை மோசம்! பெண்கள் துயரம்! குழந்தைகள் பரிதாப நிலை!"

"இவர்களில் 1960ம் ஆண்டு ஜூன் மாதம் 25ந் திகதி பன்னிரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தலைமன்னார் தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒரு வருடம் இரு மாதங்களுக்கு மேலாகக் காவலில் இருக்கின்றனர்.

கோட்டன் எனும் இடத்தைச் சேர்ந்த நாராயண நாடார் மகன் ஆனந்த பாண்டியன் 26—5—60ல் கைது செய்யப்பட்டார். தலைமன்னார் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் இவர் ஏறக்குறைய ஒரு வருடமும் மூன்று மாதமும் (15 மாதங்கள்) காவலில் இருக்கிறார்.

"தடுப்புக் காவலிலுள்ள மேற்பட்டோரின் சுகாதார மற்றும் நிலைகள் மோசமாக இருப்பதாகப் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

"இவர்களில் 35 பேர் பெண்கள். இவர்கள் தடுப்புக் காவலிலுள்ள சிலரின் மனைவியரும் பெண் குழந்தைகளுமாவர்...... பச்சிளங் குழந்தைகளின் நிலை பரிதாபமாக இருக்கிறதென்றும் சரியான உணவு கிடைக்காமையே இதற்குக் காரணமெனத் தெரிகிறதென்றும் நமது நிருபர் கூறுகிறார்."

இதுதான் தடுப்புக் காவல் முகாம் அன்றும் — இன்றும் — கூறும் சோகக் கதை! அன்று 1961ம் வருடம் இருந்ததிலும்பார்க்க இன்று நிலை திருந்திவிடவில்லை என்பதை அறிய வேண்டுமானால் — ஆளுவோரின் மிருகத்தனம் தணிந்துவிடவில்லை என்பதை உணர வேண்டுமானால் — கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள தடுப்பு முகாமைப் பார்வையிடுங்கள்.

யுத்தக் கைதிகளைச் சிறைப் படுத்திய கொடுஞ்சிறை சிலவற்றைப் போல முட்கம்பிகளாலெல்லாம் அடைக்கப்பட்டு அதனுள் நலிந்து நிற்கும் நூற்றுக்கணக்கான "கைதி"களைக் [illegible] போது இன்[illegible]

(13-ம் பக்கம் பார்க்க)


## வேல் படை மருந்து

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தமூவணி, பித்த வெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்
முதலிய சர்ம வியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் சிலவு வேறு

தயாரிப்பவர்கள்:
S. P. S. ஜெயம் அன் கோ.;
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விடிவு காலம்

## எஸ். எல். சவுந்தரநாயகம்

யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து சுமார் ஐந்தாறு மைல் தூரத்திலிருக்கும் உடுவில் என்ற கிராமத்திலே எனது ஆப்த நண்பர்களிலொருவரான கிறிஸ்தோப்பர் வசித்து வருகின்றார்.

நான் யாழ்ப்பாணப் பகுதிக்கு அலுவலாகப் போகும் காலங்களிலே உடுவிலுக்குத் தவறாமல் போய் நாலைந்து நாட்கள்—ஆகக் குறைந்தது ஒரு முழு நாளாவது—கிறிஸ்தோபரின் அதிதியாகத் தங்கி நின்று விருந்துண்டு அளவளாவி ஊர் திரும்புவது வழக்கம்.

ஒரு தடவை நான் கிறிஸ்தோப்பரிடம் போன பொழுது நத்தார்த் திருநாட் காலம். நத்தார்த் திருநாளுக்கு நாலு நாட்களுக்கு முன்பென்பது ஞாபகம்.

அன்று மாலை......நானும் நண்பரும் வெளியிற் கிளம்பலானோம்.

நண்பரின் இல்லத்திலிருந்து சுமார் கால் மைல் தூரத்திலிருக்கும் கள்ளுக் கொட்டில் ஒன்றில் ஆளுக்கு ஒன்றிரண்டை அடித்துக் கொண்டு அப்படியே இலேசாக நடந்து போய் இணுவில் காலிங்கன் படமாளிகையில் முதற்காட்சி படம் பார்த்துக் கொண்டு பஸ்ஸில் அல்லது வாடகைக் காரில் வீடு திரும்புவதுதான் எங்களுடைய அந்தக் குட்டிப்பிரயாணத்தின் திட்டமாகும்.

'புரோக்கிராம்'ன்படி முதலில் கள்ளுக் கொட்டிலுக்குச் சென்றோம். நாங்கள் போன நேரம் வேலன் கொட்டிலில் இருக்கவில்லை. பின்னேரக் கள்ளு இறக்கப் போய்விட்டான். வேலனின் மனைவி வள்ளிதான் வாயெல்லாம் பல்லாக எங்களை வரவேற்றாள்.

முதலில்: தென்னையில் ஆளுக் கொவ்வொன்றை வாங்கி ஒரே மூச்சில் அடித்தோம். அடுத்ததாக: ஆளுக்கு அரையரை வாங்கி வைத்துவிட்டு சுதைக்கத் தொடங்கினோம்.

வேலனின் கள்ளுக் கொட்டில் கிறிஸ்தோப்பரின் நீண்ட நாளைய வாடிக்கையான கொட்டில்.

வேலனோ, வள்ளியோ, மச்சுனோ மிக மிக நல்லவர்கள். பண்புள்ளவர்கள். வேலனின் மூத்த மகன் சுப்பிரமணியம், டேவிற் என்னும் பெயர் தாங்கி கிறிஸ்தவ மார்க்கப் பிரவேசம்பண்ணி குருமாரின் ஆதரவுடன் படித்துப் பயிற்சிபெற்ற ஒரு ஆசிரியராகக் கடமையாற்றுகிறான். ஒரு சிலரைப் போல் படித்து உத்தியோகங் கிடைத்ததும் மீண்டும் மதப் பிரஷ்டம் பண்ணிக் கொள்ளவில்லை. பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவனாகவே வாழ்கிறான். சொந்தத்தில் மோட்டார் பைசிக்கிளுமுண்டு.

வேலன் வீட்டாருக்கும் நண்பர் கிறிஸ்தோப்பருக்கும் எத்துணை பரிச்சயம் உண்டோ, அத்துணை பரிச்சயம் வேலன் வீட்டாருக்கும் எனக்குமிடையில் உண்டு.

நான் கிறிஸ்தோப்பரின் நண்பராயிருப்பதினாலும், பல தடவை அவருடன் வேலனுடைய கொட்டிலுக்கும் ஏன்-வீட்டுக்கும் போயிருக்கிறபடியாலும், நண்பருக்குக் கொண்டு போகும் இறைச்சி, கருவாடு போன்ற அன்பளிப்புப் பொருட்களில் வேலன் வீட்டாருக்கும் கொஞ்சம் கொடுத்ததினாலேயே எங்களுக்குள்ளும் உறவு வளர்ந்தது.

புளாவில் சீறிக்கொண்டிருந்த அரையையும் இழுத்தோம். இன்னுமொரு அரைக்கு ஒவ்வொருவருக்கும் இடமுமிருந்தபடியால் சற்றுத் தாமதித்தோம்......

அவ்வேளை பெனடிக்ற் மாஸ்டரும் அவருடைய நண்பரொருவரும் கொட்டிலுக்கு வந்தார்கள். வரும் பொழுதுஒரு சுறுப்பன் கையிற் கொண்டு வந்தபடியால் அவர்கள் அப்பொழுது கள்ளு வாங்கவில்லை.

வள்ளியிடம் ஒரு சிறிய கிளாஸ் வாங்கினார்கள். போத்தல் மூடி சற்று இறுக்கமாயிருந்தபடியால் அதைக் கழற்றுவதற்குச் சில நிமிடங்கள் பிடித்தன.

வேலனின் கொட்டிலுக்கு அண்மையில் ஒரு மோட்டர்கார் கராஜ் இருக்கிறது. அந்தக் கராஜ்ஜின் சொந்தக்காரர்தான் பெனடிக்ற் மாஸ்டர்.

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய பெனடிக்ற் மாஸ்டர் இளைப்பாறியபின் கார் கராஜ் நடத்துகிறார். வயது முதிர்ந்தவர், அநுபவசாலி. அவர் இலங்கை முழுவதும் மட்டுமல்ல சிங்கப்பூர், மலாயா போன்ற இடங்களுக்கும் போய்த் திரும்பியவர். நன்கு படித்தவர். அறிவாளி.

வேலனுடைய கொட்டிலிற்தான் அவருக்கும் எனக்கும் பரிச்சயமேற்பட்டது...

போன அந்தச் சில மணி நேரச் சந்திப்புகளில் பெனடிக்ற் மாஸ்டரின் மன ஆழத்தைக் கண்டுகொள்ளக்கூடிய வாய்ப்புகளெதுவுங் கிட்டவில்லை.

தன் வயதொத்த வேலனை வேலனென்று கூப்பிடுவார், வேலனுடைய மகனை 'தம்பி, மாஸ்டர்' என்று மரியாதையாகக் கூப்பிடுவதிலிருந்து கல்விக்கும் அறிவுக்கும் அவர் மதிப்புக் கொடுக்கிறாரென்பதை உணர்ந்து கொண்டேன்.

தலைகெட்ட வெறியேறிய வேளைகளில் வள்ளியிடம் கறி வாங்கிச் சாப்பிடுவதைக் கொண்டும், கொட்டிலில் சமரஸ ஞானம் பேசுவதிலிருந்தும் அவரையொரு சமத்துவவாதியென்று முடிவுகட்டிவிட முடியுமா? ஏறக்குறைய எல்லோருந்தான் அப்படிச் சாப்பிடுகிறார்கள், பேசுகிறார்கள். செயலில் வேறாய் நடக்கிறார்கள். அரசியல் கொள்கையில் மட்டும் விலாங்குப் போக்குடையவரென்பது சந்தேகத்திற்கிடமின்றி விளங்கிவிட்டது.

—போத்தல் மூடி கழற்றப்பட்டாயிற்று......

பெனடிக்ற் மாஸ்டருடன் வந்திருந்தவர் வாய் நிறைய இருந்த வெற்றிலையைத் துப்பியும் விட்டார். அவர் வாய் கழுவ வேண்டியது தவிர்க்க முடியாததாயிருக்க வேண்டும்.

உடனே வள்ளியைக் கூப்பிட்டு, 'ஆச்சி! கொஞ்சந் தண்ணீர் தாரும் வாய் கழுவவும்!' என்று கேட்டுக் கொண்டார். கொட்டிலடியில் தண்ணீர் இருக்கவில்லை. சற்றுத் தூரத்திலிருந்த வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வள்ளி போய் விட்டாள்.

பெனடிக்ற் மாஸ்டர் உடன் வந்தவரை முறைத்துப் பார்த்தார்.

'என்ன வேலை காணும் செய்யிறீர்? நளத்தியை ஆச்சியெண்டு கூப்பிட்டுத் தண்ணீர் கேக்கிறீரோ? செம்பிலை. கொண்டருவா. வாங்கி வாயைக் கழுவும், குடியும்: அவவிட்டைச் சாப்பிட்டுவிட்டுப் போம். மரசாதையில்லாதவேலை! நாளைக்கி அவளவை எப்பிடிக் காணும் எங்களை மதிப்பளவை...' -இவ்வாறு சீறினார். வள்ளியும் தண்ணீர்ச் செம்புடன் வந்து விட்டாள். மாஸ்டர் தன் நண்பரைக் கடிந்து கொண்டது வள்ளிக்குத் தெரியாது.

'தண்ணீர் வேண்டாம் வள்ளி. கொண்டு போ. அதெல்லாம் சரிக்கட்டிவிட்டம்' என்று சமாளித்து அனுப்பினார்.

கறுப்பன் ஒன்றையும் நால்வரும்காலியாக்கினோம். அத்துடன் திருப்தி...கொட்டிலிலிருந்து நால்வரும் தெருவுக்கு வெளியேறினோம்.

பெனடிக்ற் மாஸ்டரின் நண்பர் பின்வருமாறு தொடங்கலாயினார்....

"என்ன மாஸ்டர் உங்களின்ரை அர்த்தமற்ற தடிப்பு? அவங்களின்ரை கைபட்ட கள்ளைக் குடிக்கலாம். அவங்களின்ரை கிளாசை வாங்கிச் சாராயம் குடிக்கலாம். தண்ணீர்ச் செம்பை வாங்கி வாய் கழுவினால்தானா சாதி கெட்டுவிடும்? நீங்கள் ஒரு கிறிஸ்தவன். படித்தவர், அறிவாளி! நீங்கள் இப்படி வேற்றுமை பாப்பியளெண்டு நான் கனவிலும் நினைக்கயில்லை மாஸ்டர்!'-அந்த மனிதர்பேசினார். நாங்களும் நின்றபடியாலோ—என்னவோ மாஸ்டர் திகைத்துவிட்டார்.

'எனக்கு எல்லாம் சரிதான் காணும்! நான் அவங்களட்

(11-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# கிறிஸ்மஸ் பரிசு

## ஏ. பி. வி. கோமஸ்

சூரியனின் வெளிச்சம் அந்த வர்ணந் தீட்டப்பட்டிருந்த கண்ணாடியின் ஊடாகப் பாய்ந்தது, அக்கதிரொளி, சற்றே தலை சாய்ந்து ஜெபம் செய்துகொண்டிருந்த, சுருள்சுருளான கறுப்புக்கேசம் நிறைந்திருந்த சின்னஞ்சிறு தலையின்மேல் தங்கமுலாம் பூசியது. "யேசுவே, தயவுசெய்துஇந்தக் கிறிஸ்மஸுக்காவது எனக்குக் கட்டாயம் ஒரு பொம்மை தர வேண்டும். இன்றைக்கு வரை நீர் எனக்குத் தந்ததேயில்லை." வாய் முணுமுணுத்தது. கண்களோ இறுக மூடியிருந்தன, கைகள் கும்பிட்டபடியேயிருந்தன. அடுத்த விநாடி துள்ளியெழுந்தாள், மீண்டும் முழந்தாளிட்டு எழுந்தாள், ஓடினாள் வீட்டை நோக்கி. அந்தச் சிறுமி தான் ரோசி.

அந்த நாள்தான், சின்னஞ்சிறார்களுடைய மாசறியா இதயங்களின் மகோன்னத நாள். எழிலான பரிசுகளை எதிர்பார்த்து ஏக்கம்கொண்டிருக்கும் ஏற்றமுடைய நாள். ஆமாம். அந்நாள்தான் கிறிஸ்மஸ் திருவிழாவுக்கு முந்தின நாள்.

ரோசி ஓடினாள் ஓட்டமாக. சாய்ந்தும் சாயாமலிருந்த ஓர் ஓட்டைக் குடிசையின் முன் வந்தாள். குடிசைக்குள் ஓடினாள் ஒரே ஓட்டமாக. "அம்மா, அம்மா எனக்கு பொம்மை கொண்டு வந்தாயா அம்மா?". அவளின் குரல் அக்குடிசையே ஆடச் செய்திருக்கும். "இல்லை கண்ணே, ஆனால் [illegible] திருக்கிறேன். [illegible] யேசுவையே கொண்டு வந்திருக்கிறேன்." ரோசியின் தாயார் மேரி, தன் மகளை இறுக அணைத்து, முத்தமிட்டுப் பின் தன் கையிலிருந்த பால யேசுவின் சொரூபத்தை ரோசியின் கையில் கொடுத்தாள். "வா. நாம் இந்த பாலனுக்கு ஒரு குடில் செய்வோம். அன்பே உருவான உள்ளத்தைக் கொண்ட அவ்வுருவத்தின் கைகள் வைக்கோலாலான ஒரு சின்னஞ்சிறு மெத்தையைச் செய்தன. உம். இப்போ யேசு நல்ல சௌகரியமாகத் தூங்குகிறார்" என்று கூறிக்கொண்டே, தன் கையால் செய்யப்பட்ட படுக்கையைப் பார்த்து ரசிப்பதற்காக, எழுந்து பின்னுக்குச் சென்றாள் ரோசி.

"அம்மா, அந்தப் பெரிய வீட்டிலே இருக்கும் லில்லியைப் போல நாம் ஏன் அம்மா பணக்காரர்களாயில்லை. அவளிடம் நிறைய பொம்மைகள் இருக்கிறதே. நான் பார்த்திருக்கிறேனம்மா." மேரியின் கைகளின் அணைப்பில் மகளிருந்தாள். மேரியின் வார்த்தைகள் தழதழத்தன. "ரோசி, யேசுவே ஏழையாய்த்தானே யிருந்தார். அவர் அதனால்தானே ஒரு மாட்டுக் கொட்டிலில் பிறந்தார். அவரைப்போல நம்மிலும் சிலர் இருக்க வேண்டுமென்று அவர் பிரியப்படுகின்றார். உனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். அது எனக்குத் தெரியும். ஆனால் நம் இரண்டுபேரும் சந்தோஷமாயில்லியா?"

ரோசி தன் தாயாரின் கண்களில் கண்ணீர் ததும்புவதைக் கண்டாள். கண்டதும் தன் தளிர்க் கரங்களைக் கொண்டு தன் அன்னையின் உடலை வளைத்தாள். அன்னையின் முகத்தினிலே ஆயிரம் முத்தங்கள் ஈந்தாள். அன்னையின் மடியிலிருந்தவள் கீழே குதித்தாள். "அம்மா. நான் அந்தப் பெரிய வீட்டுக்குப் போகட்டுமாம்மா? அவர்களின் சோடனைகளைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது."

"சரி சரி போய்விட்டு வா. ஆனால் ஒன்று நல்ல பிள்ளையாய் நடந்துகொள்." மேரியின் முகத்தில் ஒருவித ஏக்கப் பார்வை காணப்பட்டது. ஆனால் அதை எங்கே அந்தச் சிறு குழந்தை அறிந்திருக்க முடியும்?

ரோசி; சந்தோஷத்தோடு துள்ளியோடினாள். லில்லியின் பங்களாவை துள்ளியோடியே அடைந்தாள். அலங்காரம் செய்யப்பட்ட கிறிஸ்மஸ் மரமொன்று முன் அறையில் அலங்காரமாக நின்று கொண்டிருந்தது. வெள்ளி நிறமான அலங்காரப் பேப்பர் மாலைகள் அம்மரத்தின் குறுக்கும் நெடுக்குமாக ஓடின. அழகாக உடுத்தப்பட்ட ஓர் அழகிய பொம்மை அம்மரத்தின் ஆக உச்சியிலிருந்து புன்னகை அரும்பிக் கொண்டிருந்தது.

ரோசி மௌனியானாள். அந்நேரம் மின்னொளி விளக்குகள் மின்னி மின்னியணைந்தன. அம்மரமே ஒரு தேவ

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் திருநாள் காட்டும் நல்வழி

## உலக சமாதானத்திற்கு ஒப்புயர்வற்ற தத்துவம்

எஸ். வி பீற்றர்பிள்ளை

மார்கழி மாதம் 25ம் திகதி. பெத்தலேகம் நகரெங்கும் மக்கள் கூட்டமாகவிருந்தது. அரசனின் கட்டளைப்படி குடிசன மதிப்பெடுப்பதற்காக மக்கள் தம் தம் சிற்றூர்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். பெத்தலேகம் நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் உறவினரும் விருந்தினரும் நிறைந்திருந்தார்கள். தச்சுத் தொழிலாளியான சூசைக்கும் அவரின் பாதுகாப்பிலுள்ள மரியாளுக்கும் தங்குவதற்கு இடமே கிடைக்க வில்லை. மரியாள் நிறை கர்ப்பிணி. உலகம்முழுவதையும் படைத்துக் காப்பாற்றி வருகிற சருவேசுரனின் மனித அவதாரத்தை அவள் வயிற்றில் தாங்கிக் கொண்டிருந்தாள். மரியாளுடைய வயிற்றில் உற்பவித்திருந்த சிசு உலக மீட்பர் என்பது ஆண்டவருடைய சம்மனசானவரால் அவளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் மரியாள், மன அடக்கத்துடன், சருவேசுரனின் சித்தத்தை எதிர்பார்த்தபடி தனது பாதுகாவலரான சூசையுடன் பெத்தலேகம் வீதிகளில், தங்குவதற்கு இடம் தேடி அலைந்து கொண்டிருந்தாள். சனக்கூட்டம் அதிகமாகவிருந்ததால் அவர்களுக்கு ஒரு மாட்டுக் கொட்டிலே தங்குவதற்குக் கிடைத்தது. இரவு நேரம், எங்கும் ஒரே குளிராக இருந்தது. துற்துமி மழை. தூவானக்காற்று. இதன் மத்தியில், மாட்டுக் கொட்டிலின் முன்னேட்டிலே நடுச்சாமம் பன்னிரெண்டு மணிக்கு மரியாளின் திரு உதரத்திலிருந்து பாலக யேசு பிறந்தார்.

### கடவுளின் சித்தம் வேறு

கர்த்தரின் பிறப்பு அங்கு ஆடுகளைக் காவல் செய்து கொண்டிருந்த இடையர்களுக்குச் சம்மனசுகளால் அறிவிக்கப்பட்டது. அவர்கள் மாட்டுக் கொட்டிலுக்குச் சென்று பாலக யேசுவை, உலக மீட்பரை ஆராதித்தார்கள். ஆதி வேதத்திலே வாக்குப்பண்ணப்பட்ட, மேசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்களில் அநேகருக்குக் கிறிஸ்துவின் பிறப்பு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இராச குடும்பத்திலே பிறந்து உலக ஐஸ்வரியங்களையெல்லாம் பெற்று அகில உலகத்திற்கும் சர்க்கரவர்த்தியாகி இஸ்ரவேல் சாதியினரை உன்னத நிலைக்குக் கொண்டு வருவாரென மக்கள் எதிர் பார்த்திருந்தனர். ஆனல் கடவுளின் சித்தம் வேருக இருந்தது.

### தகுதியற்றவர்கள்

ஆதி மனிதராகிய ஆதாமும், ஏவாளும் பாவத்தில் புரண்டு புத்தி தடுமாறி சமாதானத்தை இழந்து துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த பொழுது அவர்களுக்கு மேசியாவின் வருகையைச் சருவேசுரன் வாக்குப் பண்ணினுர். சருவேசுரனின் வாக்குப்படி மக்களுக்கு வழிகாட்ட, அவர்களைப் பாவத்திலிருந்து மீட்க மேசியா கிறிஸ்துவாக, ஒரு ஏழையாகப் பிறக்கச் சித்தமானுர். அவர் தமக்குப் பாதுகாவலராகச் சூசையென்ற தச்சுத் தொழிலாளியைத் தெரிந்து கொண்டார். தமக்குப் பிரிய மாதாவாக ஏழை மரியாளைத் தெரிந்து கொண்டார், தம்முடைய அரண்மனையாக மாட்டுக் கொட்டிலைத் தெரிந்து கொண்டார். இது சருவேசுரன் எளிமையான சீவியத்தையே விரும்புகிருன் என்பதைக் காட்டுகிறது. பணக்காரர், சமாதானமற்றவர்கள், கல்நெஞ்சுள்ளவர்கள், சருவேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கத் தகுதியற்றவர்கள் என்பதை யேசு கிறிஸ்துநாதர் தமது சீவியத்தில் பல முறை நடத்தையினுலும், உபதேசத்தனுலும் எடுத்துக் காட்டியிருக்கிருர். பணக்காரர் மோட்ச ராச்சியத்தில் பிரவேசிப்பது ஊசியின் ஒட்டைக்குள் ஒட்டகம் நுழைந்த மாதிரியிருக்கும் என்பது யேசு கிறிஸ்துவின் திருவாக்கு.

### அதிசய சம்பவம்

யேசு பிறக்கும் பொழுது ஒரு பெரிய அதிசய சம்பவம் நடந்தது. வானத்திலிருந்து பெரிய ஏக்காளச் சத்தம் உண்டாகிப் பூமியை வந்தடைந்தது. அதில் "உன்னதங்களில் சருவேசுரனுக்கு மகிமையும் நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக" என்ற கீதம் சம்மனசுகளால் பாடப்பட்டது. இக்கீதத்தைக் கேட்டே இடையர்கள் விழித்து நடுச்சாம நேரத்தில் பாலக யேசுவை ஆராதிக்கச் சென்றுர்கள். இக்கீதம் யேசு கிருஸ்துவின் பிறப்பின் உன்னத நோக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

### சமாதானத்தை வளர்த்தார்

உலகம் சரீரம் என்ற ஆசாபாசங்களில் சிக்குண்டு சமாதானமின்றி வாழ்ந்த மக்கடையே அமைதியை நிலைநாட்ட, சமாதானத்தை நிலைநாட்ட யேசு பிறந்தார். அவருடைய வாழ்க்கை சமாதானத்தின் பாதையாகவே அமைந்திருந்தது. உன்னத தேவ வல்லமைகளைக் கொண்டிருந்த யேசு கிறிஸ்து, பல புதுமைகளைச் செய்த மீட்பர், தமக்கென பொன்னைத் தேடவில்லை, பொருளைத் தேடவில்லை. பெரிய நாடுகளைக் கைப்பற்றி ஏகாதிபத்தியவாதியாக விரும்பவில்லை. ஏழைகளுக்குத் தொண்டு செய்தார், வியாதிக்காரரைக் குணமாக்கினுர். மற்றவர்கள் செய்த பாவங்களுக்காகத்தான் பரித் தியாகம் செய்தார். அடி பட்டார், உதைபட்டார். இதன்மூலம் மக்களிடத்திலே அன்பையும், சமாதானத்தையும் வளர்த்தார். அன்பின் சொரூபியாய், அகிம்சா மூர்த்தியாய் விளங்கினுர். உண்மைச் சமாதானம் ஏழை மக்களின் மத்தியிலிருந்தே கிளம்ப வேண்டுமென்று வழிகாட்டினுர்.

### சமாதானம் நிலைக்க...

இன்று உலகம் அமைதியற்ற நிலையில் இருக்கிறது. எங்கும் 'நான்' என்ற ஆணவம் தலை தூக்கிக் கொண்டிருக்கிறது. ஏழைக் குடிசை முதல் ஏகச் சக்கராதிபத்திகள் வரை நான் என்ற அகங்காரத்தினுல், அநியாயங்களும், ஆயுதப் பெருக்கமும் தலைதூக்கி நிற்கின்றன. இந்த நிலை மாறி உலக சமாதானம் நிலவ வேண்டுமானுல் கிறிஸ்துவின் வழியைப் பின்பற்றி ஏழைகளின் தொண்டனுக, அயலவரின் நண்பனுக, மக்களின் சுதந்திரத்திற்கு மதிப்புக் கொடுப்பவனுக மாற வேண்டும். அப்பொழுது தான் உலக சமாதானம் நிலைக்கும்.

# விடிவு காலம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டைச் சாப்பிடவும் செய்வன், மற்றவங்கள் அறிஞ்சால் எங்களை மதிப்பாங்களே? இடத்துக்குத் தக்க மாதிரியும் நடக்கவல்லோ வேணும். ஆனையிறவுக்கு அங்காலை போனல் எல்லாம் ஒண்டுதான்.'-இப்படி மாஸ்டர் சப்பைக் கட்டுக்கட்டினர்.

'அதுதான் மாஸ்டர் பிழையான கொள்கை. சிங்களவர் எங்களைத் தீண்டாச்சாதி ஆக்கப் பார்க்கிருங்கள். எங்களுக்குள்ளே ஒரு தீண்டாச் சாதி இருக்கத்தான் வேணுமோ? நமக்குச் சரியென்று படும் சரியான செயலை மற்றவங்களுக்குப் பயந்து செய்யாமல் விடுவது முட்டாள்தனம் மாஸ்டர்! என்றைக்குத் தமிழினத்திலிருந்து தீண்டாமை ஒழிகிறதோ, அன்றைக்குத்தான் தமிழினம் முன்னேறத் தொடங்குமென்பது உங்களுக்கு நல்லாய் விளங்குது. நல்லதைச் செய்ய வெட்கப்படுகிறியள். கல்வியிலும் அறிவிலுங் குறைந்தவர்களை எழுப்பிவிடலாம். அவங்கள் உண்மையாகவே தூங்குகிறவர்கள். உங்களைப் போன்றவர்களை எழுப்பமுடியாது. நீங்கள் தூங்குகிறது போல பாசாங்கு பண்ணுகிறவர்கள்.'

—அந்த மனிதர் தொடர்ந்து மாஸ்டரின்மேல் சொல் மாரி பொழியலானுர்.

'நீங்கள் ஒரு கிறிஸ்தவன் மாஸ்டர்! நத்தார்த் திருநாள் கொண்டாடுகிறதற்குத் தடல்புடலாக ஆயத்தம் வேறு செய்கிறீர்கள். மது அருந்துவது, இறைச்சி சாப்பிடுவது, புது உடையணிவது, கோவிலுக்குப் போவது, கிறிஸ்மஸ் காட் அனுப்புவது, உயர்ந்த விலைக்குக் 'கேக்' சரிப்பண்ணி வெட்டிச் சாப்பிடுவது, படம் பார்ப்பது இவைகள்தானு நத்தார்த் திருநாள்?

'உன்னத பரமண்டலங்களிலே சர்வேஸ்பரனுக்கு ஸ்தோத்திரமும் பூலோகத்திலே நன் மனதுடையவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக' என்ற வாக்கியப்படி, நன் மனமுடையவர்கள் தான் நத்தார்த் திருநாளைக் கொண்டாடுவதற்குத் தகுதியுடையவர்கள். எல்லாமிருந்தும் நன்மனம் மட்டுமில்லாத உங்களுக்கு நத்தார் கொண்டாடத் தகுதியேது? யூதாஸ்கரியோத் தேவ நற்கருணை உட்கொண்ட கதைதான் நீங்கள் நத்தார் கொண்டாடுவது. திவ்விய பாலன் உங்கள் உள்ளத்திலே பிறப்பதற்கேற்றவாறு நீங்கள் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தவில்லை. சாதாரணமான மனிதன் தீண்டாமை பார்க்கிருன், அது பிழையென்று அறியாமையினுல். நீங்கள் அது பிழையென்றறிந்தும் ஏன் பார்க்கிறியள்?'—இவ்வாறு, நான் பெனடிக்ற் மாஸ்டருக்கு வாய்திறந்து பேசவில்லை. மனதிற்குள் நினைத்துக் கொண்டேன். அவரவர் வழியே சென்றோம்.

இது நடந்தது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு.

* * *

இம்முறை கிறிஸ்தோப்பரிடம் சென்ற நான், நேற்று வேலனின் கள்ளுக் கொட்டிலுக்குச் சென்றேம். பெனடிக்ற் மாஸ்டரும் வந்திருந்தார்......

மூவருமாகச் சேர்ந்து கள் குடித்தோம். தமிழினத்தின் எதிர்காலத்தைப் பற்றி என்னவெல்லாம் பேசினேம். துக்கித்தோம்.

பெனடிக்ற் மாஸ்டர் பாத யாத்திரையில் முக்கிய பங்கெடுத்துத் [illegible] வருவதாக [illegible] தோப்பர் சொன்னுர்.

'உயர்த்தப்பட்டவர்களென்று சொல்லப்படுபவர்கள் உண்மையாகவே, மனக் கதவைத் திறக்காமல்; தாழ்த்தப்பட்டவர்களென்று சொல்லப்படுபவர்கள் 'நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள்' என்ற தாழ்வு மனப்பான்மையை விடாமல்; பாதயாத்திரை பண்ணியென்ன பத்திரிகைகளிற் படமும் செய்தியும் வெளி வருவதற்காகச் சம போசனம் பண்ணியென்ன தீண்டாமை அகலப்போவதில்லை. தீண்டாமை ஒழியாமல் தமிழினத்திற்கு நல்ல காலம் பிறக்கப் போவதுமில்லை.'

—இவ்வாறு நான் மனதிற்குள் அலுத்துக் கொண்டேன்.

மத்தியானச் சாப்பாட்டு வேளை நெருங்கிக் கொண்டிருந்தது.

'கன காலத்துக்குப் பிறகு ஒரு அபூர்வச் சந்திப்பு. நமது மகனின் ஓராண்டு பிறந்த தினத்தையொட்டியும், நத்தார்த் திருநாளையொட்டியும் இன்றைக்கு நம் வீட்டில் விருந்து. எல்லோரும் எழும்புங்கள்! மாஸ்டர் கூட்டிக் கொண்டு வாருங்கள்!'

—வேலனின் மகன் டேவிற் மாஸ்டர் அன்புடன் அழைத்தார்.

பெனடிக்ற் மாஸ்டர் முக மலர்ச்சியுடன் டேவிற்றின் அழைப்பையேற்று முதலாளாக நின்று எங்களிருவரையும் சாப்பிட அழைத்துச் சென்றுர்.

மூவரும் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டோம்.


—தமிழினத்தின் பொற்காலம் விடியப் போகிற தென்பதைப் பெனடிக்ற் மாஸ்டரின் மனமாற்றம் எடுத்துக்காட்டியது.

(யாவும் கற்பனை)


வீட்டிற்கு ஒரு ஆஸ்தி!

"மினேர்வா"

தையல் மெஷின்



MINERVA 126

தரத்திலும் உழைப்பிலும் எவற்றிற்கும் சளைத்ததல்ல!

அழகிய வேலைப்பாடு!

நுணுக்கமான தயாரிப்பு!

3 லாச்சிகள் கொண்ட கபினெட்

விலையில் புதிய வரி இடம் பெறவில்லை

ஏக விநியோகஸ்தர்கள்:—

சென்ற் அந்தனீஸ்

ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு,

கொழும்பு-10.

டெலிபோன்:—4261-2, 3.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செல்வமும் சிறப்பும் வந்தது போல் போகும்

## உற்றருக்கு உதவுவது உயர்ந்த பண்பு

### புரட்சி நடிகர் பேச்சு

செல்வமும் செல்வாக்கும் சீரும் சிறப்பும் எவருக்காவது வரலாம். அதே போல் விரைவில் கரைந்தும் போய்விடலாம். ஆனல் கஷ்ட காலத்தின்போது ஒருவனுக்குத் துணையாகவிருந்தவர்களுக்கு ஒருவன் நன்றிலை எய்தியதும் இயன்ற அளவு உதவி செய்யவேண்டும். அல்லாவிட்டால் அது பச்சைத் துரோகமாகும்.

இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் ஒரு படத் துவக்க விழாவின் போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: 'நண்பர் சிவாஜி கணேசன் தம்முடன் சேர்ந்து தமது தொழிலகங்களில் உதவி புரிபவர்களுக்காகவும் நாடகங்களில் தம்முடன் சேர்ந்து ஒத்துழைத்தவர்களுக்காகவும் உதவி செய்து வருகிருர். சினிமாப்படங்களைத் தொடங்கிக்கொடுத்து வருகிருர். இவ்வழியையே நானும் கைக்கொண்டுள்ளேன்.

பல வருடங்களாக என்னுடைய கலைத்துறைத் தொழிலுக்கு உதவி புரிந்தவரான திரு. வீரப்பன் அவர்களுக்காக ஒரு படத்தை ஆரம்பித்துக் கொடுத்துள்ளேன். இந்த வகையில் உதவுவது ஒன்றும் பெரிய சிரமமான காரியமில்லை. பரஸ்பரம் ஒற்றுமையும், நல்லெண்ணமும், நட்பும் வளர இந்த வழிகள் உதவும்.'

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தின் பொறுப்பாளராகப் பணிபுரிந்த திரு. வீரப்பன் ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்துள்ளார். அந்தப் படத்தின் ஆரம்ப விழாவின் போதுதான் எம். ஜி ஆர். மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

எம். ஜி. ஆர்., சரோஜா தேவி தோன்றும் காட்சி படமாக்கப்பட்டது. கே. பாலச்சந்திரன் இப்படத்தின் திரைக்கதை வசனத்தை எழுதுகிருர். விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசை அமைக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர். ஜி. கே. ராமு ஒளிப்பதிவாளராகவும், பி. மாதவன் இயக்குநராகவும் செயல் புரிகின்றனர்.

## 'கலையின் பரிசு' ஆரம்ப விழா

கொழும்பு கலாவிருத்திச் சங்கத்தின் ஐந்தாவது வெளியீடான "கலையின் பரிசு" என்ற சரித்திர நாடகத்தின் ஆரம்ப விழா 5-12-63 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் வேன்ரேயன் வீதி, 21ம் இலக்க இல்லத்தில் திரு. எஸ். வீரகத்திப்பிள்ளை அவர்கள் விளக்கேற்றி வைக்க ஆரம்பமாகியது.

கொழும்பு வாழ் ரசிகப் பெருமக்களுக்கு வெற்றி நாடகங்கள் அளித்து வரும் இச் சங்கம் இந் நாடகத்தையும் வெற்றிகரமாக அளிக்க அங்கத்தினர்களின் ஒத்துழைப்பைத் தருமாறு, தமது தலைமையுரையில் திரு. ஈ. வி. டேவிட் ராஜூ வலியுறுத்திக் கூறினர். அடுத்து இந் நாடகத்தின் கதாசிரியர் திரு. எம். ஆலாலசுந்தரம் நாடகப் பிரதியை நாடக இயக்குநர் திரு. நரேந்திரன், ஜே. எட்வட்ஸ் அவர்களிடம் ஒப்படைத்த பின்னர், கீழ்க் கண்டோர் பிரதான நடிகர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். திருவாளர்கள் வி. எஸ். இரத்தினம், எம். ஆலால சுந்தரம், ஏ. சுப்பிரமணியம், செல்வி ஜி. எல். இந்திரா.

## அறிமுகப்படுத்துகிறேம்—4.



### நடிகர், நாடகாசிரியர், பேச்சாளர், இயக்குநர் ........நடமாடி.

இயன்ற அளவில் பிறமொழிச் சொற்கள் கலக்காமல் தமிழில் எழுத வேண்டும், பேச வேண்டும் என்பவர் திரு. கே. வீ. இராசரத்தினம் (நடமாடி) அவர்கள். இவர் ஒரு பிரபல நாடகாசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், நடிகர். பல வானெலி நாடகங்களை எழுதிவரும் இவர், வானெலி நாடகங்களில் நடித்துக் கொண்டும் வருகிருர். மட்டக்களப்புக் கச்சேரி, தேர்தற் பணிமனையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் இவர் "துரோகி" என்ற நாடகத்தை எழுதிக் கச்சேரி உயர்தர அதிகாரிகள் பலரோடு சேர்ந்து மேடையேற்றியிருக்கிருர். பல கல்லூரி நாடகங்களில் நடித்தும் பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்றிருக்கிருர்.

இளமையில் பார்த்த நாடகங்களின் வசனங்களையும் பாட்டுக்களையும் அப்படியே ஒப்புவிப்பதைக் கண்ட பிரபல நடிகர் ஒருவரின் தூண்டுதலின் பேரில் மேடைக்கு வந்தார். முதல் முதலில் இவர் சாவித்திரியாகத்தான் வேடம் போட்டார். பன்னிரெண்டு வயதில் மேடையேறிய இவர் இருபது ஆண்டுகளாக நடிப்புக் கலையை ஓய்வு நேர வேலையாகக் கொண்டு வருகிருர்.


'என் தங்கை', 'மீண்ட நாடு'' சகோதர பாசம்', 'சங்கிலியன்', 'துரோகி', 'உலகம் பலவிதம்,' 'சரிந்தது கொற்றம்' என்னும் முழுநீள நாடகங்களை எழுதிய இவர், இவைகளில் பல்வேறு பாத்திரங்களில் நடித்ததோடல்லாமல், இயக்குநராகவும் கடமை புரிந்துள்ளார். நாட்டின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்ட 'மீண்ட நாடு', 'சங்கிலியன்' நாடகங்கள் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன.

சங்கிலியன் 18 தடவைகள் மேடையேறியுள்ளது. இதே நாடகத்தை "வீழ்ச்சி" என்னும் பெயரில் ஓரங்க நாடகமாக்கி எட்டாவது முறையாக மேடையேற்றி விட்டார்.

பத்துக்கு மேற்பட்ட பள்ளி நாடகங்களில் நடித்திருக்கிருர். மட்டக்களப்புத் 'தமிழ் விழா' நிதிக்காக நடிக்கப்பட்ட "கூண்டுக்கு வெளியே" என்னும் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் எழுதப்பட்ட நாடகத்தில் விஞ்ஞானக் கணபதிப்பிள்ளையாக வந்து சகலரது பாராட்டுக்களையும் பெற்றிருக்கிருர்.

நடித்த ஒரு நாடகத்தின் பாத்திரப் பெயரையே முன்னல் கொண்டு 'வீரகுமாரன்' வயிரமுத்து என்று இன்றும் அழைக்கபபடும் இவரது தந்தையே தனக்கு நாடகக் குரு எனக் கூறுகின்ருர். அதே நேரத்தில் தற்போதைய நாடகம் பற்றிய அறிவை தமக்கு ஊட்டியவர் இலங்கை வானெலி நாடகத் தயாரிப்பாளர் 'சானு' என்றும் கருத்து வெளியிட்டுள்ளார்.

கலையரசு சொர்ணலிங்கம், 'சானு' போன்ற நாடகக் கலைஞர்களாலும், அமரர் வன்னியசிங்கம், அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை போன்ற அரசியல் வாதிகளும், பண்டிதமணி நவநீத கிருட்ண பாரதியார் போன்ற இலக்கிய அறிஞர்களாலும் நாடக உலகில் போற்றப்பட்டவர் நடமாடி.



நீண்ட நாட்களுக்குப் பிறகு குசலகுமாரி 'கொஞ்சும் சலங்கை' வர்ணப் படத்தில் காமவல்லியாக வந்து நடனமாடுகின்ருர்.

## பாசக் குரல்

மாவிட்டபுரம் முத்தமிழ் கலை மன்றத்தினர் கீரிமலை அபிவிருத்தி நிதிக்காக 'பாசக் குரல்' என்ற நாடகத்தை அண்மையில் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடத்தினர். இதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் திரு. மாணிக்கராசா பெருமுயற்சி எடுத்தார். இந்நாடகத்தின் இயக்குநர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை ஆவார்.

நாடக விமர்சனம்:

## மயான காண்டம்

நாடகம் என்றவுடன் இலகுவான ஒரு கலை என்று இன்று பலரும் கருதி விடுகின்றனர். ஆனல் கற்பனை செய்யப்படுவது போல் அவ்வளவு சுலபமான கலை அல்ல அது. பார்வையாளர்களாக வந்திருக்கும் பல்லாயிரக் கணக்கானரசிக உள்ளங்களைத் தமது செய்கைகளினுல் கவர்ந்து, அவர்களைத் தம்முடைய ரசபாவங்களில் லயிக்க வைப்பதுதான் ஒரு உண்மையான நடிப்புக் கலைஞனுடைய செயலாகும்.

ஒரு நடிகன் தனது திறமையை வெளியிடக் கூடிய வாய்ப்புகளைக் கொடுக்கக் கூடிய கதையும், பாத்திரமும் கிடைத்ததுவிடுமானல் பெயரும் புகழும் நீடிக்கும். அப்பாத்திரத்தில் அதே நடிகன் பன்முறை தோன்றினுலும் நடிப்பு மெருகு ஏறிக் கொண்டேயிருக்கும்.

இலங்கை எங்கணும் 500 தடவைகளுக்கு மேல் காங்கேசன்துறை வசந்த கான சபையாரின் அரிச்சந்திரன் மயானகாண்டம் அரங்கேற்றப் பட்டிருக்கிறது. அரிச்சந்திரனுகத் தோன்றும் நடிகமணி வயிரமுத்து எத்தனை முறை அரிச்சந்திரனுகத் தோன்றினுலும் தரம் குறையாது. பார்த்து ரசித்த ஒருவர் திரும்பத்திரும்ப பல தடவைகள் பார்த்தாலும் சலிப்பே ஏற்படாது.

பாலகர் முதல் பாட்டி வரை எல்லோரும் அறிந்த கதைதான் அரிச்சந்திரன் கதை. அரிச்சந்திரன் கதையின் மயானகாண்டப் பகுதிதான் சோகரசத்தின் உச்சக் கட்டம். இந்தப் பகுதியையே பலமுறை மேடையேற்றி வெற்றி கண்ட திரு. வி. வயிரவமுத்து குழுவினர் கொழும்பில் அண்மையில் மயானகாண்டத்தை நடித்தனர்.

திரு. வயிரமுத்து அவர்களே அரிச்சந்திரனுகத் தோன்றினர். அவருடைய மகள் செல்வி வசந்தா சந்திரமதியாகவும், லோகிதாசனுக இளையமகளான செல்வி ஜயந்தியும் தோன்றினர்கள். பாத்திரங்களை உணர்ந்து பக்குவமாக நடித்தனர். சொந்தக் குரலிலேயே பாடல்களைப் பாடினர்கள்.

சுருங்கக் கூறின் எல்லோருடைய நடிப்பும் பிரமாதமாக விருந்தபோதிலும் இது காலவரை சோபித்தது போல் அன்று நாடகம் அமையவில்லை. இதற்கு கொழும்பு ரசிகர்களின் மேல் மட்டும் பழியைப் போட்டுவிட முடியாது. வர்ணனும் பொழிந்து கொண்டேயிருந்தான். அதனால் தான் மக்கள் கூட்டம் சேரவில்லை என்றும் கூறப்படுகிறது;

சபை நிறைந்திருந்தால் தான் கலைஞர்களுக்கு உற்சாகம் உண்டாகும். இன்றேல் கலைஞர்களுக்கும் மந்த நிலை ஏற்படுவது சகஜந்தானே. ரசிகர்களின் கூட்டம் கவர்ச்சியில்லாதிருந்தமையினுல் நாடகமும் அவ்வளவு சோபிக்கவில்லை.

பல இன்னல்களுக்கிடையில் இந்நாடகத்தை கொழும்பு ரசிகர்களுக்கு அளித்தவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாது.

போதுமான விளம்பரம் செய்து, ரசிகர்களுக்கு மயானகாண்டத்தை மீண்டும் நல்ல முறையில் நல்குவார்களென எதிர்பார்க்கிருேம்.

—நாதன்.

## நீதி எங்கே?

நோர்வூட் இராசாதோட்டம் வாலிபர்கள் நடிக்கும் நாடகமான 'நீதி எங்கே?' பொங்கலன்று இராசா தோட்டத்தில் அரங்கேற்றபடும்.

நடிகர்கள்: என். கருப்பையா, எஸ். சூரியநாதன், எம். கருப்பையா, பாக்கியம், முத்தையா, ப. ராமையா, வி. ராமையா, மு. சுப்பிரமணியம், வேலு, முனியாண்டி, பஞ்சரட்னம், செல்லையா, பொன்னையா, மருதவீரன், சின்னையா.

## பாரதி கண்ட கனவு

பாரதியார் கண்ட கனவை நனவாகவே காட்டும் வண்ணம் ஒரு காட்சியைத் தமது படமான 'கை கொடுத்த தெய்வ'த்தில் காண்பிக்கப்போவதாக பொன்னி புரடக்ஷன்சார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் பல இன மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தவே இக்காட்சியைப் படமாக்கப்போவதாக டைரக்டர் கோபாலகிருஷ்ணன் கூறினர்.

சிந்து நதியின் மிசை
நிலவினிலே
சேர நன் னுட்டிளம்
பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில்
பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளையாடி
வருவோம்

என்ற அமர கவி பாரதியாரின் பாடலை வைத்தே இக்காட்சியைப் புகுத்துகின்றனர். இந்தக் காட்சிக்காக 35 அழகிய பெண்களும் 100 ஆண்களும் ஏராளமான படகுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றனவாம். சிந்து நதி தீரத்தை ஒத்த சூழ்நிலையைத் தேடிப்பிடிப்பதில் தயாரிப்பாளர்கள் தீவிரமாக முயற்சியெடுத்து வருகின்றனர். அனேகமாக இக்காட்சியைக் காவேரி நதியிலேயே படமாக்குவார்களென எதிர்பார்க்கப்படுகிறது திருச்சிக்கும் கல்லணைக்கும் இடையிலுள்ள பகுதிகளே சிறப்பாயிருக்கும் என்று கணித்துள்ளனராம்.

'கை கொடுத்த தெய்வம்' படத்தில் சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன், சாவித்திரி, விஜயகுமாரி போன்ருருடன், ரங்கராவ், கே. ஆர். விஜயா ஆகியோர் தோன்றுவார்கள்.

## காதலிக்க நேரமில்லை

சினிமா நட்சத்திரம் ஒருவருடைய காதல் வலைக்குள் சிக்கிவிடுவார் ஸ்ரீதர் என்று பலரும் எண்ணினர்கள், ஆனல் திடீரெனப் பெண்ணைப் பார்த்து முடிச்சையும் போட்டுவிட்ட ஸ்ரீதர். முன்போலவே வாஹினி ஸ்டுடியோவில் சுற்றிச் சுழல்வதைக் கடந்த வாரம் காண முடிந்தது.

"காதலிக்க நேரமில்லை" என்ற கதையை பலவர்ணப் படமாகத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிருர் அவர்.

கண் என்ன கண் என்று
அருகினில் அவன் வந்தான்
பெண் என்ன பெண் என்று
என்னென்ன கதைசொன்னுன்!
அனுபவம் புதுமை அவரிடம்
கண்டேன்
எந்நாளும் இல்லாத
பொல்லாத எண்ணங்களே
பொன்னுன கைபட்டு புண்ணுன
கன்னங்களே!

என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் சுசீலாவின் குரலில் ஒலி எழுப்பியது. விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசை அமைப்புக்கேற்ப ராஜ்ஸ்ரீ நடனம் ஆடினர். 'காதலிக்க நேரமில்லை' விரைவாக வளர்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெய்வத் திருப்பாவையும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். இரவிலும் பகலிலும் எமது கண்கள் நின்னைத் தவிர வேறென்றையும் காணுதிருக்கட்டும். இவ்வளவையும் எமக்கு நீ நல்கிவிட்டாயானல், சுகிரவன் கிழக்கிலோ மேற்கிலோ எங் குதித்தாலும் எமக்கென்ன; கவலையேயில்லை.........

ஆம்; முனிவாசகர் உலகையே மறந்த தனிநிலையிலே—இறைவனுக்கும் தனக்குமே மாத்திரம் தொடர்பான பரவசநிலையிலேபாடிய திருவெம்பாவை என்ற மணிமாலையிலே ஒரு முத்து இதோ:—

"உங்கையிற் பிள்ளை உனக்கே
அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்கு
மெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்
கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர்
அல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா
தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண்
மற்றென்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்
நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்
கேலோரெம் பாவாய்!"

### காதற் புலப்பாடு

ஊழி முதல்வனய் நின்ற ஒருவன்; மையார் தடங்கண் மடந்தை மணவாளன்—செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன், அவனை அன்பு செய்யாதாரது தோள்களை எம் கொங்கைகள் அணையாதிருக்கட்டும் என இளம் பெண்டிரின் வாயிலாகக் கூறிய மணிவாசகர் "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு?" என இறுமாப்புறுகிறார். ஏன்? "இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்......" என்பதனுல்.

மணிவாசகர் கேட்ட இதே நிலையைக் கோதையும் கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தானிடம் அன்புவயப்பட்டுக் குழைந்து கேட்கிறார். வில்லிபுத்தூரைக் கோகுலமாகவும் தன்னைக் கோபியருள் ஒருவராகவும் பாவித்துப் பாடுகிறார் கண்ணன் பிறந்து வாழ்ந்த காலத்தில் அப்பேரழகைத் தானும் கண்டு அனுபவிக்கவில்லையே என்ற தாபம் ஆண்டாளுக்கு உள்ளத்தே கவலை தந்தது. அவரது பாடல்கள் இதனை வலியுறுத்துவனவாய் அமைகின்றன.

"கோவிந்தா! எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்; உன் தன்னேடு உற்றோமே யாவோம்; உனக்கேயாம் ஆட்செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்றேல்........." என்பதிலிருந்து கோதையின் பெருச்செடுக்கும் இணையற்ற தெய்விகக் காதல் புலப்படுகிறது.

"கோழி சிலம்ப, சிலம்புங்
குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்
வெண்சங்கெங்கும்"

என்ற வாசகரின் அடிகளையும்;

"வந்தெங்கும் கோழி
அழைத்தனகாண்;
மாதவிப்
பந்தல்மேல் பல்கால்
குயிலினங்கள்
கூவினகாண்"

என்ற ஆண்டாளின் அடிகளையும் ஒருங்கு நோக்குங்கால் இருவருக்குமுள்ளஇயற்கை ஈடுபாட்டையும்; வாசகரின் பாடல்களில் கோதைக்கிருந்த பயிற்சியையும் உணர முடியும்.

### மலர்த் தேனில் இரு துளிகள்

'குத்துவிளக்கு எரிகிறது. யானைத் தந்தத்தாலான கால்களையுடைய கட்டில்; அதன்மேல் பஞ்சணை அமளி. அதிலே நந்தகோபன் மருமகள் நப்பின்னை, கொத்துக் கொத்தாக அலர்ந்த பூக்களைக் குழலிற் சூடியபடியே சரிந்து கிடக்கிருள்......' இந்தக் காட்சி கோதையின் கண்முன்னே வந்து நிற்கிறது. அதற்கும்மேல் கற்பனை சும்மாவா இருக்கும்?... அவளது கொங்கைமேல் கண்ணன், மலர் மாலை கசங்க மார்பை வைத்தழுத்துகிறன். நீண்பொழுதாக அப்படியே வைத்துக் கிடக்கிறன். கோதைக்குப் பொறுக்க முடியவில்லை 'மலர் மார்பா!' என்று அழைத்துவிடுகிருள். கண்ணன் பேசுவானு? உடனே தான் அழைத்தது தவறு என்று துணுக்குறுகிருள், சே, சந்தர்ப்பத்தை உணராமல் அழைக்கலாமா? நப்பின்னை தோழி தானுனலும் கோபித்துவிடப் போகிருள், என்ற எண்ணம் உதிக்கிறது. நீராடுதற்குத் துயிலெழுப்பத்தானே சென்றவள்; உடனே கேலிபண்ணுவது போன்று திருப்பிவிடுகிருள். 'மலர் மார்பா!' என்று அழைத்ததிலே தோல்வி தான் அவளுக்கு. அதை மறைக்க, கேலி வார்த்தைகளை நப்பின்னையை நோக்கி வீசுகிருள்,

"மைதீட்டப்பட்ட அகன்ற கண்களையுடையவளே! வாய்திறக்கமாட்டாயா? எங்கே திறக்கப் போகிருய்; நீதான் உன் மணளனை எத்தனை பொழுதானுலும் துயிலெழவிட மாட்டாயே!...ம... கொஞ்ச நேரமாயினும் அவனைப் பிரிந்திருக்கும் ஆற்றலில்லாதவள் நீ!" இவைகேலிவார்த்தைகள்தாம். ஆனல் அவற்றினுள்ளே பொதிந்துகிடக்கும் அவளது ஆற்ருமையையும் தாபத்தையும் நாம் நுணுகியுணர வேண்டும். அதற்கு ஆண்டாளின் ஆழ்ந்த காதல் அனுபவத்தை நாமும் பெற வேண்டும்.

இதோ கோதையின் திருப்பாவையில் ஒருதேன் துளி;

"குத்துவிளக்கெரியக்
கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச
சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல்
நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா!
வாய்திறவாய்
மைத்தடங்கண்ணினுய்;
நீயுன்மணளனை
எத்தனைபோதும்
துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும்
பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவே
லோரெம்பாவாய்!..."

தமிழ் இலக்கியப் பொய்கையிலே மலர்ந்து கிடக்கும் அகத்துறைப் பக்திப் பாடல்களில் வாசகரும் கோதையும் புனைந்த மலர்த்தேனின் இருதுளிகளைச் சுவைத்தோம். வாசகர்கள் இனி வண்டுகள் ஆகிக் களிப்பார்களாக.

# அட்டூழியம்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மறந்துவிடலாகாது. அதாவது, அத்தனை பேரும் நலிவது அசைந்துலவ இடமின்மையால் மட்டுமல்ல; உண்ண அரை வயிறுதானும் உணவின்மையால் மட்டுமல்ல; பிரிவும் சிறையும் தரும் சோகத்தால் மட்டுமல்ல, இவற்றைவிட அக்குள்ளோர் பலரின் உள் அங்கங்கள் அடியாலும் மர்ம இடியாலும் வதையுண்டு கிடக்கின்றன என்பதைநாம் மறந்துவிட முடியாது. இதுதான் ஆட்சியா? பெண்ணின் ஆட்சியில் நடைபெறுவது வது இதுவா? என எண்ணத் தான் தோன்றுகிறது. இது போல் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் இன்னும் பல. இதோ இன்னென்று —

### காட்சி 3

இடம்: பொலீஸ் நிலையம்.
காலம்: இன்று—இப்போது நடைபெறுவது என்றே வைத்துக் கொள்ளலாம்!

பிடிபட்ட சந்தேகக் கள்ளக்குடியேற்றக்காரர் சம்பந்தமாய் நிரப்பப்பட வேண்டிய பத்திரம் பொலீஸ் உத்தியோகத்தரால் எடுக்கப்படுகிறது. இப் பத்திரத்தில் நான்கு பகுதிகள் உள. முதற் பகுதி, நிலையத்துப் பொலீஸ் உத்தியோகத்தரால் பூர்த்தியாக்கப்பட வேண்டியது. இரண்டாவது பகுதி சந்தேக நபர் கொடுக்கும் தகவலில் இருந்து பூர்த்தியாக்கப்பட வேண்டியது. மூன்ருவது பகுதி. தான் அளித்த தகவல் தனக்கு வாசித்து விளங்கப்படுத்தப்பட்டதென்றும் அவை உண்மையெனவும் சந்தேக நபர் தாமே உறுதி கூறி கைச்சாத்திட வேண்டிய பகுதி. பத்திரத்தின் கடைசிப் பகுதியான நான்காம் பகுதி, பொலீஸ் நிலைய உத்தியோகத்தரின் கையொப்பத்துக்குரியது. பத்திரத்திற் கொடுக்கப்பட்ட விபரங்களில் இரண்டாம் பகுதியைக் கைதான சந்தேக நபருக்குத் தாம் வாசித்து விளங்கப்படுத்தியதாக உறுதிப்படுத்திக் கைச்சாத்திட வேண்டிய பகுதி இது. ஆனல் பொலீஸ் நிலையத்துள் நடப்பது என்ன?

'டேய்' என்கிருர் உத்தியோகத்தர்.

ஏற்கனவே அடிவாங்கிய அந்த சந்தேகக் கைதி உயிர் ஒடுங்குகிருர்!

'நீ ஐம்பத்தி நாலாம் ஆண்டிற்தானே வந்தவன்?' என்கிருர் அவர்.

'இல்லைங்க...நான்...'என்று அந்த ஏழை கூறு முன்—

'பொய் சொல்லாதேடா' என்ற இடி முழக்கத்துடன் 'போடடா கையெழுத்து' என்ற கட்டளையும் எழ, அவன் காட்டிய இடத்திற் கைச்சாத்திடுகிருன். அதன் பின் பத்திரம் நிரப்பப்படுகிறது. அதில் அவன் ஐம்பத்தி நாலிலல்ல, அதன் பின் வந்தவனுகவும் காண்பிக்கப்படுகிருன்! தான் 'கள்ளத்தோணி' என ஒப்புக் கொண்டவன் ஆகிருன் அவன்!!

சில பொலீஸ் நிலைய உத்தியோகத்தர் இன்னும் நல்லவர்கள்! தமிழர்களை அடித்து உதைக்கும் சில்லறை வேலைகளைத் தமது கீழ் உத்தியோகத்தரிடம் விட்டு விடுகிருர்கள்! கையொப்பம் மட்டும் வைக்கிருர்கள்! அதில் கைதானவருக்கு அனைத்தும் வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது, என்றிருக்கும்! அது போதாதா? பாதிக்கப்பட்டவன் ஒரு தமிழன்—ஒரு கள்ளத்தோணி-தானே?

இவ்வித காட்சிகள் சிலவற்றை மேலும் பார்க்க விரும்புகிறீர்களா? கொழும்பில் நடைபெறுவது என்ன தெரியுமா? மறுமுறை பார்ப்போம்.

# கிறிஸ்மஸ் பரிசு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தைகள் வதியும் நாடுபோல் காட்சி யளித்தது அவளுக்கு. ரோசி வந்து பார்த்துக் கொண்டிருந்ததை, ரோசியின் மூக்கு யன்னல் கண்ணுடியில் பதிந்து தட்டையாக தெரிந்ததைக் கண்டாள் லில்லி கண்ட லில்லி, ரோசியை உள்ளே விடும்படி தன் தாயாரை வேண்டினுள்.

ரோசிக்கு மூச்சு நின்று விடும் போலிருந்தது. அன்றைய தினம் அவ்வளவு அழகாகக் காட்சியளித்தது அந்த அறை. சாதாரண நாட்களுக்கு மாறுபட்ட நாள்ல்லவா அது. திடீரென அவள் கண்கள் சில பொம்மைகள் மேல் குத்திட்டன. "ஓ...... எவ்வளவு அழகாக இருக்கின்றன!" லில்லியின் தாயாரின் மனதை இந்த வார்த்தைகள் என்ன என்னவோ செய்தன. அவள் தன் மகள் லில்லியிடம் அவளுடைய பழைய பொம்மைகளில் ஒன்றை ரோசிக்குக் கொடுக்கும்படி சொன்னுள். ரோசியின் முகத்தில் ஒருதவி நன்றிகலந்த புன்னகை பூத்தது. லில்லியிடமிருந்து அந்தப் பழைய பொம்மையை வாங்கிக் கொண்டாள் ரோசி. கண்ணில் கலந்திருந்த நன்றி வாயளவிலும் வந்தது. "நன்றி" என்றுள்,

லில்லியும் ரோசியும் தங்களின் மென்பாதங்களை எடுத்து மெதுவாக வைத்து வெளியே வந்தனர். ரோசி இன்னும் ஆச்சரியத்தால் தாக்கப்பட்டிருந்தாள், "லில்லி......ஓ......லில்லி," இவ்வளவே அவளால் சொல்லக்கூடியதாயிருந்தது.

திடீரென ரோசி லில்லியின் கைகளைப் பிடித்துக் கொண்டே இருவரும் ரோசியின் வீட்டை, இல்லை குடிசையை நோக்கி ஓடினர். அவர்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியுடனும், அவர்களின் அன்பும், பாசமும் நேசமும் வளர்ந்தது.

ரோசி நேராக அவளுக்குக் கிடைத்திருந்த பாலன் படுத்திருந்த குடில் அருகில் சென்ருள். பாலனைக் கையில் எடுத்தாள். தன் சின்னஞ்சிறு உதடுகளை அச்சொரூபத்தில் பதித்தாள். பின் அதனைத் தன் தோழி லில்லியின் கையில் கொடுத்தாள். "இதோ, இந்த யேசு பாலனே என் அன்பின்பரிசு."

லில்லிக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை.

"மிக மிக நன்றி ரோசி. ஆனல், நீ உன்னிடம் ஒரு பொம்மையும் இல்லை என்று சொல்லவில்லையா?"

"ஓ...லில்லி. இது பொம்மையல்ல. இது யேசு. நாளைக்கு அவர் பிறந்தநாள். உனக்குத் தெரியவில்லையா இது!"

"ஐயோ, இவரைப்பற்றி நான் கேட்டதில்லையே." லில்லி தந்த பதில் இதுதான். இவர்களின் பேச்சரவம் கேட்ட ரோசியின் தாயார் மேரி, பிள்ளைகளிருந்த இடத்துக்கு வந்தாள். "லில்லி இங்கே வாம்மா. இந்தப் பாலனைக் கொண்டுபோய் அவரைப்பற்றி எல்லாவற்றையும் சொல்லும்படி, உன் அம்மாவிடம் கேள். அவருக்கு ஒரு நல்ல சிறு வைக்கோல் மெத்தையும் செய்து, அவரைப் படுக்க வை."

லில்லி தன் வீட்டுக்கு ஓடோடிச் சென்ருள். தன் கையிலிருந்த சின்னஞ்சிறு பாலனைப் பெருமையுடனே தன் தாயிடம் காட்டினுள்! "அம்மா இவரைப்பற்றி என்னவெல்லாமோ கதைகள் உண்டாமே. எனக்கும் சொல்லேனம்மா" என்ருள் லில்லி. அந்நேரம் அவளின் தந்தையும் அம்மா பக்கத்திலேயே இருந்தார். தந்தை தாயைப் பார்த்தார். தாய் தந்தையைப் பார்த்தாள். அவர்களுக்கே யேசு புதுமையானவராயிற்றே! அவர்களுக்கே யேசு புதியவராயிருந்தாரே!

ஏதோ தெரிந்த அளவு கதையைச் சொல்லிக் கொண்டுவந்த லில்லியின் தாயார், தன் மனதில் ஏதோ ஒருவித ஏக்க உணர்வை உணர்ந்தாள். தன்னுடைய இளமைக் காலத்தை எண்ணத் தொடங்கினுள். அந்தக் காலங்களில் கேளிக்கை விநோதங்களில் அல்ல—உலகத்தின்மேல் உத்தமக் கடவுள் கொண்டிருந்த உண்மை அன்பின் தத்துவத்தில்தான் தங்கியிருந்தது கிறிஸ்மசின் உண்மைத் தத்துவம்—கொண்டாட்டம்.

லில்லியின் தந்தையும் தாயும் ஏதேதோ உரையாடத்தொடங்கினர். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தனர். ஆமாம், கிறிஸ்துவை தங்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் கொண்டுவர வேண்டும், அவருக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று தங்களுக்குள்ளே முடிவு செய்து கொண்டனர். ஆமாம், எவ்வளவு ஆஸ்தி இருந்தாலும் என்ன, உண்மையான கிறிஸ்மசின் தத்துவத்தையோ, சமாதானத்தையோ வாங்கிவிட முடியாது தானே? அந்நேரம்—

பக்கத்திலிருந்த கோயில் மணியோசை அவர்கள் காதில் வந்து ஒலித்தது. அது நடுச்சாம பூசை நடந்து கொண்டிருந்த போது, "கிளோரியா" பாடப்படும் வேளையில் எழுந்த மணியோசை.

லில்லியின் பெறறோர்கள் மௌனமாகத் தங்கள் தலைகளைக் குனிந்தனர். தாமாகவே முழந்தாளிட்டனர். அவர்கள் முன்னல்...லில்லியின் நண்பி கொடுத்திருந்த, ஆமாம்...ரோசியின் அன்புப் பரிசாம் பால யேசு, தன் பிஞ்சுக் கரங்களை விரித்துக் கொண்டு, சின்னஞ்சிறு குழந்தையாய்ப் படுத்துக்கிடந்து புன்னகை புரிந்துகொண்டி[illegible]

(... தழுவியது)

# சுதந்திர...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் டிவேலரா பலமாக ஆட்சேபித்தார்.

அயர்நாடும் தம்பக்கம் சேர்ந்து யேர்மனிக்கு எதிராகப் போரிட வேண்டும் என அமெரிக்கக் குடியதிபதி றூஸ்வெல்ட் வேண்டுகோள் விடுத்தார். சிறு நாடுகளான நோர்வே, ஒல்லாந்து, பெல்ஜியம், போலாந்து, டென்மார்க், யவனரகம் (கிறீஸ்), யூகோசுலாவியா ஆகியவை யேர்மனியால் தோற்கடிக்கப்பட்டிருந்தும் டிவேலரா அஞ்சவில்லை. நாட்டு மக்களின் பலத்தில் நம்பிக்கை வைத்துள்ள பிரதமர் டிவேலரா அமெரிக்காவின் வேண்டுகோளை நிராகரித்தார்.

யேர்மனியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த நாடுகள் அனைத்தும் அமெரிக்காவிலுள்ள சான் பிரான்சிஸ் கோவில் 1—1—1942ல் கூடின. ஐக்கிய நாடுகள் என்னும் நிறுவனத்தை உருவாக்கின. நாடுகள் கழகத்தில் உறுப்பினராக அயர்நாடு அந்த நிறுவனத்தில் சேர்க்கப்படவில்லை.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகமும் ஊசித் துவாரத்தினுள் நுழைந்து விடலாம்...




## சின்ன வயதில்...(1)

பாடசாலைக்குப் போக அவன் விரும்பாமல் தன்னிச்சைப்படி தோட்டங்களில் உலாவி வருவான். இப்படி உலாவி வருவதில் ஏகப்பட்ட ஆனந்தம் அவனுக்கு! கிணற்றடியிலோ, மரத்தடியிலோ உட்கார்ந்து கொண்டு பாடுவான். சினிமாப்பாட்டையல்ல; தனது கற்பனையில் உதித்த பாடல்களையே! நல்ல இராகம் அமைத்து அருமையாகப் பாடுவான்! இப்படியாக, கல்லூரி செல்லா அக் கவிஞன் பாடிய பாடல்கள் தாம் இன்று எம் பாடத் திட்டத்தில் அமைந்துள்ளன. இது மட்டுமா? பாரதம் இன்று சுதந்திர நாடாக, அவரின் பாடல்கள் எவ்வளவோ துணை செய்துள்ளன. இன்றைய ஈழத் தமிழ் பேசுவோருக்குக் கூட அவரின் பாடல்கள் அவசியம் தேவைப்படுகின்றன. தன் நாடு சுதந்திரம் பெற, மக்களைக் கவி மூலம் உணர்ச்சி யூட்டிய அக் கவி யாரென்பது இதுவரை உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆம்! அவர் தான் அமரகவி சுப்பிரமணிய பாரதியார்.

## நீவிர் அறிவீர்!

மிகச் சிறிய சுதந்திர நாடு எது?

தாஜ் மகால் எப்போது கட்டி முடிக்கப்பட்டது?

சீனப் பெரும் சுவரின் நீளம் என்ன?

ஆபிரகாம் இலிங்கன் எப்போது அமெரிக்க ஜனாதிபதியானார்?

இலங்கையின் புகையிரதப் பாதையை முதன் முதல் அமைத்தவர்கள் யார்?

புகையிலைச் செடி ஆரம்பத்தில் உண்டாகிய இடம் யாது?

'சிவில் சர்விஸ்' பரீட்சையில் முதன் முதல் சித்தியடைந்த இலங்கையர் யார்?

உலகில் மிக உயர்ந்த உருவச்சிலை எது?

மலாயா எப்போது சுதந்திரம் அடைந்தது?

மிக உயரமான நாடு எது?

சூயஸ்கால்வாய் வழியாக வந்த நீராவிப் படகு எப்போது இலங்கை வந்து சேர்ந்தது?

விடை

மொனகோ.
1620ம் ஆண்டு.
1,500 மைல்.
1861ல்
தேசாதிபதி எட்வேட் பான்ஸ்.
அமெரிக்கா.
சேர். பொன். அருணாசலம்.
விடுதலைச் சிலை (அமெரிக்காவில்).
1957ம் ஆண்டு.
திபெத்.
1870ல்.

எனது கிராமம்

## கிண்ணியா

செல்வி ஏ. எஸ். மசூதா, கிண்ணியா-9.

எனது கிராமம் கிண்ணியா. இக் கிராமம் திருகோணமலைக்குக் கீழ், சுமார் எட்டு மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. இக் கிராமத்தில் பன்னீராயிரம் மக்களுக்கு மேல் வசிக்கின்றனர். இக் கிராமத்தின் அயற் கிராமங்களாக குட்டிக்கரச்சை, பெரிய கிண்ணியா, சின்னக் கிண்ணியா, பெரியத்துமுனை, வெடிநகர், குறிஞ்சாகேணி, காக்காமுனை, முனைச்சேனை, உப்பார், ஆலங்கேணி, பூவரசன் தீவு, சூரங்கல் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன.

இக் கிராமத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதம் முஸ்லிம் மக்களும், ஐந்து வீதம் தமிழ் மக்களும் வசிக்கின்றனர்.

இக் கிராமத்தில் ஓர் முஸ்லிம் மஹா வித்தியாலயம் இருக்கின்றது. ஒரு கலவன் பாடசாலை இருக்கின்றது. ஒரு பெண் பாடசாலை இருக்கின்றது. இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. வாசிகசாலைகள் இரண்டு இருக்கின்றன. இலவச வைத்தியசாலை ஒன்று இருக்கிறது. மற்றும் தேநீர்க் கடைகள், பிடவைக் கடைகள் முதலியனவும் இருக்கின்றன.

இக்கிராமம் ஓர் பெரிய கிராமம் என்றாலும் பொருளாதாரத்தில் மிகவும் பின்னடைந்துள்ள கிராமமாகும்.

இக் கிராமத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் கமக்காரரும், இருபத்தைந்து வீதம் கடற்றொழிலாளரும் ஆவர். எனது கிராமம் பெரிய கிண்ணியா கிராமச் சபைக்குட்பட்டதாகும்.

மூதூர் தொகுதியைச் சேர்ந்த எனது கிராமத்தின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் இருவராவர். ஒருவர் ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி; மற்றவர், ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத்.

### உங்கள் சிந்தனைக்கு

கணவனும் மனைவியும் மனப்பூர்வமாய் நேசித்தால், தேவர்கள் எல்லோரும் தேவலோகத்தை விட்டு அக் குடும்பத்தில் குடிபுகுந்து பண்ணிசைப்பர்.

—இங்கர்சால்

## தெரிந்து கொள்ளுங்கள்!

— அன்பரசு, செட்டிபாளையம் —

(1) தோட்டப்பாலையின் உயரமென்ன?

(2) மகாவலி கங்கையின் நீளமென்ன?

(3) அமெரிக்க முதல் ஜனாதிபதி யார்?

(4) கென்னடியைச் சுட்டுக் கொண்டவனின் பெயரென்ன?

(5) ஏஞ்சல் நீர்வீழ்ச்சி எங்குண்டு? அதன் உயரம் என்ன?

விடைகள்

(1) 7,741 அடி.
(2) 206 மைல்.
(3) வாஷிங்டன்.
(4) லீ ஒஸ்வால்ட்.
(5) வெனிசுலாவில்; 3300 அடி.

## மல்லிகை

—க. திருச்செல்வம்—

குண்டு குண்டு மல்லிகை
கொள்ளை கொள்ளும் மல்லிகை
வெள்ளை வெள்ளை மல்லிகை
விருப்பும் நல்ல மல்லிகை.

அடுக்கு அடுக்கு மல்லிகை
அழகாய் இருக்கும் மல்லிகை
ஊசி ஊசி மல்லிகை
சாமிக் கேற்ற மல்லிகை.

பவள வண்ண மல்லிகை
பட்டுப் போல மல்லிகை
எவரும் வாங்கும் மல்லிகை
இன்ப வாச மல்லிகை.

அம்மா அக்கா கூந்தலில்
அழகாய் சூடும் மல்லிகை
மாலை கட்டும் மல்லிகை
மயக்கும் வாச மல்லிகை.

## எங்க தம்பி!

—மருதமுனை இசைவாணன்—

நல்ல தம்பி மிக நல்ல தம்பி—பள்ளிஎந்
நாளுஞ் செல்வான் எங்க தம்பி!
கல்வியிற் சிறந்த நல்ல தம்பி—பாடம்
கருத்தாய்ப் படிப்பான் எங்க தம்பி!

நாடகம் நடிப்பான் நல்ல தம்பி—நல்ல
நாட்டிய மாடுவான் எங்க தம்பி!
பாட்டுகள் பாடுவான் நல்ல தம்பி—உபாத்தியார்
பாராட்டைப் பெற்றவன் எங்க தம்பி!

விளையாட்டிற் சிறந்தவன் நல்லதம்பி—போட்டி
கேடயம் பெற்றவன் எங்க தம்பி!
சஞ்சிகை படிப்பான் நல்ல தம்பி—பெரியார்
சரித்திரம் படிப்பான் எங்க தம்பி!

சண்டைகள் செய்யான் நல்ல தம்பி—என்றுஞ்
சோகமே இல்லான் எங்க தம்பி!
சொன்னதைச் செய்வான் நல்ல தம்பி-என்றுஞ்
சுறுசுறுப் புள்ளவன் எங்க தம்பி!

## புதிய மருமக்கள்

3823 க. ஜெயபாலன், 297, முகத்துவார வீதி, மட்டக்குழி.

3824 வே. முருகையன், இடைக்காடு வடக்கு, அச்சுவேலி.

3825 கு இரத்தினசர்மா, தன்னை, களபூமி.

3826 சாந்தினி யோகசுந்தரம், 4/1, ஷன் சைன் அவெனியூ, தெஹிவளை.

3827 வ. இரத்தினதுரை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.

3828 ஆர். எஸ். கே. குமாரசாமிப்பிள்ளை, மருதங்குளம், காக்காப்பள்ளி.

3829 செ. தர்மலிங்கம், அ. ம ம. வித்தியாலயம், வசாவிளான்.

3830 செல்வி எம். எம். எகியா, பெரிய கிண்ணியா, கிண்ணியா-10

3831 ஆர். எஸ் கே. சோமசுந்தரம் பிள்ளை, மருதங்குளம், காக்காப்பள்ளி.

3832 வி. சிவகுமாரன், 15, காசுத் தெரு, திருக்கோணமலை.

3833 க. செ. பெனடிக்ற், ஆஸ்பத்திரி வீதி, நெடுந்தீவு.

3834 எஸ். ஏ. ராஜன், வில்வளை, மாதகல்.

3835 ஐ. சச்சிதானந்தன், 3-ம் வட்டாரம், நெல்வரை, நெடுந்தீவு மேற்கு.

3836 எஸ். எஸ் மிந்தி ஹபிஸைமா-ஸம்மூன், வாடிய தன்னை, ஹெம்மாதகம.

3837 சோ. சச்சிதானந்தம், 54, முதலியார் தெரு, திருக்கோணமலை.

3838 ஐ. தங்கராசன், 6-ம் வட்டாரம், உடப்பு.

3839 த. நியூட்டன் தருமலிங்கம், பண்டத்தரிப்பு.

அன்புள்ள மருமக்களே!

கிறிஸ்மஸ் நெருங்கிவிட்டது. அனைவரும் ஆனந்தமாகக் கொண்டாடுவீர்களென நம்புகிறேன்.

'புதுமைத் திருடன்' பரிசுத் திட்டத்துக்குரிய கட்டுரைகள் யாவும் பரிசீலனை செய்து முடிந்தாயிற்று. பரிசு பெற்ற கட்டுரைகளின் விபரம் அடுத்தவாரம் வெளியிடப்படும். பாராட்டுக்குரிய கட்டுரைகளும் பின்னர் பிரசுரிக்கப்படும்.

வணக்கம்.

உங்கள் அன்புள்ள

வளர்மதி மாமா

## பொன்மொழிகள்

நல்லவனாய் இரு, நீ சந்தோஷமாய் இருப்பாய்.

நம்ப நட, ஆனால் நம்பி நடவாதே.

ஒருவனின் முன்னேற்றத்திற்கு, தீவிரமான மனக் கட்டுப்பாடுதான் சிறந்த சாதனம்.

மற்றவர்கள் செய்யும் தவறுகளிலிருந்து ஒரு அறிவுள்ள மனிதன் தன் தவறுகளைத் திருத்திக் கொள்ளுகின்றான்.

பொறாமை மனிதனின் உடன் பிறவி. ஆனால், மற்றவர்களுக்குத் தீங்கு பண்ண அதைத் தூண்டுதல் கூடாது.

அவரவர் வேலையை அவரவர் கவனித்துக் கொண்டால், அமைதியான சூழ்நிலையுண்டாகும். தன் வேலையை விட்டுவிட்டு பிறர்வேலையில் தலையிடுவதுதான் குழப்பத்திற்குக் காரணம்.

தேவை இல்லாத பொழுது வாயை மூடிக்கொள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல். சொல்லும் பொழுது தீப்பொறி எழச் சொல்.

யாரையும் போற்றிப் புகழவோ, அல்லது தூற்றித் திரியவோ கூடாது. காரணம், நாம் அனைவரும் சூழ்நிலை, படிப்பு, பாரம்பரியம் ஆகியவைகளின் குழந்தைகளே!

தொகுத்தவர்:-
மு. சுவாமிநாதன்.

## ஆச்சரியம்... ஆனால் உண்மை!

உலகிலேயே கண்டு பிடிக்கப்பட்ட மிகப் பழமையான பிரதேசப் புதையல், 1953-ஆம் ஆண்டு அமெரிக்காவில் டிகாஸ்ஸில் உள்ள மிட்ஸிலாண்டில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரியின் மண்டையோடே ஆகும். ஆராய்ச்சி மூலமாகப் பார்க்குங்கால், இது சுமார், கி. மு. 10,000 ஆண்டுக்கு முன் புதைக்கப்பட்டிருக்க வேண்டும் என நினைக்கின்றனர்.

அமெரிக்காவிற்கு அகதியாக வந்த நோர் வேக்காரரான ஹான்ஸ்லாஞேஸேத் என்பவருடைய தாடிதான் உலகிலேயே மிக நீளமான தாடியாகும். 1912-ம் வருடத்தில், 36 வருடங்களாக வளர்த்த அந்தத் தாடியின் நீளம் 11 அடி 6 அங்குலம் ஆகும்.

சேகரித்தவர்:
சாஜு சாவன்ஜு.
ஊவாக்கட்டவளை.

# ஆனால்........ பணக்காரனால் கடவுளின் இராச்சியத்தினுள் புக முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## உலகத் தமிழர் மன்றம் உருவாகியது

கோலாலம்பூர் அப்பர் உயர் நிலைத் தமிழ்ப் பள்ளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சைவப் பெரியார் திரு. கா. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற தமிழன்பர்களின் பொதுக்கூட்டத்தில் உலகத் தமிழ் மன்றம் உருவாகியது. இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மன்றத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அகில மலாயா தமிழர் சங்க கோலாலம்பூர் கிளையும் இலங்கைத் தமிழர் சங்கமும் சேர்ந்து நடத்திய இந்த அமைப்புக் கூட்டத்திற்கு மலாயாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் திரளான தமிழன்பர்கள் வருகை தந்திருந்தனர்.

உலகத் தமிழர் மன்றத்தின் தலைவராக மலாயாப் பல்கலைக் கழக இந்திய மொழித்துறையின் விரிவுரையாளரும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைத் தலைவராக அகில மலாய தமிழர் சங்க கோலாலம்பூர் துணைத் தலைவர் திரு. ஏ. ஏ. அப்துல்லாவும், பொதுச் செயலாளராக மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும், 'தமிழ் நேசன்' பத்திரிகை ஆசிரியருமான முருக. சுப்பிரமணியனும், துணைச் செயலாளராக மலாய எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. எம். துரைராசாவும், கிளைச் செயலாளராக தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவர் திரு. சி. வி. குப்புச் சாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் பொருளாளராக திரு. ஜி. டி. முத்தையா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆட்சிக் குழு உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: திருவாளர்கள் மா. சி. அண்ணாமலை, டத்தோ அலி மரைக்காயர், அ. அருணசலம், ப. மு. அன்வர், அழகு சுப்பிரமணியம், அ. ஆறுமுகம், வி. கோவிந்தராஜ், இரா. சண்முகம், எஸ். சாமிவேலு. சௌ. ஆ. சுப்பையா, வ. செல்வநாயகம், தா. ஜெயரத்தினம், அ. தருமதுரை, அ. தம்பையா, எஸ். பி. துரை, ஏ. பொன்னம்பலம், ஏ. ஆர். முகம்மது யூனஸ், சுப. முத்தையா, மு. ந. வே. சுப. வேலாயுதம், எம். ஏ. ஹமீது.



திரு. கா. பொ. இரத்தினம்

இந்தியா, இலங்கை, பர்மா, மொறிசியஸ், தென்னாப்பிரிக்கா, பிஜித்தீவு, புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, லண்டன் முதலிய இடங்களுக்கு ஒவ்வொரு துணைத் தலைவரும் கிளைச் செயலாளரும் ஆட்சிக் குழுவினால் தெரிவு செய்யப்படுவர். அவ்விடங்களில் கிளை அலுவலகங்கள் நிறுவப்படும்.

மன்றக் காப்பாளர்களாகப் பின் வருவோர் பல நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

அமெரிக்கா-கலாநிதி லிங்கர், இங்கிலாந்து-பேராசிரியர் ரிபரோ, இந்தியா-தவத்திரு. குன்றக்குடி அடிகள், கருமுத்து தியாகராசன், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. கி. ஆ. பே. விசுவநாதன், இலங்கை-பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, ரஷியா-எஸ். சி. உருடின் (செம்பியன்), செக்கோஸ்லேவேகியா-கலாநிதி கமில்ஸ் சுவலபெல், ஜெர்மனி-கலாநிதி லெஃமன் ஆர்னோ, தென்னாப்பிரிக்கா-டாக்டர் திரிபுர சுந்தரி (லக்ஷ்மி) பர்மா-திரு. எஸ். ஏகாம்பரம், மலேசியாடத்தின் உமா. சம்பந்தன், பேராசிரியர் தவத்திரு. தனிநாயக அடிகளார், செனட்டர் ஆதி நாகப்பன், திரு. கா. இராமனாதன், திரு.கோ. சாரங்கபாணி.

உலகமெங்குமுள்ள அரசியல் சார்பற்ற தமிழ் நிலையங்கள், சங்கங்கள், கழகங்கள் முதலியன உலகத் தமிழ் மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

சங்கங்களின் பெயர், முகவரி, அலுவலாளர் பட்டியல் முதலியவற்றை தலைவர், உலகத் தமிழ் மன்றம், 51 வெல்ட் ரோடு, கோலாலம்பூர், மலேசியா என்னும் முகவரிக்கு அனுப்பலாம்.

உலகத் தமிழ் மன்றம் வெளியிடவிருக்கும் ஏட்டில் உலக முழுவதிலுமுள்ள தமிழ் நிலையங்களின் பட்டியலையும் வெளியிட எண்ணியுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து வெளியாகும் தமிழ் நூல்கள், தமிழ்-தமிழர் பற்றிய பிறமொழி நூல்கள் முதலியவற்றின் பட்டியலையும் வெளியிட உலகத் தமிழ் மன்றம் விழைவதால், புது நூல்கள் வெளியிடும் அன்பர்கள் தங்கள் நூல்களின் முழு விபரங்களையும் மன்றத்துக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### எட்டியாந்தோட்டையில் நடன விழா

எட்டியாந்தோட்டைப் புனித கப்ரியேல் கல்லூரி மண்டபத்தில், கல்லூரி மாணவ மாணவிகளால் நடாத்தப்பட்ட, 'அமுத சுரபி' நாட்டியப் பெருவிருந்தொன்று நடைபெற்றது. மொத்தம் ஒன்பது நிகழ்ச்சிகளைக்கொண்ட இந்நிகழ்ச்சியைத் தயாரித்தளித்தவர் நடன ஆசிரியர், திரு. இம்புல்கொட அவர்கள். எல்லா நிகழ்ச்சிகளும் புகழக் கூடியனவாக அமைந்தன எனினும், கண்ணன்-ராதை நடனத்தில் ராதையின் பாகமேற்ற, மறைந்த காங்கிரஸ் தலைவர், திரு. கே. ஜி. எஸ். நாயரின் மகள், செல்வி, சந்திரா-சாவித்திரி யாவரது பாராட்டையும் பெற்றார். கல்லூரியின் கட்டிட நிதிக்காக நடைபெற்ற இந்நாட்டிய விருந்தில் ஒளியமைப்பு மெச்சக் கூடியதாக அமைந்தது.

### நாவலர் தின கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

இருபாலை சைவ பரிபாலன (கோப்பாய்) சபை நடாத்திய கட்டுரைப்போட்டி 7-12-63 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை கந்தவேள் சைவ வித்தியாசாலையிலும், பேச்சுப் போட்டி அன்று மாலை கோப்பாய் தெற்கு கற்பகப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் உயர் திரு. சே. பி. அரன் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.

நாவலர் தின பேச்சு, கட்டுரைப் போட்டி முடிவுகள் பின் வருமாறு:

கட்டுரைப் போட்டி: மேற் பிரிவு: 1. கு. ஜெயபாலன் 2. தி. ஜெயகுமாரன், 3. தி. தியாக சொரூபிணி. மத்திய பிரிவு. 1. சு. செல்வராணி, 2. தி. செல்விகாரணி, 3. த. ஸ்ரீகந்தராசா. கீழ்ப் பிரிவு: 1. இ. ஜெகதீஸ்வரி, 2. சு. நித்தியானந்தம், 3. பொ. வசந்த கௌரி. பாலர் கீழ்ப் பிரிவு: 1. செ. கனகேஸ்வரி, 2. வே. வரதலட்சுமி, 3. சி. கனகலிங்கம். பேச்சுப் போட்டி: மேற் பிரிவு: 1. தி. ஜெயகுமாரன், 2. கு. ஜெயபாலன் 3. சி. தையல் நாயகி மத்திய பிரிவு: 1. க. கெந்தீஸ்வரன், 2. க. ரவீந்திரகுமாரன், 3. தி. மீனலோசனி, பொ. [illegible]ராசா. கீழ்ப்பிரிவு: 1. க. [illegible]குணராணி, 2. இ. மகேஸ்வரி, 3. வே. விஜயலட்சுமி.

### மூதூர் மாதாசபைகளின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

அமலோற்பவ திருநாளன்று(8-12-63) மூதூர் மாதா சபைகளின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது 7-ந் திகதி இரவு 6.00 மணிக்கு வேஸ்பர் ஆராதனையும், 8-12-63 காலை 6-30 மணிக்கு பாடற் பூசையும் அமலோற்பவ மாதா சபையாரின் பெயரால் கொண்டாடப்பட்டது.

பிற்பகல் 4-மணியளவில் ஆண்கள் அமலோற்பவ மாதா சபையார், இளம் பெண்கள் மோட்ச ஆரோகன மாதா சபையார், பெண்கள் மோட்ச இராக்கினி மாதா சபையார், வாலிபர் மங்களவார்த்தை மாதா சபையார் ஒன்று கூடி வருடாந்தப் பொதுக் கூட்டம் நடத்தினர். பாது காவலரின் ஆரம்ப உரையுடன், ஒவ்வோர் சபையாருடையதும் வருடாந்த அறிக்கை [illegible] அங்கீகரிக்கப்பட்டன. இரகசிய வாக்குமூலம் தெரியப்பட்ட 1964-ம் ஆண்டுக்குரிய செயற் குழு உறுப்பினரின் பெயர்கள் போஷகர் அவர்களால் வெளியிடப்பட்டன.

ஆண்கள் அமலோற்பவ மாதா சபையாரின் தலைவர்: திரு. ம. ஸ்ரனிஸ்லாஸ், செயலாளர். திரு. க. செ. பாய்வ, உப செயலாளர் திரு. சா. அ. குரூஸ், பொருளாளர்: திரு. க. அ. ரேச்டிவாஸ், செயற் குழு உறுப்பினர்: திரு. அ. அ. குரூஸ்.

இளம் பெண்கள் மோட்ச ஆரோகன மாதா சபையாரின் தலைவி: செல்வி செ. பரமேஸ்வரி, பாய்வ, உப தலைவி செல்வி தெரேஸ் சவரிராஜா, செயலாளர்: செல்வி யே. இராசமகேஸ்வரி பெர்னாண்டோ, உப செயலாளர்: அ. ஜெயசுந்தரி குரூஸ், தனாதிகாரி: செல்வி அ. இராசேஸ்வரி பாய்வ, செயற்குழு உறுப்பினர்கள்: செல்விகள்: செ. ஞானேஸ்வரி பாய்வ, யோஸ்பின் சவரிராஜா.

பெண்கள் மோட்ச இராக்கினி மாதா சபையாரின் தலைவி திருமதி பிரான்சிஸ் காபிரியான் பெர்னாண்டோ. உப தலைவி திருமதி பீலிக்ஸ் அ. பாய்வ, செயலாளர்: திருமதி மேரி மலர் ஸ்ரலிஸ்லாஸ், உப செயலாளர்: திருமதி நீற்று அருள்வேததாசன் குரூஸ், பொருளாளர்: திருமதி விக்ரோரியா தோமாஸ் கொறெய்ரா, செயற்குழு உறுப்பினர்: திருமதிகள் எலிசபேத் செபஸ்தியான் பாய்வ, கர்லினா அந்தோனி பெர்னாண்டோ.

வாலிபர் மங்களவார்த்தை மாதா சபையாரின் தலைவர் செல்வன் தீ. ஜோனாஸ் பெர்னாண்டோ, செயலாளர் செல்வன் யே. ஜீவரெட்னம் பெர்னாண்டோ, உபசெயலாளர்: திரு. பி. பாக்கியநாதன், மஸ்கறிஞாஸ் பொருளாளர்: செல்வன் எஸ். அல்பிரட் இம்மனுவேல், செயற்குழு உறுப்பினர்: ச. டி. சேவியர்.

"அமல உற்சவம்" என்ற விடயம் பற்றி திரு. ஏ. எலி. பெர்னாண்டோ அவர்கள் ஒரு தெளிவுரையாற்றினார். திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் மாதாவின் பேரில் இனிமையான ஓர் விருத்தம் பாடினார். இதையடுத்து தேநீர் விருந்தளிக்கப்பட்டது. இளம் பெண்கள் மாதா சபையார் சிற்றுண்டி வேளையில் இனிய கீதங்கள் பாடி சபையோரை மகிழ்வித்தனர். தலைவர் திரு. க. செ. பாய்வ அவர்கள் நன்றியுரை கூறினார். ஈற்றில் வண. போஷகரின் ஆசிருடன் கூட்டம் இனிதே கலைந்தது.

### விண்ணக யாத்திரை

'வானுக்கும் பூமிக்கும் எவ் எவ்வித தொடர்புமில்லை. வானுலகம் வேறு, பூவுலகம் வேறு. மண்ணில் வாழ்பவர்கள் மானிடர், விண்ணில் வாழ்பவர் மாற்றுக் குலம். இது அகிலம் பூராவும் பரவியிருந்த ஒரு பொது அபிப்பிராயம். இதை ஆணித்தரமாக எதிர்த்து மண்ணும்-விண்ணும் மனித இனத்துக்காகவே உருவாக்கப்பட்டன. அவை மானிட சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தியாக்கும் பொருட்டே நிலைபெற்றன என்று விளக்கி, பூவுலகில் மக்கள் வாழ்வது போல், மேலுலகிலும் வாழலாம் என்பதைச் செயல் ரூபமாக எடுத்துக் காட்டியதே ரஜப் மாதம் பிறை 27-ல் நிகழ்ந்த மிஃராஜ் எனும் நாயகம் (ஸல்) அவர்களின் விண்ணக யாத்திரை.

அகிலத்துக்கு ஆதியிலே விஞ்ஞானத்தைப் புகட்டிய நாம் இன்று, அந்த யுகத்துக்கே இலக்காகாதவர் போல் இருந்து வருகிறோம். இந் நிலை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஆய கலைகள்-துறைகள் எத்துறையிலும் மேம்பட்டவர்களாக, அன்று நிகழ்ந்தது போல் இனியும் நிகழ வேண்டும் என்று எமக்கு அறிவுறுத்து முகமாகவும்-ஊக்குவிக்குமுகமாகவுமே இன்று இந்த நன்னாளை உலக முஸ்லிம்கள் அனைவரும், கொண்டாடுகின்றனர். ஆகவே இலங்கை இஸ்லாமியர்களான நாமும் நமது நிலையுணர்ந்து-அவற்றைச் சீர்படுத்து முகமாகச் செயல்பட வேண்டும். அதற்காக இன்றே நாம் யாவரும் நமது பண்டைய புகழுக் கொப்ப நிலையை அடையத் திட சங்கற்பம் கொள்ளவேண்டும்.'

இவ்வாறு இஸ்லாமிய முன்னேற்றக் கழக செயலாளர் பரீத் ஏ. சௌகத் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழக நிர்வாக மாற்றம்

மேற்படி கழகத்தின் 1964-ம் ஆண்டின் நிர்வாக சபை மாற்றப் பொதுக் கூட்டம் 8-12-63ல் சம்மாந்துறை மேற்கு அ. மு. க. பாடசாலை மண்டபத்தில் ஜனாப், ஏ. எச். எம். அப்துல்லா அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: எம். இஸட். கமால் முகம்மது காரியப்பர், செயலாளர். யூ. செயின், பொருளாளர்: பி. கலந்தர் லெவ்வை, துணைத் தலைவர்: எஸ். எஸ். மணிஃம்; துணைச் செயலாளர்: ஏ. மகுமூது லெவ்வை, மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்களாக ஜனாப்களான, எம். இஸட். எம். பஸீல் காரியப்பர், எஸ். எஸ். ஏ. ருசீக், எம். எம். இஸ்மாயீல், எம். ஏ. இஸ்மாயீல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி கழகம், கொலையுண்டு மரணமடைந்த ஜனாப், எம். ஏ. ஏ. றசீது அவர்களுக்கு அர்ப்பணிக்குமுகமாக 'அறவழிக் கீதம்' புத்தகமொன்றை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதன் வெளியீட்டு விழா விரைவில் நடைபெறுமெனத் தெரிகிறது. இவ் வறவழிக் கீதம் புத்தகத்தின் தொகுப்பாசிரியர் ஜனாப் எம். ஐ. எல். பக்கீர்த்தம்பி என்பது குறிப்பிடத்தக்கது.

### பெற்றோர்-ஆசிரியர் சங்கம்

எட்டியாந்தோட்டைப் புனித கபிரியேல் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் முதலாம் ஆண்டுப் பொதுக் கூட்டம், அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கீழ்க் காணுவோர் அடுத்த ஆண்டின் உத்தியோகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. ஜே. பிரிம். ரொட்ரிகோ, அதிபர், தலைவர். திருவாளர்கள் டி. எம். டி. சில்வா, பீ. எஸ். வீ. நாயுடு, சார்ள்ஸ் சமரசிங்க. உப தலைவர்கள் திருவாளர்கள், ஏ. பி. வி. கோமஸ், பீ. கே. டயஸ். துணைச் செயலாளர்கள். திரு. பி. வி. விலியம்ஸ் சிங்கோ, பொருளாளர்: கீழ்க் காணும செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. திருவாளர்கள் எச். எம். பி. பருசல்வ, என். எம். ஆர். த. ரமவர்தன, பி. ஜீ. வில்லியம் சிங்கோ, எல். எல். ஏ. அப்புஹாமி, எம். வி. சுப்பையா, ஜே. வி. நாயகம், ஏ. எஸ். ஷப்பீக், ஆர். சரவணமுத்து, ஆர். ஏ. ஜெயவர்தன, எம். ஏ. ஜே. பி. சிரிவர்தன, வி. ஏ. பொரலுவ, எம். ஈ. டீ. குமாரகம, ஜயரத்ன ஜயக்கொடி, வில்லியம் சில்வா, கே. குலரத்ன ஆகியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமஹாலில்

## இப்பொழுது 9-வது வாரம்!

ஆனந்தன் - ஈ. வி. சரோஜா - அசோகன் - சரஸ்வதி
நடிக்கும்

# வீரத் திருமகன்

அத்துடன்: ஜனாதிபதி கென்னடியின் மரணமும், ஊர்வலமும்

கெபிட்டில்

## மகத்தான 6-வது வாரம்!

ஜெமினி கணேசன் - சாவித்திரி - கமலா லக்ஷ்மண் - மனோகர்
நடிக்கும்

# கொஞ்சும் சலங்கை

(பலவர்ணம்)

## எதிர்பாருங்கள்!

எம். ஜி. ராமச்சந்திரன், எம். என். நம்பியார்,
பி. எஸ். வீரப்பா, எஸ். ஏ. நடராஜன், பி. பானுமதி,
ராஜ்ஸ்ரீ, ஸி. கே. சரஸ்வதி, ஸி. டி. ராஜகாந்தம்.
நடித்த



# கலை அரசி



## டிசம்பர் 25ம் திகதி புதன்கிழமை முதல்

## ஆவலோடு எதிர்பார்த்த அற்புதப் படைப்பு!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கும்பனித்தெரு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) — மொடர்ன் (பதுளை)

திரை உலகில் ஓர் புதுமைச் சித்திரம்! உணர்ச்சிப் பின்னலில் பிறந்த புரட்சிப் படம்!!
தேனினும் இனிய பாடல்கள்! கருத்தாழமுள்ள வசனம்!
மெய் சிலிர்க்க வைக்கும் நடிப்பு!! இவையனைத்தும் நிறைந்த.........

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்



நடிகர்கள்:
எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எஸ். வி. சுப்பையா—எம். என். நம்பியார்—எம். வி. ராஜம்மா
எஸ். ஏ. அசோகன்—ஷீலாதேவி—நாகேஷ்—லட்சுமிராஜ்யம்

தயாரிப்பு: ஜி. என். வேலுமணி — இசையமைப்பு: விஸ்வநாதன்-ராமமூர்த்தி — டைரக்ஷன்: கே. சங்கர்

மருதானை

# சென்ட்ரல்

திரையில்

## 2-வது வெற்றி வாரம்!

மயிர்க்கூச்செறியும் மகத்தான
காட்சிகளமைந்த
எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலிதேவி,
எஸ். வரலெட்சுமி, வீரப்பா, கிருஷ்ணன், மதுரம்
மற்றும் பலர் நடித்த

# சக்கரவர்த்தி திருமகள்

மீண்டும் உங்களை மகிழ்விக்க
திரைவிருந்தளிக்கிறாள்!



## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

அசோக்குமார், நந்தா,
ராஜேந்திரகுமார்,
மனமோகன் கிருஷ்ண சசிகலா
தோன்றும்

# கஜான்

இசை : சலில் சௌத்ரி

ராஜ்குமார், ராஜேந்திரகுமார்,
மீனாகுமாரி
தோன்றும்

# தில் ஏக் மந்திர்
(நெஞ்சில் ஓர் ஆலயம்)

இசை : சங்கர்-ஜெய்கிஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் டிசம்பர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.